பக்கங்கள்: இருபது

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 தை 12 திங்கட்கிழமை (25.01.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 060

## 7,21,389 பேர் வாக்களிக்கத் தகுதி

# யாழ். தேர்தல் ஏற்பாடுகள் பூர்த்தி

# 3,000 பொலிஸார் கடமையில் ஈடுபடுவர்

## கிளிநொச்சியில் 92 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படும்



யாழ்ப்பாணம், ஜனவரி 25

யாழ்.தேர்தல் மாவட்டத்திற்கு உட்பட்ட யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்புக்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியாகியுள்ளன.

தேர்தல் பணிகளில் மூவாயிரம் பொலிஸார் ஈடுபடுத்தப்படுவர். பாதுகாப்பு நிலைமையினை கவனத்தில் எடுத்து தேவை ஏற்படின் இராணுவத்தினரும் பணியில் ஈடுபடுத்தப்படுவர்.

எனினும் வாக்களிப்பு நிலையத்தில் இருந்து 500 மீற்றருக்கு அப்பாலேயே அவர்கள் பணியில் அமர்த்தப்படுவர்.

ஜனாதிபதித் தேர்தலை ஒட்டிய ஏற்பாடுகள் குறித்து விளக்கமளிக்கும் செய்தியாளர் மாநாட்டில் யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் மேற்கண்ட தகவல்களைத் தெரிவித்தார்.

தேர்தல் ஏற்பாடுகள் குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

* யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள வாக்காளர்களுக்கென 624 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. யாழ்ப்பாணத்தில் 529 நிலையங்களும், கிளிநொச்சியில் 92 நிலையங்களும் அமைக்கப்படும்.

* யாழ்ப்பாண மாவட்டத்தில் 6லட்சத்து 30ஆயிரத்து 548 வாக்காளர்களும் கிளிநொச்சி மாவட்டத்தில் 90ஆயிரத்து 811 வாக்காளர்களுமாக 7லட்சத்து 21ஆயிரத்து 389 வாக்காளர்கள் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

*வலி. வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்தில் கொத்தணி வாக்களிப்பு நிலையமாக

(20ஆம் பக்கம் பார்க்க)

## வெளிநாடுகளுக்குச் சென்றோரின் வாக்குகளை தவறான வழியில் போடுவதற்குத் திட்டம்

### தேர்தல் ஆணையாளர் முன்னெச்சரிக்கை

கொழும்பு, ஜன.25

வெளிநாடுகளுக்குச் சென்றோரின் பெயர்கள், ஊர்களைப் பெற்று போலியான அடையாள அட்டைகளையும் செய்து ஜனாதிபதித் தேர்தலன்று அவர்களது வாக்குகளைப் போடும் வகையில் திட்டமொன்று செயற்படுத்த இருப்பதாக தகவல்கள் கிடைத்துள்ளன என்று தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க அறிவித்துள்ளார்.

எனவே வெளிநாட்டுக்குச் சென்றுள்ளதாக அறிவிக்கப்பட்ட வாக்காளர்கள் வாக்களிக்க வாக்குச் சாவடிக்கு வரும் வேளை

(20ஆம் பக்கம் பார்க்க)

## வாக்கு மோசடிகளைத் தடுப்பதற்கு தேர்தல் ஆணையாளர் புதிய யுக்தி!

கொழும்பு, ஜன. 25

நாளை நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வாக்கு மோசடிகளை தடுக்க, தேர்தல்கள் ஆணையாளர் சில வழிமுறைகளை கையாள இருக்கிறார் எனத் தேர்தல்கள் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஏற்கனவே விசேட குறியீடுகளை பயன்படுத்துவதன் மூலம் வாக்கு மோசடிகளை தடுக்கும் வழிகள் குறித்து அவர் கடந்த வெள்ளிக்கிழமை செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில் பொலிஸ் தரப்பினர் வாக்கு மோசடிகளை தடுப்பர் என்ற நம்பிக்கையை அவர் இழந்துள்ளார் எனவும் இந்நியில் தமது யுக்திகளை வெளிப்படுத்தாது அவற்றை நாளை தேர்தல் அதிகாரிகளிடம் அவர் தெரியப்படுத்துவார் எனவும் தேர்தல்கள் திணைக்களத் தரப்புகள் தெரிவித்துள்ளன.

நாட்டில் தற்காலிக அடையாள அட்டைகள், தேர்தல் வாக்களிப்புகளுக்காக விநியோகிக்கப்பட்டுள்ள நிலையில் சுமார் 50 வகையான சட்டவிரோத அடையாள அட்டைகள் புழக்கத்தில் இருக்கின்றன எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில் பல்வேறு முறைகளை கையாண்டு தேர்தல் வாக்கு மோசடிகளை முறியடிக்க தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க உத்தேசித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (அ-சி)

## ஆட்சியைத் தக்க வைப்பதற்கு அரசு சதி செய்வதாக ரணில் விக்கிரமசிங்க குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 25

நாளை இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் அரசுக்கு எதிராக மக்கள் வழங்கப்போகும் தீர்ப்புக்கு மாறாக ஆட்சியைத் தொடர்ந்தும் தக்கவைத்துக்கொள்ளும் நோக்கோடு அரசுத் தரப்பு பாரிய சதி நடவடிக்கையில் இறங்கியுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுக் குற்றம் சுமத்தினார்.

இதற்கு ஏற்ப கொழும்புக்கு ஆயுதக் குழுக்கள் அழைத்துவரப்பட்டுள்ளதோடு, பதினைந்து கவச வாகனங்களும் கொண்டுவரப்பட்டுள்ளன என்றும் அவர் சொன்னார்.

எதிரணியின் பொது வேட்பாளர் சரத் பொன்சேகாவின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே

(19ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் முடிவுகளை உடன் வெளியிடும் உரிமை அனுமதி பெற்ற ஊடகங்களுக்கே

கொழும்பு, ஜன. 25

தேர்தல் திணைக்களத்தில் அனுமதி பெற்ற இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களுக்கு மாத்திரமே தேர்தல் முடிவுகளை உடன் வெளியிட முடியும் என தேர்தல் ஆணையாளர் செயலகம் தெரிவித்துள்ளது. இதுவரை 17 ஊடகங்கள் இதற்கான அனுமதிகளை பெற்றுக்கொண்டுள்ளன எனத் தேர்தல் திணைக்களத்தின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

அனுமதி பெற்ற ஊடக நிறுவனங்கள் வேறு ஊடகங்களுக்கு தேர்தல் முடிவுகளை வழங்கினால் சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கான அனுமதி ரத்துச் செய்யப்படும். தவறான தேர்தல் முடிவுகள் ஊடகங்களில் வெளியிடப்படுவதை தடுக்கும் நோக்கில் தேர்தல் ஆணையாளர் இந்த

(20ஆம் பக்கம் பார்க்க)

## வடமாகாணத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் உடனடியாக இடமாற்றம்

கொழும்பு, ஜன். 25

வடமாகாணத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிமால் லிவ்ஹே உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பொலிஸ் தலைமையகத்திற்கு இடமாற்றப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான பொலிஸ் மா அதிபரின் பணிப்புரைக் கடிதம் நேற்றுமாலை தமக்கு கிடைத்தது என நிமால் லிவ்ஹே தெரிவித்தார்.

இவர் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கு பொறுப்பான பொலிஸ் உயர் அதிகாரியாக செயற்பட்டு வந்தார்.

இந்தநிலையில் இவர் இன்று காலை முதல் பொலிஸ் தலைமையகத்தின் கடமைகளை பொறுப்பேற்குமாறு பொலிஸ் மா அதிபரால் பணிக்கப்பட்டுள்ளார். எனி

(20ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகாவின் ஆதரவு பொன்சேகாவுக்கு; ஹொரகொல்லை இல்லத்தில் நேற்றுச் சந்திப்பு

கொழும்பு, ஜன.25

எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா, நேற்று ஹொரகொல்லையில் உள்ள முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் இல்லத்துக்கு விஜயம் செய்து, அவரைச் சந்தித்துக் கலந்துரையாடி, இந்த ஜனாதிபதித் தேர்தலில் அவரின் ஆதரவைத் தமக்குப் பெற்றுக்கொண்டார்.

இந்தச் சந்திப்பின் பின்னர், ஜெனரல் பொன்சேகாவைத் தாம் ஆதரிக்கின்றார் என சந்திரிகா குமாரதுங்க குறிப்பிட்டார்.

சந்திப்பு முடிவுற்ற பின்னர் முன்னாள் ஜனாதிபதி குமாரதுங்க செய்தியாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் தனது அரசியல் நிலைப்பாட்டைப் பகிரங்கமாக அறிவித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியின் கீழ் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஜனநாயக விரோதப் பாதையில் கொண்டு

(19ஆம் பக்கம் பார்க்க)

## தெல்லிப்பழை புனர்வாழ்வு நிலையத்திலிருந்து 20இளைஞர், யுவதிகள் நேற்று விடுவிப்பு

வலி.வடக்கு, ஜன.25

தெல்லிப்பழைப் புனர்வாழ்வு நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 20 பேர் நேற்றுத் தமது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கடந்த 2009ஆம் ஆண்டு படையினரால் கைதுசெய்யப்பட்ட இவர்கள், புனர்வாழ்வுக்காகத் தெல்லிப்பழைப் புனர்

(20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





வலி.வடக்கில் இடம்பெயர்ந்த மக்களில் ஒரு தொகுதியினரை நேற்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா காங்கேசன்துறை வெளிச்சவீடுவரை அழைத்துச் சென்றவேளை, அமைச்சர் படை அதிகாரிக்கு கைலாகு கொடுத்து வரவேற்பதையும், பிரதேச செயலகத்தில் படை அதிகாரிகளுடன் அமைச்சர் மக்கள் குடியமர்ந்தப்படவுள்ள பகுதிகள் குறித்த வரைபடத்தைப் பார்வையிடுவதையும் உயர் பாதுகாப்பு வலயப் பகுதிக்குச் செல்ல காத்திருக்கும் மக்களுடன் அமைச்சர் டக்ளஸ் கலந்துரையாடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

### உயர் பாதுகாப்பு வலயத்தில் மீள் குடியமர்வு

# காங்கேசன்துறை வெளிச்ச வீடு வரை டக்ளஸுடன் பஸ்களில் சென்றனர் மக்கள்

வலி.வடக்கு, ஜன.25

வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள சில பகுதிகளுக்கு நேற்று சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஐந்து பஸ்கள் மூலம் பொதுமக்களை அழைத்துச் சென்றார். அவர்கள் காங்கேசன்துறை வெளிச்சவீடு வரையும் சென்று திரும்பினர்.

காலையில் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் கூடிய மக்களுடன் டக்ளஸ் தேவானந்தா கலந்துரையாடலை நடத்தினார்.

ஏற்கனவே மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் பகுதியிலும் காங்கேசன்துறை வீதியின் மேற்குப்புறமாகவும் மக்கள் குடியேறவும், சென்றுவரவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நேற்று முதல் மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலில் இருந்து காங்கேசன்துறை வீதி வழியாக வெளிச்சவீடு வரைக்கும் செல்வதற்கும் வீதியின் மேற்குப் புறம் செல்லவும் அனுமதிக்கப்படுவர் என்றும் -

இதே போன்று வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் வரைக்கும் தெல்லிப்பழை வைத்தியசாலையில் இருந்து 300மீற்றர் தூரத்திற்கும், மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலில் இருந்து கிழக்குப் புறமாக 300மீற்றர் தூரத்திற்கும் செல்ல அனுமதிக்கப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தையிட்டி, மயிலிட்டி, பலாலி போன்ற பகுதிகளுக்கு உடனடியாகச் செல்வதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படவில்லை என்றும் இப்பகுதி மக்களை ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்ததும் உரிய இடங்களில் மீளக்குடியேறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் டக்ளஸ் குறிப்பிட்டார்.

நேற்று பஸ்களில் மக்கள் பிரதான வீதிகள் வழியாக அழைத்துச் செல்லப்பட்டு அதே வழியாக திரும்பி வந்தனர்.

மிதிவெடிகள், கண்ணிவெடிகள் இருக்கக்கூடும் எனக்கருதி மக்கள் பிரதான வீதியை விட்டு உள் ஒழுங்கைகளில் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

பாதுகாப்புப் படையினரின் உதவியுடன் ஒழுங்கைகள் துப்புரவு செய்யப்பட்டு மக்கள் குறிப்பிட்ட இடங்களுக்குச் செல்வதற்கு அனுமதிக்கப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-86)

## சொரூபம் திறந்து வைப்பு

வடமராட்சி, ஜன. 25

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பருத்தித்துறை புனித தோமையர் தேவாலயத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதி சொரூபம் அபிஷேகம் செய்யப்பட்டு பொதுமக்களின் வழிபாடுகளுக்காக அது திறக்கப்படவுள்ளது.

யாழ்.ஆயர் பேருட் திரு. தோமஸ்சவுந்தரநாயகம் ஆண்டகை சொரூபத்தை அபிஷேகம் செய்து, விசேட பூஜை நடத்தி வழிபாடுகளை ஆரம்பித்துவைப்பார்.

நூற்றாண்டு பழமை, வாய்ந்த இத்தேவாலயத்தை சுமார் இரண்டு கோடி ரூபா செலவில் புதிதாகக்கட்டப்பட்டு புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது. இத்தேவாலயம் புத்துயிர்பெற தேவாலய பங்கு மக்களும், புலம்பெயர்ந்தோரும், யாழ்.கத்தோலிக்க திருச்சபையும் பேருதவி புரிந்ததாக பங்கின் செயலாளர் வின்சன் டிபோல் தெரிவித்தார். (1-236)

## வசந்தம் ரி.வியில் இன்று இரவு....

யாழ்ப்பாணம், ஜன.25

கடந்த 20ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற 'வடக்கின் வசந்தம்' கலாசார நிகழ்வுக ளின் தொகுப்பு இன்று இரவு 9.30மணிக்கு வசந்தம் தொலைக்காட்சிச் சேவையில் ஒளிபரப்பப்படவிருக்கிறது. (ஒ-1)

கட்டுரையின் தொடர்ச்சி 8 ஆம் பக்கத்தில்

''இளைய சமுதாயத்தில் இன்றைய முக்கிய தேவை முறையான வழிகாட்டல் ஆலோசனை'' என்ற தலைப்பில் 11 ஆம் பக்கத்தில் வெளியாகியுள்ள கட்டுரையின் தொடர்ச்சி 8 ஆம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ளது என்பதை வாசகர்கள் கவனத்தில் கொள்ளவும்.

# எதிரணித் தலைவர்களின் வீடுகளுக்கு அருகில் இராணுவப் பிரிவுகளை நிறுத்தத் திட்டமாம்

### அரசுத் தரப்பின் தந்திரோபாயம் குறித்து மங்கள சமரவீர தகவல்

கொழும்பு, ஜன. 25

எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர் சரத் பொன்சேகா எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க மற்றும் ஏனைய எதிர்க்கட்சித் தலைவர்களின் வீடுகள், அலுவலகங்களுக்கு அருகில் விசேட இராணுவப் பிரிவை நிறுத்துவதற்கு பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார் என்று மங்கள சமரவீர எம்.பி. நேற்றுக் கூறினார்.

சரத் பொன்சேகாவின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் இதுதொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

இரண்டு நாள்களுக்கு முன் பாதுகாப்புச் சபை கூடியது. அதில் ஜனாதிபதி, கோத்தபாய ராஜபக்ஷ, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, படை அதிகாரிகள் மற்றும் பொலிஸ் மா அதிபர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அந்தக் கூட்டத்தில் நாட்டின் பாதுகாப்புப் பற்றிக் கலந்துரையாடப்படவில்லை. தேர்தல் மோசடிக்கு வழிசமைப்பது தொடர்பாகவே கலந்தாலோசிக்கப்பட்டது.

அதன்படி சரத் பொன்சேகாவின் கொழும்பு அலுவலகம், வீடு, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் வீடு மற்றும் ஏனைய எதிர்க்கட்சித் தலைவர்களின் வீடுகள் ஆகியவற்றிற்கு அருகில் விசேட இராணுவப் பிரிவுகளை நிறுத்த கோத்தபாய அந்தக் கூட்டத்தில் தீர்மானம் எடுத்தார்.

பொலிஸ் மற்றும் முப்படை ஆகியவற்றில் இருந்து எமக்கு இவ்வாறான நம்பத்தகுந்த தகவல்கள் கிடைத்திருக்கின்றன. பொலிஸாருக்கும் படையினருக்கும் அரசு விடுக்கும் பிழையான உத்தரவை நிராகரிக்கப் பொலிஸாரும் படையினரும் முடிவெடுத்துவிட்டனர்.

நாம் எல்லாவற்றிற்கும் முகங்கொடுக்கத் தயார். வன்முறைகளுக்கு எதிராக நாம் துணிவுடன் போராடுவோம். மக்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் அரசின் தவறான செயற்பாட்டை அனுமதிக்க மாட்டார்கள்.

26 ஆம் திகதி இந்நாட்டு மக்கள் வழங்கும் தீர்ப்புக்கு எதிராக ஆட்சியைத் தொடர்ந்தும் தக்கவைத்துக் கொள்ளும் மஹிந்தவின் சதியை நாம் நிச்சயம் முறியடிப்போம் - என்றார். (அ-சி)

## கிறிஸ்த சேவ ஆச்சிரமம்

மருதனார்மடம்



அருட்பணி சேவக் சாம் அண்ணன் அவர்களின் வாழ்வுக்கும் திருப்பணிக்கும் நன்றி செலுத்தும் தூய நற்கருணைத் திருவழிபாடு நாளை (26.01.2010) செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்கு ஆச்சிரம ஆலயத்தில் நடைபெறும். இவ் வழிபாட்டிற்கு உங்கள் யாவரையும் அன்போடு அழைக்கின்றோம். ஆச்சிரமத்து நண்பர்களே, தொண்டர்களே, விசுவாச உறவுகளே இவ் வழிபாட்டில் கலந்துகொண்டு கடவுளுக்கு நன்றி செலுத்த உங்கள் யாவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

ஆச்சிரமப் பணியில் அருட் சகோதரன் செ.யோ.லக்சன்

### சமுர்த்தி, உலக உணவுத் திட்ட

# நிவாரணம் பெறுபவர்களின் சேவையுடன் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள்

வடமராட்சி, ஜன.25

வடமராட்சிப் பிரதேசத்தில் டெங்கு நோய் பரவாமல் தடுப்பதற்கும் அதனை முற்றாக ஒழிக்கவும் எடுத்து வரப்படும் நடவடிக்கையின் ஓரம்சமாக உலக உணவுத் திட்டத்தின் நிவாரணம், சமுர்த்தி நிவாரணங்களைப் பெறுவோரின் சேவைகள் பயன்படுத்தப்பட்டுவருகின்றன.

இப் பிரதேசத்தில் கிராமங்கள் தோறும் இருக்கின்ற பொது வீதிகள், கோவில்கள், பொதுநிறுவனங்கள் என்பனவற்றின் சுற்றுச்சூழல்களில் உள்ள புதர்கள், பற்றைகள் என்பன வெட்டி அழிக்கப்பட்டு, கூட்டித்துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன. அத்துடன் டெங்கு நோயைப்பரப்பும் குடம்பிகள் பெருகும் இடங்கள் கண்டறியப்பட்டு துப்பரவு செய்யப்படுகின்றன.

ஒவ்வொரு கிராமங்களுக்கும் பொறுப்பான பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களின் வழிகாட்டலில் கிராமசேவையாளர்களின் ஏற்பாட்டில் குறிப்பிட்ட நிவாரணங்களைப் பெற்றுவரும் ஆண்கள், பெண்கள் ஒன்றிணைந்து தினமும் காலை, மாலை வேளைகளில் துப்புரவு பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள். (ஒ-236)

## வேலையாள்கள் தேவை

மேசன், கூலி வேலையாள்கள் தேவை சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்

லிங்கேஸ் கட்டட ஒப்பந்தகாரர்கள்,
பருத்தித்துறை வீதி,
கட்டைப்பிராய்.
T.P:0779749345, 0213213955

## நயினையில் தைப்பூசம் காண வாரீர்



எதிர்வரும் 30.01.2010 சனிக்கிழமை பகல் விசேட பூசை, அபிஷேகங்களின் பின்னர் அம்பாள் திருமஞ்சத்தில் திருவீதி உலாவரும் அற்புதக் காட்சியைக் காணவாரீர். வழமைபோல் ஏற்பாடுகள் யாவும் செய்யப்பட்டுள்ளன. ஏடு தொடக்குதல், அன்னப் பிரசாதனம், கர்ண வேதனம் ஆகியனவும் அன்றைய தினம் நடைபெறும் என்பதனையும் அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.

அறங்காவலர் சபை.

(94692)

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை



கலாநிதி சைவப் புலவர்

வல்லிபுரம் கந்தசாமி

(முன்னாள் உப அதிபர், பெரியபுலம் மகாவித்தியாலயம், சைவ பரிபாலன சபையின் முன்னாள் கௌரவ பரீட்சை செயலாளரும், தலைவரும்)

அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இரங்கல் நிகழ்வும் இன்று 125, அரசடி வீதி, கந்தர்மடத்தில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் பிற்பகல்4மணி தொடக்கம் 6மணி வரை நடைபெறவுள்ளன. இந் நிகழ்வில் அனைவரையும் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

125, அரசடி வீதி,
கந்தர்மடம்.

வி.ஸ்ரீவிஜயானந்தன்
(மருமகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# அதிகாரம், பதவி மீதான ஆசையே தேர்தல் குளறுபடிகளுக்குக் காரணம்

இலங்கையின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான ஆறாவது தேர்தல் நாடு முழுவதிலும் நாளை நடைபெறவிருக்கின்றது.

இலங்கையில் சர்வஜன வாக்குரிமை முறைமை நடைமுறைக்கு வந்து இந்த 78 ஆண்டுகால வரலாற்றில் இத்துணை வன்முறையும், குழப்பங்களும், குளறுபடிகளும், அதிகாரத் துஷ்பிரயோகங்களும் இடம்பெற்ற தேர்தல் எதுவுமில்லை என்ற சிறப்பு மகுடத்தோடு இந்தத் தேர்தல் நாடகம் இப்போது இறுதிக் கட்டத்துக்கு வந்திருக்கின்றது.

தேர்தல் பிரசாரங்கள் நேற்று முன்தினம் இரவுடன் ஓய்வுக்கு வந்தன. நாளை வாக்களிப்பு. நாளை மறுதினம் காலையில் இலங்கையின் அடுத்த ஜனாதிபதி யார் என்பது பெரும்பாலும் தெளிவாகிவிடும்.

வாக்களிப்பு மற்றும் வாக்குகளை எண்ணுதல் ஆகியவற்றுக்கான ஏற்பாடுகள் எல்லாம் பூர்த்தியாகி விட்டன.

எனினும், இதுவரை பிரசார காலத்தில் இடம்பெற்று வந்துள்ள வன்முறைகள், இரு பிரதான வேட்பாளர்களிடையேயும் நிலவும் கடும் போட்டி, இரு தரப்புகளுமே வெளிப்படுத்திப் பிரதிபலித்து வரும் துவேஷ - விரோதக் கருத்துக்கள் என்பவற்றை நோக்கும்போது, தேர்தல் பிரசாரம் மட்டுமல்லாமல், வாக்களிப்பும் கூட சரித்திரத்தில் முன்னெப்போதும் இல்லாத வகையில் மிக மோசமான வன்முறைகள் நிறைந்ததாக இம்முறை அமையும் என்றே தோன்றுகின்றது.

முதல் தடவையாகத் தேர்தலை நடத்துவதற்கு தனித்தும் விசேடமாகவும் சிறப்பு அதிகாரங்களைக் கொண்டிருக்கும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகமே தமது உத்தரவுகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதை வெளிப்படையாக ஒப்புக்கொண்டு விசனிக்கும் நிலைமை இந்தத் தேர்தலின்போது ஏற்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அது மாத்திரமல்ல. தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்தின் உத்தரவுகளைக் கடைப்பிடிக்கும்படி நாட்டின் உச்ச நீதி, நியாயாதிக்கமுடைய உயர்நீதிமன்றம் விடுத்த உத்தரவே கிடப்பில் போடப்பட்டு விட்டதாக மக்கள் உணரும் நிலைமை.

தேர்தல் பிரசாரம் தொடர்பில் அரச சொத்துக்கள், அரச கட்டமைப்புகள், அரச ஊழியர்கள் என்று சகல தரப்புகளும், வசதிகளும் ஒரு பக்கச் சார்பாகத் துஷ்பிரயோகம் செய்யப்படுவது அப்பட்டமாக - துலாம்பரமாக - வெளிப்பட்டு நிற்கின்றது.

அரச ஊடகங்களோ ஆளும் தரப்பு வேட்பாளரை மட்டும் பிரசாரப் படுத்தும் அவரது முழு ஊதுகுழல்களாகி விட்டன என்பது வெளிப்படையான உண்மை.

குறுகச் சொல்வதானால், எப்படி எப்படியெல்லாம் தேர்தல்கள் நடத்தப்படக்கூடாதோ, எவையெவை எல்லாம் நீதி, நியாயமான தேர்தல்களுக்கு மாறானவையோ அவை எல்லாம் அப்படி அப்படியே இங்கு - இத் தேசத்தில் - எந்தவிதக் கட்டுப்பாடும் இன்றி அரங்கேறுவதுதான் நாட்டின் பெரும் துரதிஷ்டமாகும்.

தேசியப் பத்திரிகைகளின் பெயரைப் பயன்படுத்தியே அநாமதேய துண்டுப் பிரசுரங்களை அச்சிட்டு, மக்களைத் தவறாக வழிநடத்தி, அதன்மூலம் வாக்குத் தேடும் அளவுக்கு சில தரப்புகள் தாழ்ந்து போயிருக்கின்றமை மிகவும் வெட்கக்கேடான விடயமாகும்.

இவ்வாறு பொய், புரட்டு, ஊழல், துஷ்பிரயோகம், அடாவடி, அட்டகாசம், அத்துமீறல், பதவித் துஷ்பிரயோகம், பாதுகாப்புத் தரப்பைத் தவறாகப் பயன்படுத்தி சாதக நிலையைப் பெற்றுக்கொள்ளுதல் என்ற பல குளறுபடிகளோடு அரங்கேற்றப்படும் இத் தேர்தலை 'சபாஷ் சரியான போட்டி'என்று விதந்துரைக்கும் வகையில் சவாலாக எதிர்கொண்டு எதிர்க் கட்சிகள் களத்தில் இறங்கியிருக்கின்றமையும் கவனத்தில் கொள்ளத்தக்கது.

இந்நிலையில் இத் தேர்தல் நடவடிக்கை விடயங்களைக் கண்காணிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள உள்ளூர், வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களினால் இத் தேர்தல் குளறுபடிகளைச் சரியாக அவதானித்து உண்மைகளை வெளிப்படுத்த முடியுமா, அப்படி வெளிப்படுத்தினாலும் கூட, அநியாயம் இழைத்த தரப்புகள் தவறான முறையில் தேர்தல் லாபம் ஈட்டாமல் இருப்பதை அந்த வெளிப்படுத்தல்கள் தடுக்கும் வகையில் பயனளிக்குமா என்பவையெல்லாம் சந்தேகமே.

நீதியான - நியாயமான - சுதந்திரமான - சுயாதீனமான - தேர்தலுக்கான வாய்ப்புகள் தொலைக்கப் பட்டமையால், கொழும்புக்கான அமெரிக்கத் தூதுவர் பட்ரிஷியா புட்டனிஸ் அம்மையார் தெரிவித்தமை போல, சர்வதேச மட்டத்தில் இலங்கைக்கு இத் துறையில் கெட்ட பெயரையே அது சம்பாதித்துத் தரப் போகின்றது என்பது திண்ணம்.

பதவி மேல் ஆசையும், அதிகாரத்தில் இருப்பதற்கும், அதில் இருப்பவருடன் ஒட்டிக்கொண்டு தம் காரியங்களைச் சாதிப்பதற்கும் எண்ணுபவர்களின் ஆட்சி மோகமுமே இதற்கெல்லாம் காரணம்.

# தேர்தலை அமைதியான சூழலில் நடத்தும்படி ஐரோப்பிய ஒன்றியமும்-ஐ.நா. செயலரும் அறிவிப்பு

**'சண்டே ரைம்ஸ்' நேற்று (24.01.2010) பத்திரிகை எழுதியிருந்த அரசியல் விமரிசனத்திலிருந்து ஒரு பகுதி இது.**

ஜனாதிபதித் தேர்தல் நடந்து முடிந்ததும் தேர்தல் ஆணையாளர் பதவியைத் துறக்கப்போகிறார் என்று ஆணையாளர் திஸாநயக்க கூறியுள்ளார்- தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பிரதிநிதிகள் அடங்கிய கூட்டமென்றில் தமது நிர்வாகக் கடமைகளைச் செய்து முடித்த கையோடு தேர்தல் திணைக்களத்துக்குள் அடியெடுத்தும் வைக்கப் போவதில்லை என்று அவர் உறுதிபடக் கூறியிருக்கிறார். குறிப்பாக அரச ஊடகங்கள் தமது அறிவுறுத்தல் எதனையும் செயற்படுத்தாமல் அலட்சியம் செய்து வருகின்றனவென்று அவர் கவலை தெரிவித்தார். அதற்கு முன்னதாக அவர் விடுத்த ஒரு குறிப்புரையில் தேர்தல் தொடர்பாக தமக்குக் கிடைக்கும் எந்த ஒரு முறைப்பாட்டையும் இனி மேற்கொண்டு பொலிஸ் மா அதிபர் மஹிந்த பாலசூரியவின் கவனத்துக்கு கொண்டு வரமாட்டார் என்று அவர் கூறியிருந்தார். பொலிஸ்மா அதிபருக்கு இம்முறைப்பாடுகளைப் பாரப்படுத்துவதால் பிரயோசனம் எதுவுமே இருப்பதாகத் தமக்குத் தெரியவில்லையென்று பலரின் முன்னிலையில் பொலிஸ்மா அதிபரிடமே இதனை அவர் கூறியிருந்தார்.

பல வருடங்களுக்கு முன்பிருந்தே தாம் பதவியிலிருந்து விலகுவதற்கு உத்தேசித்திருந்தார் என்பது பதிவிலுள்ள ஒரு விடயமாகும். கடந்த முறை ஜனாதிபதித் தேர்தலையடுத்து தம்மை ஓய்வு எடுக்க அனுமதிக்குமாறு பகிரங்கமாக அவர் வேண்டுகோள் விடுத்திருந்தார். 2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்தராஜபக்ஷ வெற்றியடைந்தமையை அறிவித்ததின் பின்னர் இந்தக் கோரிக்கையை அவர் விடுத்திருந்தார்.

**தேர்தல் ஆணையாளர் எதிர்கொள்ளும் இடர்ப்பாடு**

''இப்பொழுது நான் தேர்தலை வெற்றிகரமாக நடத்திமுடித்திருக்கிறேன். அதனால் தயவுசெய்து என்னை ஓய்வு எடுத்துக்கொள்ள அனுமதியுங்கள்'' என்று அவர் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

எதுவானாலும் அவர் விடுத்துள்ள அறிக்கையும் செயற்பாடுகளும் நிலைமைகள் மிக மோசமான கட்டத்தை அடைந்துள்ளன என்பதை எடுத்துக்காட்டுகின்றன.

ஓய்வு எடுக்க வேண்டிய வயதை கடந்து நிற்கும் இந்த மனிதரிடம் 10875 நிலையங்களில் 14 மில்லியனுக்கும் மேற்பட்ட மக்கள் புதிய ஜனாதிபதியைத் தேர்தெடுக்கும் பணியில் ஈடுபடச் செய்யவேண்டிய பொறுப்பு பாரப்படுத்தப்பட்டுள்ளது. இதனை வெளிப்படைத் தன்மையோடும், நீதியாகவும், சுயாதீனமாகவும் நடத்தி முடிப்பதில் இடையூறுகள் தோன்றியிருப்பதாகவே உள்ளது. இது பாரதூரமானதொரு நிலைமையாகும்.

சுதந்திரத்திற்குப்பின்னர் இப்படியானதொரு நிலை முன்னெப்போதும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. அரச ஊடகங்களின் ஒத்துழைப்பில்லாமல் இம்முறை போல் தேர்தலை நேர்மையாகவும் சுயாதீனமாகவும் நடத்துவதற்கு சாத்தியமாய் இல்லையென்று திஸாநாயக்கவுக்கு முன்னராகப் பதவியில் இருந்த வேறு எந்தத் தேர்தல் ஆணையாளரும் முறைப்பாடு செய்திருந் தார்கள் என்று பதிவு எதுவுமிருப்பதாகத் தெரியவில்லை. ஒன்றும் செய்து கொள்ள முடியாதிருக்கிதென்றோ பதவி துறக்கப் போகிறார்களென்றோ எவரும் முறைப்பாடுகள் செய்திருந்தார் கள் என்பதும் தெரியவில்லை.

அரச ஊடகங்களைக் கண்காணிப்பதற்கென தகுதிபெற்ற அதிகாரியாக ஜயம்பதி ஹெட்டியாராச்சி தேர்தல் கமிஷனரினால் நியமிக்கப்பட்டிருந்தார். கடந்த செவ்வாய்க்கிழமை நள்ளிரவுடன் அவர் தமது கடமையை முடித்துக் கொண்டார். ஹெட்டிஆராய்ச்சியின் அறிவுறுத்தல்களுக்கு அரச ஊடகத்துறையினர் செவிமடுக்கிறார்களில்லையென்று ஆணையாளர் கவலை தெரிவித்திருந்தார். இன்னும் மோசமென்னவென்றால் இந்தத் தகுதிவாய்ந்த அதிகாரிக்கு அச்சுறுத்தல் தொலைபேசி அழைப்புகளும் வரத்தொடங்கி இருந்தன. 17 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தின் கீழ் ஹெட்டி ஆராய்ச்சியை ஜனவரி 5ஆம் திகதி தகுதிபெற்ற அதிகாரியாக தேர்தல் ஆணையாளர் நியமித்திருந்தார். ஆணையாளர் திஸாநாயக்கவுக்கும் வேட்பாளர்களின் பிரதி நிதிகள் அடங்கிய ஆலோசனைக் குழுவினருக்குமிடையில் நடைபெற்றுள்ள பல இரகசியக் கூட்டங்களில் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை நடத்துவதற்கான ஒத்துழைப்புக் கிடைத்திருக்கவில்லை என்ற விடயம் பல தடவைகளிலும் வெளிப் படுத்தப் பட்டு வந்துள்ளது. ஜனவரி 12 ஆம் திகதி இடம்பெற்ற அவர்களின் கூட்டத்தில் கூட்ட நிகழ்ச்சி நிரலின் படி தமக்கு ஏராளமான முறைப்பாடுகள் வந்துள்ளமை தொடர்பாக ஆணையாளர் தெரிவித்துள்ளார். ரூபவாஹினி மற்றும் சிறிலங்கா ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் ஆகி யவை தமது வழிகாட்டல்களையும் அறிவுறுத்தல்களையும் பின்பற்று வதில்லையென்று ஆணையாளர் தெரிவித்துள்ளார். அவைகள் ஒரு வேட்பாளர் விடயத்தில் பாரபட்ச மாக நடந்து கொள்கின்றன. ஊடக அமைச்சும் கூட இவை பற்றிய முறைப் பாடுகள் குறித்து அசண்டையாக இருக்கின்றது என்று அவர் தெரிவித்துள்ளார்.

**விடையளிக்க ஆணையாளர் மறுப்பு**

இருந்தபோதும் கடந்த வெள்ளிக்கிழமை ஆணையாளர் திஸாநாயக்க நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் சில கேள்விகளுக்கு விடையளிக்க அவர் மறுத்துவிட்டார். நான் எதைச் சொன்னாலும் ஒரு வேட்பாளருக்கு அல்லது மற்றவருக்கு சாதகமாக வியாக்கியானம் செய்யப்பட்டுவிடும் என்று கூறிய ஆணையாளர் தேர்தல்

## இக்கட்டான நிலையில் தேர்தல் ஆணையாளர்

முடிந்த பிறகு தாம் செய்தியாளர் மாநாடொன்றை அழைப்பார் என்று அவர் தெரிவித்தார்.

இரண்டாவது தடவையும் வாக்குகள் எண்ணப்படவேண்டியில்லாதிருப்பின் தேர்தல் முடிவினை புதன்கிழமை விடியற்காலையிலேயே தம்மால் அறிவிப்பது சாத்தியாகும் என்று ஆணையாளர் தெரிவித்தார்.

முன்னர் போன்று தொலைக்காட்சி அறிவித்தல் எதுவும் இருக்காது.

அரச ஊடகங்களை ஆணையாளர் இவ்விதமாக தண்டிக்க அவர் விரும்புவது போல் தோன்றுகிறது. அரச ஊடகங்கள் இதில் முன்னர் எப்போதுமே முதன்மை வசதியை பெற்று வந்துள்ளன.

கடந்தவாரம் நிகழ்ந்த சில சம்பவங்கள், பொலிஸாரின் செயற்பாடுகள் தொடர்பாக சில கேள்விகளை எழுப்பியுள்ளன. அவ்வாறான ஒரு சம்பவம் நிலைமைகளை விளக்குகின்றது. மருதானை தேவநம்பிய திஸ்ஸ அச்சகத்தில் ஜனாதிபதி ராஜபக்ஷவை இழிவு படுத்தும் துண்டுப் பிரசுரங்கள் அச்சடிக்கப்படுவதாக கொழும்பு பொலிஸ் பகுதியின் விஷேட குற்றப்பிரிவுக்கு முறைப்பாடு ஒன்று கிடைத்திருந்தது. உடனடியாக முற்றுகையிட்டு சோதனை நடத்தும்படி குற்றப்பிரிவு பொலிஸ்மா அதிபர் அனுரா சேனநாயக்க ஆணை பிறப்பித்தார்.

பிரதம பொலிஸ் இன்ஸ்பெக்டர் டொன்கெமுனு தலைமையில் சென்ற பொலிஸ் அணியொன்று சோதனையில் ஈடுபட்டது. அவதூறான சுவ ரொட்டிப் பிரசுரங்கள் அச்சடிக்கப்படுவது கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் அவை எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் பொன்சேகாவை அவதூறுப் படுத்துபவை. பொலிஸ் உயர்மட்ட அதிகாரிகள் நேரம் கடத்தாமல் அவசர விஷேட அதிரடிப் பொலிஸ் குழுவை கலைத்துவிட்டார்கள். அந்தப் பிரிவின் சிரேஷ்ட சுப்பிரிண் டன்ட் என். சி.குடா ஹெட்டியும் பிரதம இன்ஸ் பெக்டர் கெமுனு என்ப வரும் உடனடியாகப் பொலிஸ் தலைமையகத்திற்கு இடமாற்றப்பட்டனர்.

தேர்தல் காலத்தில் இடமாற்றங்கள் இடம்பெறலாகாதென்று தேர்தல் ஆணையாளரிடமிருந்து அறிவுறுத் தல் அனுப்பப்பட்டுள்ள நிலையிலும் இவர்கள் இடம்மாற்றப்பட்டிருந்ததாகத் தெரிகின்றது. தமது உயர் அதிகாரிகளின் உத்தரவின் பேரிலேயே சோதனைகளை நடத்தியிருந்தார்கள் என பாதிக்கப் பட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனராம். என்றாலும் இவர்கள் இப்போது ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்குள்ளாக்கப் படவிருக்கிறார்கள் என தெரியவந்துள்ளது.

இதேவேளை வேறு சில சம்பவங்களும் வெளிச்சத்துக்கு வந்துள்ளன. அடிப்படியான ஒன்று என்னவென்றால் ரத்தொட்டை பொலிஸ் நிலையத்தில் நிலையப் பொறுப்பதிகாரி நிகால் ஜயவீர என்பவர் தமது நிலை யத்திலுள்ள அதிகாரிகள் தபாலில் வாக்களிக்கும் போது தமது வாக்குச் சீட்டுக்களை தனக்குக் காட்டும்படியாக கேட்டிருக்கின்றார். சிவில் அதிரடிப் படையைச் சேர்ந்த ஒருவரின் சீல் வைக்கப்பட்ட வாக்குச்சீட்டை அவர் உடைத்துப் பார்வையிட்டுள்ளார். அதிரடிப்படைவீரர் ஜெனரல் பொன் சேகாவுக்கு வாக்களித்திருப்பது தெரியவரவே அவர் அச்சுறுத்தப்பட்டுள்ளார். ஆனால் ஜெயவீர இதனை மறுத்துள்ளார். இப்போது அவர் பொலிஸ் தலைமை நிலையத்துக்கு மாற்றப்பட்டுள் ளார்.

**ஐ.நா. செயலர் கவலை**

ஜனாதிபதித் தேர்தலையொட்டி இலங்கையில் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்று வருவது தொடர் பாக ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் கவலை தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தேர்தலில் ஈடுபட்டுள்ள அனைவரும் அமைதிகாக்க வேண்டும் என்றும், தேர்தல் சட்டங்களையும் நியமங்களையும் அனைவரும் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

மோதல்கள் முடிவுற்ற கையோடு நடைபெறும் முதலாவது தேர்தலான இந்த சமயத்தில் இலங் கையில் தேசிய இணக்கப்பாடும் நீண்டகால அமைதியும் ஏற்படுவதற்கு அமைதியான தேர்தல் நடைபெறுவது முக்கியம் என்று பான் கீமூன் விடுத்துள்ள ஒரு செய்தியில் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய யூனியன் சார்பில் அதன் உயர் பிரதிநிதி பிரஸ்ஸலில் விடுத் துள்ள அறிக்கையில் தேர்தலுக்கு முன்னதாக இலங்கையில் ஏற்பட்டுள்ள வன் செயல்களில் ஏற்கனவே நான்கு பேர் கொல்லப்பட்டும் பலர் காயமடைந்தும் இருப்பது தொடர்பாக ஐரோப்பிய யூனியன் பெரிதும் கவலையடைந் துள்ளது.

சுதந்திரமாக தேர்தல் நடைபெறுவதற்கு அமைதி நிலவவுவது அவசியமாகும். இலங்கை மக்கள் தமது அரசியல் தலைவரைத் தேர்தெடுப்பதற்கு சகல கட்சிகளும் பங்களிப்புச் செய்ய வேண்டும் என்று தெரிவித்துள்ளது.

இலங்கையில் மல்வத்த மற்றும் அஸ் கிரிய பௌத்தப் பீடங்களைச் சேர்ந்த மாகாநாயக்கர்களும் வன்முறையற்ற அமைதியான தேர்தல் நடைபெற வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்கள்.

கத்தோலிக்க பிஷப்மாரின் அமைப்பு விடுத்துள்ள அறிக்கையொன்றில் சுதந்திரமான, நீதியான தேர்தல் ஒன்று நடைபெற வேண்டுமானால் மக்கள் தமது கருத்துக்களை வெளியிடுவதற்கு அமை தியான சூழ்நிலை இருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளது.

இதேசமயம் இரு வேட்பாளர்களினதும் சிரேஷ்ட பிரதிநிதிகளான ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப் பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த மற்றும் ஐ.தேசியக் கட்சியின் பொதுச் செயலா ளர் திஸ்ஸ அத்தனாயக்க ஆகிய இருவரும் தேர்தல் ஆணையாளருக்கு அளித்துள்ள உறுதிமொழியில் வன்முறைகளற்ற தேர்தல் நடைபெறுவதற்கு உதவுவதாகத் தெரிவித்துள்ளனர்.

தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமது ஆதரவாளர்கள் மத்தியில் பேசும் போது தாம் சௌகரியமான பெரும்பான்மையுடன் மீண்டும் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் ஜெனரல் சரத்பொன்சேகாவும் தாம் வெற்றிபெறுவார் என்று நம்பிக்கையுடன் தெரிவித்தார். அது மட்டுமன்றி தேர்தலுக்குப்பின் எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்த திட்டங்கள் பற்றி ரணில் விக்கிரமசிங்க, மங்கள சமரவீர ஆகியோருடன் ஆலோசனைகளும் நடத்தினார். (ப)

## நாளை

| | | |
|---|---|---|
| தை | 13 | 26.01.2010 |
| | | செவ்வாய்க்கிழமை |
| திதி: | | ஏகாதசி |
| | | மு.இ. 09.03 வரை |
| நட்சத்திரம்: | | ரேகிணி |
| | | மு.இ. 06.59 வரை |
| [illegible] | | 11.06-12.36 வரை |
| ராகுகாலம்: | | 03.36-05.06 வரை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 170 பேருடன் வந்த ஈரானிய விமானம் ஓடுதரையில் மோதி விபத்து; 46 பேர் காயம்

தெஹ்ரான், ஜன. 25

157 பயணிகளுடனும், 13 சிப்பாய்களுடனும் வந்த ஈரானிய விமானமொன்று ஈரானின் வடகிழக்கு விமான நிலையத்தில் தரையிறங்கும்போது மோதி விபத்துக்குள்ளானது. இதில் ஒருவர் பலியானார். 46 பேர் படுகாயமடைந்தனர்.

உள்ளூர் நேரப்படி நேற்றுக்காலை 7.20 மணிக்கு இந்த விமானம் தரை இறங்கிய போது விபத்துக்குள்ளானது. இதையடுத்து, விமானத்தில் தீப்பற்றிக்கொண்டது. உடனடியாக பயணிகள் இறக்கப்பட்டு விட்டார்கள் என ஈரானிய வி மானசேவை பேச்சாளர் ரிஸா ஜபர் ஜாடிஹ் தெரிவித்தார்.

இந்த விமானம் சனிக்கிழமை மாலை தென்மேற்கு ஈரானிய அபேடான் விமான நிலையத்திலிருந்து மடகை மாஸ்ஹெட்டை நோக்கிப் புறப்பட்டது. எனினும், காலநிலை சீர்கேட்டால் இஸ்ப ஹான் விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டது என்றும் அவர் கூறினார்.

''மறுதினமான நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை 5.35 மணிக்கு காலநிலை சிறிது சீரடைந்தது. ஓரளவு வானிலை தெளிவாக இருந்தது. இச்சமயத்தில் கிளம்பிய இவ்விமானம் உடனடியாக அங்கு மீள தரையிறக்கப்பட்டபோது, மோதி விபத்துக்குள்ளானது'' என்றும் அவர் தெரிவித்தார்.

''பயணிகளில் ஒருவர் கடும் சுகவீன முற்றதையடுத்து, விமானி, விமானத்தை அவசரமாகத் தரையிறக்கியுள்ளார். இச்சமயம் விமானம் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. விமானம் படுமோசமாக சேதமடைந்துள்ளது. விமானத்தின் ஒரு பகுதி தீயில் எரிந் துள்ளது. இடதுபுற சிறகும் விமானத்தின் நடுப்பகுதியும் பிளந்துவிட்டன'' என்றும் அவர் கூறினார்.

''காயமடைந்தவர்கள் மஸ்ஹாட் வைத்தியசாலைகளுக்குக் கொண்டுசெல்லப்பட்டார்கள். இந்த விமானம் ரஷ்யாவில் தயாரிக்கப்பட்டதாகும்'' என்றும் ரிஸா ஜபர் ஹடாஹ் மேலும் விவரித்தார்.

# ஆப்கானில் துப்பாக்கிச் சூடு: 3 பெண்கள் பலி; மூவர் காயம்!

ஆப்கானிஸ்தானின் மேற்குப் பகுதியிலுள்ள பக்தியா என்னுமிடத்தில் பயணிகள் பயணித்த வான் ஒன்றின்மீது தீவிரவாதிகள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 3 பெண்கள் உயிரிழந்தனர். மூன்று ஆண்கள் படுகாயமடைந்தனர்.

ஷாஸ்கால் மாவட்டத்திலுள்ள குனார் பிராந்தியத்தில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த தலைமை பொலிஸ் அதிகாரி ஜம்துல்லாகானையும், அவருடனிருந்த மற்றுமிரு பொலிஸாரையும் தலிபான் தீவிரவாதிகள் கடத்திச் சென்றுள்ளனர்.

உள்துறை அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் ஷெமராய் பாஷரி இத்தகவலை வெளியிட்டார். பொலிஸ் தலைமை அதிகாரி ஒருவர் கடத்தப்பட்டுள்ளமை இதுவே முதல் முறையாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தானின் தெற்குப் பகுதியில் அமெரிக்கப் படைச் சிப்பாய்கள் 2 பேர் தீவிரவாதிகளின் குண்டுவெடிப்பில் சிக்கி உயிரிழந்தனர். ரோந்து பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த இவர்களின் வாகனம் குண்டுவெடிப்பில் சிக்கி முற்றாக சேதமடைந்தது.

இந்தத் தகவலை பன்னாட்டு படை அதிகாரிகள் தெரிவித்தனர். இவர்களையும் சேர்த்து இந்த ஆண்டு இதுவரை பன்னாட்டு படைச் சிப்பாய்கள் 35 பேர் பலியாகியுள்ளனர்.

# அமெரிக்கத் தபால் தலைகளில் இந்து சமயக் கடவுளர்கள்

வாஷிங்ரன், ஜன. 25

அமெரிக்க தபால்துறை சார்பில் இந்துக்களை கவருவதற்காக இந்துக் கடவுள்களின் படங்கள் அடங்கிய தபால் தலைகளை அமெரிக்க நிறுவனம் ஒன்று வெளியிட்டுள்ளது. மொத்தம் ஏழு இந்துக் கடவுள்களின் படங்கள் அடங்கிய தபால் தலைகள் வெளியிடப்பட்டுள்ளன.

முருகன், விநாயகர், ஏழுமலையான், இலட்சுமி, சிவன், பார்வதி, கிருஷ்ணர் மற்றும் ஷீரடி சாய்பாபா ஆகியோரின் உருவப் படங்கள் இந்தத் தபால் தலைகளில் இடம்பெற்றுள்ளன. இது இந்துக் கடவுள்களுக்கு மரியாதை அளித்து வெளியிடப்பட்டுள்ளதா அல்லது பரபரப்பூட்டும் செயற்பாடா என்ற சர்ச்சை அங்கு வெடித்துள்ளது.

அட்லாண்டாவைச் சேர்ந்த யுஎஸ்ஏ போஸ்டேஜ் காம் என்ற நிறுவனம்தான் இந்தத் தபால் தலைகளைத் தயாரித்து வெளியிட்டுள்ளது. அமெரிக்க தபால் துறைக்காக இவற்றை அது வெளியிட்டுள்ளதாம்.

இந்தத் தபால் தலைகள் குறித்து இந்த நிறுவனம் குறிப்பிடுகையில், ''இவை செல்லத்தக்கத் தபால் தலைகளாகப் பயன்படுத்தலாம்'' எனக் கூறியுள்ளது. ''எங்களது இணையத்தளத்தில் இடம்பெற்றுள்ள இந்தத் தபால் தலைகளின் அச்சிட்ட வடிவத்தை எடுத்து அதை தபால் தலையாகப் பயன்படுத்தலாம்'' என்றும் அது கூறியுள்ளது.

ஆனால், அமெரிக்க தபால்துறையின் அதிகாரபூர்வ முத்திரைப் பட்டியலில் இவை இடம்பெறவில்லை. ஆதலால் இந்த வெளியீடு பரபரப்பூட்டலாம் என்ற கருத்தும் எழுந்துள்ளது. இதனால் அங்கு சர்ச்சையும் எழுந்துள்ளது. இருப்பினும், இந்து அமைப்புகள் இந்த நடவடிக்கையை பாராட்டி வரவேற்றுள்ளன.

அமெரிக்காவில் இந்துக் கடவுள்களின் படங்கள் தபால் தலைகளில் இடம்பெறுவது இதுவே முதல் முறையாகும். ஒவ்வொரு தபால் தலையும் 44 செண்ட் மதிப்பில் வெளியிடப்பட்டுள்ளது.

# ஊருக்குத் திரும்பி வந்தால் உயிருக்கு உத்தரவாதமில்லை

## மெசூத் பழங்குடிகளுக்கு தலிபான்கள் எச்சரிக்கை

இஸ்லாமாபாத், ஜன. 25

''இராணுவத்துடனான சண்டை தொடர்ந்து நீடிக்கிறது. இதனால் ஊருக்குத் திரும்பிவிடாதீர்கள்'' என பாகிஸ்தான் மெசூத் பழங்குடி மக்களுக்கு தலிபான்கள், துண்டுப்பிரசுரங்கள் மூலமாக எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

''தெற்கு வசிரிஸ்தான் பகுதியில் இராணுவத்துடன் சம வலிமையுடன் சண்டையிட்டு வருகிறோம். இதனால் வசிரிஸ்தான் போர்க்களமாய் காட்சி அளிக்கிறது. இந்தத் தருணத்தில் நீங்கள் ஊர் திரும்பினால் உங்களது உயிருக்கும், உடைமைக்கும் உத்தரவாதம் இல்லை. இந்த எச்சரிக்கையை உங்கள் நலன்கருதியே நாங்கள் விடுக்கிறோம்'' என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

''அதேபோல, எங்களுக்கு எதிராகத் தாக்குதலை நடத்தும் இராணுவச் சிப்பாய்களுக்கு எதுவித உதவியையும் செய்யாதீர்கள். எங்களைப் பற்றி அவர்கள் கேட்கும் தகவலையும் அளிக்காதீர்கள்'' என்றும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வசிரிஸ்தான் பகுதியில் தலிபான்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்காக அங்கிருந்து இலட்சக்கணக்கான பழங்குடி மக்கள் வெளியேற்றப்பட்டு, வேறு இடத்தில் குடியமர்த்தப்பட்டுள்ளனர். இப்போது இவர்களை சில நிபந்தனைகளுடன் வசிரிஸ்தான் பகுதியிலேயே மீண்டும் குடியமர்த்த அரசு திட்டமிட்டுள்ளது. அதற்கு பழங்குடி மக்களும் உடன்பட்டுள்ளனர்.

தலிபான்களின் அமைப்பில் உள்ள சில முக்கிய பழங்குடியின தலைவர்களை இராணுவத்திடம் ஒப்படைக்க பழங்குடியின மக்கள் சம்மதித்துள்ளனர் என்ற தகவலும் வெளியாகியுள்ளது. இது தலிபான்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. தங்களது பதுங்கு இடங்களையும், தலைவர்களையும் அவர்கள் காட்டிக்கொடுத்து விடுவார்களோ என்றும் அவர்கள் நினைக்கின்றனர்.

அதையடுத்து இந்த துண்டுப்பிரசுரங்களை தலிபான்கள் வெளியிட்டுள்ளனர்.

உலக அரங்கில்

# ஐ.நா. சபைக்கு இஸ்ரேல் இழப்பீடு

ஐ.நா. ஜன. 25

காஸா மீது கடந்த ஆண்டு இஸ்ரேல் மேற்கொண்ட போரினால் சேதமடைந்த ஐ.நா. உடமைகளுக்காக ஐ.நா. சபைக்கு நட்ட ஈடாக இஸ்ரேல் ஒரு கோடி அமெரிக்க டொலரை வழங்கியுள்ளது.

கடந்த 2008 டிசெம்பர் மாதம் முதல் 2009 ஜனவரி வரை காஸாவில் ஹமாஸ் இயக்கத்தினர் மீது இஸ்ரேல் இராணுவம் கடும் தாக்குதலை தொடுத்தது.

காஸாவில் பலஸ்தீனிய குழந்தைகளுக்காக ஐ.நா. சார்பில் அமைக்கப்பட்டிருந்த பள்ளிக்கூடங்களும் சரக்கு குடோன்களும் இதில் தாக்கி அழிக்கப்பட்டன.

இத்தாக்குதலால் குடோன்களில் இருந்த நூற்றுக்கணக்கான தொன் உணவுப் பொருள்கள், மருந்துகள் ஆகியவை நாசமாகி ஐ.நாவுக்குப் பெரும் இழப்பு ஏற்பட்டது.

இதற்காக இழப்பீடு தொகை தரவேண்டும் என ஐ.நா. உத்தரவிட்டது. இதையடுத்து, போர் முடிவுற்று ஓராண்டுக்குப் பின்னர் தற்போது ஐ.நாவுக்கு இழப்பீட்டுத் தொகையாக 1 கோடி அமெரிக்க டொலரை இஸ்ரேல் செலுத்தியுள்ளது.

# ஹெய்ட்டி கட்டட இடிபாடுகளிலிருந்து 10 நாள்களுக்குப் பின்னர் இருவர் மீட்பு!

நியூயோர்க், ஜன. 25

ஹெய்ட்டியில் ஏற்பட்ட பூகம்ப அனர்த்தங்களால், இடிபாடுகளுக்குள் சிக்கித் தவித்த இருவர் 10 நாள்களுக்குப் பின்னர் உயிருடன் மீட்கப்பட்டனர்.

ஹெய்ட்டியில் ஏற்பட்ட பூகம்பத்தில் இடிந்த ஹோட்டலுக்குள் சிக்கி 50 மணி நேரம் போராடிய இந்தியப் பெண் மீட்கப்பட்டுள்ளார்.

தலைநகர் போர்ட் ஒவ் பிரின்ஸில் மோன்டானா என்ற ஹோட்டல் உள்ளது. அமெரிக்காவின் நியூஜெர்சியில் வசிக்கும் இந்திய பெண் சரளா சந்த் (வயது - 65), தொண்டு நிறுவனத்தின் சார்பில் நடந்த கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக ஹெய்ட்டி வந்திருந்தார்.

மோன்டானா ஹோட்டலில் சரளா தங்கியிருந்தபோது பூகம்பம் தாக்கியது. அப்போது ஏற்பட்ட இடிபாடுகளில் சரளாவும் சிக்கினார். இவரது மகன் ஷைரஸ் லால் உட்பட பலரும் சரளாவும் பூகம்பத்தில் இறந்திருப்பார் எனக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தனர்.

எனினும், அதிர்ஷ்டவசமாக 50 மணி நேரத்துக்குப் பின்னர் வெளிநாட்டு மீட்புக் குழுவினர் இவரை இடிபாடுகளிலிருந்து மீட்டனர்.

இதுகுறித்து சரளா குறிப்பிடுகையில், ''இடிபாடுகளில் சிக்கிய நான் ஒவ்வொரு மணி நேரமும் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தேன். காலால் தடவியபடி வேறெங்காவது வழி இருக்கிறதா எனத் தேடினேன். என்னுடன் வந்த அதிகாரியும் அங்கே இருந்தார். வலி குறைப்பு மாத்திரைகள் சிலவற்றைக் கொடுத்தார். வெறும் வயிற்றில் சாப்பிட்டதால் எனக்கு வயிற்றுப்போக்கு ஏற்பட்டது. குடிக்கத் தண்ணீர் இல்லாததால் என்னுடைய சிறுநீரையே குடித்து தாகத்தைத் தணித்துக்கொண்டேன்'' என்றார்.

ஹெய்ட்டி பூகம்பத்தின் இடிபாடுகளுக்குள் சிக்கியிருந்த 84 வயது மூதாட்டி 10 நாள்களுக்குப் பின்னர் உயிருடன் மீட்கப்பட்டார். மீட்புப் பணிகள் போர்க்கால அடிப்படையில் நடந்து வருகின்றன.

இதற்கிடையில் சனிக்கிழமை கட்டட இடிபாடுகளுக்கிடையிலிருந்து 84 வயது மூதாட்டி ஒருவர் உயிருடன் மீட்கப்பட்டார். இவரைப் பரிசோதித்த டாக்டர் கூறுகையில், ''இது அதிசயமான சம்பவம். அவர் உடல் முழுவதும் காயங்கள் ஏற்பட்டுள்ளன. தற்போது அவருக்கு சிகிச்சையளித்து வருகிறோம்'' என்றார்.

ஹெய்ட்டியில் இடம்பெற்ற பூகம்பத்தில் முற்றாக இடிந்த நேபொலி யின் ஹோட்டல் கட்டடப் பகுதியிலி ருந்து பதினொரு நாள்களுக்குப் பின்னர் ஒருவர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளார்.

24 வயதுடைய விஸ்மண்ட் எக்சண்டஸ் என்பவரே இடிபாடுகளுக்குள் சிக்கியும் எந்தவித உயிராபத்துமின்றி பதினொரு நாள்கள் உயிரோடிருந்துள்ளார்.

ஹெய்ட்டி பூகம்பத்திற்குப் பின்னர் இடிந்த பகுதிகளை அகற்றுவதிலும், இறந்தவர்களின் சடலங்களை மீட்பதிலும் அரசு ஈடுபட்டுவருகிறது.

இதில் பல நாள்களுக்குப் பின்னர் உயிருடன் மீட்கப்பட்ட அபூர்வ சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

மூன்று சர்வதேச மீட்புக்குழுவினரும் இணைந்து இப்பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். கிரேக்க, பிரான்ஸ், அமெரிக்க மீட்புப் பணியாளர்களின் இரண்டரை மணிநேர தொடர்பணியின் போதே இந்த நபர் மீட்கப்பட்டுள்ளார்.

# தலிபான்களை அமைதி வழிக்குத் திருப்ப ஆப்கான் ஜனாதிபதியின் புதிய சமரசத் திட்டம்

## லண்டன் மாநாட்டில் விளக்கமளிப்பார்

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா தலைமையிலான கூட்டு இராணுவத்திற்கு எதிராக யுத்தம் செய்துவரும் தலிபான்களை அமைதிப்படுத்துவதற்காகப் புதிய சமரச திட்டமொன்றை அந்நாட்டு ஜனாதிபதி கர்சாய் கொண்டுவரவிருக்கிறார்.

ஆப்கானிஸ்தானிலுள்ள தலிபான்கள், அமெரிக்கா தலைமையிலான கூட்டு இராணுவத்துக்கு எதிராக யுத்தம் செய்து வருகிறார்கள். 9 ஆண்டுகளாக நடந்துவரும் இந்த யுத்தத்தால் தலிபான்களை அமெரிக்க இராணுவத்தால் ஒடுக்க முடியவில்லை.

இதனால் தலிபான் தீவிரவாதிகளை அமைதி வழிக்கு திருப்புவதற்காக ஜனாதிபதி கர்சாய் ஒரு சமரச திட்டத்தைக் கொண்டுவரவிருக்கிறார். அடுத்த வாரம் லண்டனில் நிகழும் மாநாட்டில் இந்தத் திட்டத்தை கர்சாய், பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு விவரிக்கவிருக்கிறார்.

தலிபான்கள் தங்கள் இயக்கத்தில் சேரும் விவசாயிகளுக்கு அதிக அளவில் பண உதவி செய்துவருகிறார்கள். அரசு இந்த அளவு பணத்தை தனது இராணுவத்துக்குகூட வழங்குவதில்லை. எனவே, ஆப்கானிஸ்தான் அரசுக்கு ஆதரவு தெரிவிக்கும் தலிபான்களுக்கு பணத்தையும், வேலை வாய்ப்புகளையும் வாரி வழங்க கர்சாய் திட்டமிட்டிருக்கிறார்.

கர்சாய் தற்போது என்ன விலை கொடுத்தாவது அமைதியை வாங்கவேண்டும் என்ற முடிவுக்கு வந்துள்ளார். அதனால் பணம், வேலை எனக் கொடுத்து தீவிரவாதிகளை தன் பக்கம் திருப்ப அவர் திட்டமிட்டுள்ளார்.

கர்சாய் சில ஆண்டுகளுக்கு முன்னரும் தலிபான்களுடன் சமரசமாகப் போவதற்கான திட்டமொன்றை முன்வைத்தார். எனினும், அப்போது அதற்கு மேற்கத்திய நாடுகள் ஆதரவு அளிக்கவில்லை. இப்போது மேற்கத்திய நாடுகள் மத்தியில் மனமாற்றம் ஏற்பட்டுள்ளது என அவர் கருதுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடலுக்கும் சூழலுக்கும் நன்மை பயக்கும் சேதனப் பசளை தயாரிக்கும் முறைகள்

வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தில் சேதனப் பசளை உற்பத்தி, பாவனை அதிகரிப்பு திட்டம்-2009 இன் நிதியீட்டத்தின் கீழ் விவசாயத் திணைக்களம் (விரிவாக்கம்) 200 விவசாயிகளுக்கு சேதனைப் பசளை தயாரித்தல் பற்றிய விரிவுரையுடன் கூடிய செய்முறைப்பயிற்சியை தற்போது வழங்கிக் கொண்டிருக்கிறது.

இப்பயிற்சிக்கு புங்குடுதீவு, வேலணை, நல்லூர், தொல்புரம், தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், உடுவில், புத்தூர், உரும்பிராய், சாவகச்சேரி, கைதடி, கரவெட்டி, அம்பன், புலோலி ஆகிய 14 விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளிலிருந்து விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு ஈ.எம். கூட்டெரு தயாரித்தல், மண்புழு உரம் தயாரித்தல், மண்புழு திரவம் தயாரித்தல் தொடர்பான



பயிற்சியில் பங்கு பற்றிய விவசாயிகள் ஈ.எம். திரவக் கலவையைத் தயாரிக்கின்றனர்

தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்கான செய்முறையுடன் கூடிய பயிற்சிகள் திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் வழங்கப்பட்டு வருகிறது. பயிற்சியில் பங்குபற்றும் விவசாயிகளுக்கு கையேடுகளும் வழங்கப்பட்டு வருகின்றது.

இவ்விசாயிகளுக்கு சேதனப்பசளை தயாரித்தல் சம்பந்தமாக வழங்கப்பட்ட தொழில்நுட்பங்களில் ஈ.எம்.கூட்டெரு தயாரிப்பானது யாழ்ப்பாண விவசாயிகள் மத்தியில் புதிய விடயமாக இன்று காணப்படுகிறது. ஈ.எம். கூட்டெரு பற்றிய தொகுப்பு வருமாறு-

**கமமும் புலமும்**

### ஈ.எம். வினைத்திறனான நுண்ணங்கிகள்

ஈ.எம். (Effective Micro organism) என்பது இயற்கையில் காணப்படும் நன்மை பயக்கும் நுண்ணுயிர்களின் கலவைப் பத்திரம் ஆகும். இது திரவக் கலவை வடிவில் தாயாரிக்கப்படுகிறது.

இந்த ஈ.எம். தொழில்நுட்பமானது யப்பான் நாட்டு பேராசிரியர் டாக்டர் ரே.கூ.ஹிகா இனால் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனாலும் அந்தந்த நாடுகளில் காணப்படும் நன்மை பயக்கும் நுண்ணுயிர்கள் அடையாளம் காணப்பட்டு அந்தந்த நாடுகளிலிலேயே ஈ.எம்.முதன்மைத் திரவம் தயாரிக்கப்படுகிறது. 1996-1997 காலப்பகுதிகளில் இத்தொழில் நுட்பம் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டது. இலங்கையில் மொறட்டுவ எனும் இடத்தில் ஈ.எம். முதன்மைத்திரவம் தயாரிக்கப்படுகின்றது.

### ஈ.எம் கூட்டெரு

கூட்டெரு தயாரிப்பதில் தாவர, விலங்குக் கழிவுகளை விரைவாக உக்க வைக்கும் செயற்பாட்டிற்கு வினைத்திறனான நுண்ணுயிர்கள் பயன்படுத்தி, பெறப்படும் விளைவு ஈ.எம். கூட்டெரு எனப்படும்.

ஈ.எம்.கூட்டெரு தயாரிக்க இலை,குழை சருகுகள், நன்கு உலர்ந்த மாட்டுச் சாணம், சர்க்கரை, ஈ.எம் முதன்மைத் திரவம், சாதாரண கிணற்று நீர், பூவாளி, கறுப்பு பொலித்தீன், சிறிய மரக்கூடு ஆகியவை போதுமானதாகும். கிணற்று நீர் ஆனது குளோரின் அற்றதாக இருத்தல் வேண்டும். ஏனெனில் குளோரின் கொண்ட நீரானது நுண்ணுயிர்களின் செயற்பாட்டை பாதிக்கும்.

### ஈ.எம். கூட்டெரு தயாரிக்கும் முறை

*(100 கிலோ ஈ.எம். கூட்டெரு பெறுவதற்கு)*

1) ஈ.எம்.திரவக் கலவை தயாரித்தல்.

★ 100 கிராம் சர்க்கரையை 75மில்லி லீற்றர் நீரில் பாத்திரம் ஒன்றினுள் கரைத்தல் வேண்டும்.

★ இதனுடன் ஈ.எம். முதன்மைத் திரவம் 100 மில்லிலீற்றர் (10மேசைக்கரண்டி) ஐ சேர்த்தல் வேண்டும்.

★ பிளாஸ்ரிக் வாளியினுள் 10லீற்றர் சாதாரண கிணற்று நீரை எடுத்து அதனுள் சர்க்கரை கரைசல்,ஈ.எம். முதன்மைத் திரவம் என்பவற்றை சேர்த்து கலக்க வேண்டும்.

★ வாளியின் மூடியை வளியுட்புகாதவாறு இறுக்கி 2-18 மணித்தியாலங்களுக்கு நிழலான இடத்தில் வைத்திருத்தல் வேண்டும்.

2) ஈ.எம்.கூட்டெரு கலவை தயாரித்தல்

★ சுற்றாடலில் கிடைக்கும் 100 கிலோ கிராம் இலை, குழை மற்றும் சருகுகள், நன்கு உலர்ந்த 10 கிலோ கிராம் மாட்டுச் சாணம் என்பவற்றை நன்கு கலந்து கொள்ள வேண்டும்.



விவசாயி ஒருவர் ஈ.எம். திரவக் கலவையை சேதனக் கலவைகளின் மேல் தெளிக்கின்றார்

★ பின்தயாரிக்கப்பட்ட ஈ.எம். திரவக் கலவையை பூவாளியின் உதவி கொண்டு மேற்கூறப்பட்ட சேதனக் கழிவுக் கலவையின் மேல் தெளித்து நன்கு சேர்க்கப்படுதல் வேண்டும்.

★ அதே நேரத்தில் 6 அடி நீளம் 4 அடி அகலம் 10 அங்குல உயரம் கொண்ட மரத்தாலான கூடு ஒன்றை



6' நீளம்4' அகலம் 10'' உயரம் கொண்ட மரத்தாலான கூட்டினுள் பொலித்தீன் விரிக்கப்பட்டுள்ளது

அமைத்தல் வேண்டும்.

★ மரக் கூட்டினுள் அமைந்த தரையின் மேல் 1000 கேஜ் தடிப்புடைய கறுப்பு பொலித்தீனை (1 கிலோ) விரித்தல் வேண்டும்.

★ ஈ. எம். திரவக் கலவை சேர்க்கப்பட்ட காபன் சேதனக் கழிவுகளை மரக்கூட்டினுள் விரிக்கப்பட்ட பொலித்தீன் மேல் கொட்டி 10'' உயரத்திற்கு நன்கு காலால் மிதித்து நிரப்புதல் வேண்டும்.

★ பின் காற்றிடை வெளிகளற்ற வகையில் கறுப்பு பொலித்தீனால் நன்கு மூடி விடுதல் வேண்டும்.

★ 18-24 மணித்தியாலங்களுக்கு பொலித்தீனால் மூடப்பட்ட நிலையில் விடுதல் வேண்டும்.

★ பின் பொலித்தீனின் மேல் பகுதியை அகற்றி கலவையின் நடுப் பகுதியுனுள் கையால் தொடும் போது நகச் சூட்டு வெப்பநிலை (35-45 பாகை செல்சியஸ்) உணரப்படின் கலவையை நன்கு கிளறிவிடல் வேண்டும். நகச் சூட்டு வெப்பநிலை உணரப்படாவிடின் கிளறவேண்டிய தேவையில்லை.

★ மீண்டும் பொலித்தீனால் கலவையை இறுக்கமாகக் கட்டி மரத்தாலான கூட்டினை அகற்றி மரக் கூட்டினைத் தொடர்ந்து ஈ.எம் கூட்டெரு தயாரிக்க பயன்படுத்த முடியும்.

★ ஈ. எம் கூட்டெரு தயாரிக்கப் பயன்படுத்தும் கழிவுகள் உக்கலடையும் தன்மையைப் பொறுத்து அது முதிர்வடைய எடுக்கும் காலம் வேறுபடும். இலகுவில் உக்கலடையக் கூடிய அவரைக் குடும்பத் தாவரங்களின் இலைகள் மற்றும் புல் வகைகளிலிருந்து ஈ.எம் கூட்டெருவை 10 நாள்களில் தயாரிக்க முடியும்.

★ மேல் குறிப்பிட்ட கலவையானது கறுப்பு நிறமாக மாறியுள்ளதாயின் அதுவே பயிர்களுக்கு பயன்படுத்த உகந்த ஈ.எம் கூட்டெருவாகும். இதை கைகளால் தூளாக்கும் போது மிருதுவான உதிரும் தன்மை உணரப்படின் கூட்டெருவானது நல்ல நிலையில் உள்ளது என்பதை அறிந்து கொள்ளலாம்.

### 100 கிலோ கூட்டெருவின் பெறுமதி

100 கிலோ ஈ.எம் கூட்டெருவை முதல் தடவை பெற அண்ணளவாக ரூபா 1910 செலவாகின்றது. இங்கு கறுப்பு பொலித்தீன், மரக்கூடு என்பவை மூலதனச் செலவாகக் காணப்படுகின்றது. எனவே தொடர்ந்து ஈ.எம் கூட்டெருவை தயாரிப்பதற்கு அண்ணளவாக ரூபா 170 செலவாகின்றது.

செலவின் விவரம் வருமாறு,

மூலதனச் செலவு

1) 1கிலோ பொலித்தீன் (1000 கேஜ் தடிப்பு) ரூபா 240

2) மரக்கூடு ரூபா 1500


நடைமுறைச் செலவு

3) 100 கிலோ இலை, குழை சருகு ரூபா 100

4) 10 கிலோ மாட்டுச் சாணம் ரூபா 20

5) 100 மி.லீ ஈ.எம். முதன்மைத் திரவம் ரூபா 38

6) 100 கிராம் சர்க்கரை ரூபா 12




### ஈ.எம் கூட்டெருவின் பாவனை முறை

★ இக்கூட்டெருவை சாக்குகளிலோ அல்லது கறுப்பு பொலித்தீன் பைகளிலோ அடைத்து சூரிய ஒளி, மழை என்பவற்றிலிருந்து பாதுகாத்து அறை வெப்பநிலையில் 90 நாள்கள் வரை வைத்து பாவனைக்குட்படுத்தலாம்.

★ பயிர்களுக்கு நிலத்தை பண்படுத்தும் போது குழி ஒன்றுக்கு 200-300 கிராம் எனும் அளவிலும் பூக்கும் காலத்தில் நிலையம் ஒன்றுக்கு 100 கிராம் எனும் அளவிலும் ஈ.எம். கூட்டெரு பாவித்தல் போதுமானது.

★ நெற் செய்கையில் நிலத்தை பண்படுத்தும் போது ஏக்கருக்கு 1.5 டொன் ஈ.எம். கூட்டெரு பாவிக்க வேண்டும். ஈ.எம். முதன்மைத் திரவம் பெறுவதற்கு சர்வோதயம், 2ஆம் குறுக்குத்தெரு, வவுனியா, தொலை பேசி இலக்கம் 024 2224949 என்ற முகவரியுடனும் தொடர்பு கொள்ளவும். இது தொடர்பான மேலதிக விவரங்களை பெறவிரும்பின் தங்கள் பகுதி விவசாயப் போதனாசிரியர்களை அணுகவும்.

திருமதி சுந்தரவதனி நிமலன்,
நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்,
பிரதி விவசாயப் பணிப்பாளர் (வி) அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

திருமதி லதா ஜெனகன்
விவசாயப் போதனாசிரியர்
தலைமைப்பீடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சமாதானம், நல்லிணக்கம்
மற்றும் நீதியை நிலைநாட்டுவதற்காக
வாக்களிப்போம்!

இலங்கை தேசிய சமாதான பேரவை


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 02 - 08 - 1951



உதிர்வு 04 - 02 - 2009.

அப்புத்தளை சுந்தரம் ஸ்டோர்ஸ்
உரிமையாளரும் வர்த்தகருமான
**அமரர் சோமசுந்தரம் கனகசுந்தரலிங்கம் (சுந்தரம்)**

எங்கள் குல மாணிக்கமே !
எமை வளர்த்த உத்தமரே
நீ இருந்த இடத்தினிலே, இனியார்
வருவார் சொல்லுமையா ?
உன் பாசமிக்க பண்புதனை யார்
தருவார் சொல்லுமையா ?
ஆண்டு ஒன்று போனாலும் உன்
பேச்சு சிரிப்பொலி ஓயுமோ ஐயா.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி
சுந்தரம் ஸ்டோர்ஸ் ஊழியர்கள் - அப்புத்தளை.

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலியும்

எம் நீங்கா நினைவுகளும்



அமரர்
சோமசுந்தரம்
கனகசுந்தரலிங்கம் (சுந்தரம்)
(சுந்தரம் ஸ்ரோஸ், உரிமையாளர், அப்புத்தளை)
தோற்றம் 02-08-1951
மறைவு 04-02-2009



அமரர்
திருமதி. சோமசுந்தரம்
இலட்சுமிபிள்ளை (இலட்சம்)

தோற்றம் : 20-01-1930
மறைவு : 22-07-2008.

இன்முகங் காட்டி என்றும்
இனித்திட கதைகள் பேசி
நன்மைகள் செய்தெமக்கு
நல்வழி காட்டி நின்ற
பொன் மனத்தோரே! இந்தப்
புவி வாழ்வை விட்டகன்றீர் !
என்னாலும் உங்கள் ஆத்ம
சாந்திக்காய் இறைஞ்சுகின்றோம்.

இன்று (25.01.2010) திங்கட்கிழமை அன்னாரின் முதலாம் ஆண்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனை அப்புத்தளை இந்து இளைஞர் கலாசார மண்டபத்தில் நடைபெறும். இத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இந் நிகழ்வில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

சுந்தரம் ஸ்ரோஸ்,
அப்புத்தளை. (அ/564415)

## 31ஆம் நாள் நினைவு அஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 04 . 07 . 1935



உதிர்வு 27 . 12 . 2009

## அமரர் நாகப்பர் கந்தப்பு

கடந்த 27.12.2009 அன்று இறைபதம் அடைந்த நாகப்பர் கந்தப்பு (இளைப்பாறிய இராணுவ உத்தியோகத்தர்) அவர்களின் 31ஆம் நாள் நினைவு அஞ்சலியும் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் நாளை (26.01.2010) செவ்வாய்க்கிழமை 7 மணி அளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**க.செல்லத்துரை.**
அம்மன் கோயிலடி, கரணவாய் கிழக்கு, கரவெட்டி.

(91035)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாஷையூர் கவிஞர் மு.சிங்கராயர் எழுதிய 'பாஷையூரும் நாட்டுக் கூத்தும்' நூல் வெளியீட்டு விழா அண்மையில் பாஷையூர் புனித அந்தோனியார் மகளிர் ஆரம்பப் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள்.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கனிடம் இருந்து முதற்பிரதியை சட்டத்தரணி ரி.எம். அன்ரனிப்பிள்ளை பெற்றுக்கொள்வதை முதலாவது படத்திலும், பாஷையூர் புனித அந்தோனியார் சனசமூக நிலையத் தலைவர் யூட்ஸ் கொலின், அருட்தந்தை மில்பர்வாஸ் அடிகள், திருமறைக்கலாமன்றப் பிரதி இயக்குநர் ஜோண்சன் ராஜ்குமார் , யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறை விரிவுரையாளர் பா. அகிலன் ஆகியோர் உரையாற்றுவதையும் அடுத்துள்ள படங்களிலும் காணலாம்.

*(படங்கள் : தமிழினியன்)*

### நாடாளுமன்றத்துக்கு அதிகாரம் கிட்டும் வகையில்

# தவறாது வாக்குரிமையைப் பிரயோகிக்க யாழ். பல்கலைக்கழக மாணவர் வற்புறுத்து

யாழ்ப்பாணம், ஜன.25

'நாடாளுமன்றத்துக்கு அதிகாரத்தைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் வாக்களிப் போம்!'- என்ற தலைப்பில் யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை ஒன்றை நேற்று விடுத்துள்ளது.

அதில் ஒன்றியம் தெரிவித்திருப்பவை வருமாறு:

உலகில் பல்வேறு இன ,மத, மொழி, கலாசார விழுமியங்களையுடைய மக்களை ஒருங்கே கொண்ட பல நாடுகளில், அந் நாடுகளின் சனத்தொகையில் மிகக் குறைந்த விகிதாசாரத்தைக் கொண்ட இனத்தைச் சேர்ந்தவர்கள் அந்நாடுகளின் அதியுயர் பொறுப்புகளில் உள்ளனர். நடைமுறை உதாரணமாக இந்தியா, அமெரிக்காவைக் குறிப்பிடலாம். ஆனால் ஜனநாயக, சோசலிசக்குடியரசு எனப்படும் நாட்டில் மக்கள் நலன் சார்ந்த சுதந்திரமான செயற்பாடுகளை ஓர் சராசரிக் குடிமகன் மட்டுமல்லாது, மக்கள் பிரதிநிதிகள் எனப்படுவோர் கூட மேற்கொள்ள முடியாதபடி முட்டுக்கட்டை போட்டு நிற்கின்றது நடைமுறையில் உள்ள சர்வவல்லமை பொருந்திய நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை.

இந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை சிறுபான்மை மக்களை மட்டுமல்லாது பெரும்பான்மையினரையும் நடைமுறையில் மிகமோசமாகப் பாதிப்புக்குள்ளாக்கி வருகின்றது. இனிவரும் காலங்களில் பேதம் பார்க்கும் குறுகிய சிந்தனைக்குள் நிற்காது, பரந்துபட்ட நோக்கில் அனைவரும் சிந்தித்து இணைந்து செயற்படவேண்டிய நேரமிது. அப்படிப்பட்ட காலகட்டத்தில் எமது தமிழ்ப்பிரதிநிதிகள் ஒருமித்த குரலில் ஒன்றிணைந்து செயற்படாதது எமக்கு வேதனையளிக்கின்றது. ஆனால் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சிறுபான்மையினர், பெரும்பான்மையாக இருந்து விடக் கூடாது எனும் நோக்கில் செயற்படுகின்றது நடைமுறையில் உள்ள அரசு.

சிறுபான்மைக்கட்சிகளை உடைத்து, உதிரிகளாக்கி எமது பேரம்பேசும் ஆற்றலை இல்லாதொழிக்கின்றது. இதுவரை காலமும் கொடுத்துவந்த முக்கியத்தை இப்பொழுது கொடுக்காது, சில சிறுபான்மைப் பிரதிநிதிகளை அவமதித்து, அவர்களின் அடையாளத்தை இல்லாமல் செய்ய முயல்கிறது. இவ்வாறாகப் பாதக விளைவுகளைப் பெரும்பான்மை, சிறுபான்மை என்ற எல்லையைத் தாண்டி அனைவருக்கும் தந்துள்ளது நடைமுறையில் உள்ள நிறைவேற்று அதிகாரமுள்ள அரசு.

எது எவ்வாறிருப்பினும், எமக்குத் தெளிவான விளக்கங்கள் உண்டு.இரு பிரதான வேட்பாளர்கள் மீதும் எமக்குத் தனிப்பட்ட அபிப்பிராயமோ, நம்பிக்கையோ கிடையாது. கடந்த காலப் படிப்பினைகளையும், நாம் பறிகொடுத்த உயிர்களின் மேன்மையும் நாம் மறந்துவிடவில்லை.

இருப்பினும் காலச்சக்கரத்தின் ஓட்டத்தில் நாம் சேர்ந்து ஓடவேண்டும். விழுந்து விட்டோம் என்று தேங்கி நின்றால் நாம் சாக்கடையாகி விடுவோம். விழுந்த பின்புதான் அருவி பாய்கின்றது என்பதைப்போல, நாமும் செயற்பட வேண்டும். தக்கன பிழைத்தலும் தகாதன அழிதலும் எனும் கூர்ப்புக் கொள்கையின் பிரகாரம் நாம் சூழ்நிலையின் மாற்றத்தை உணர்ந்து, தனிப்பட்ட நபர் மீதான நம்பிக்கை என்பதைத் தாண்டி, நாடாளுமன்றத்தில் தமிழ்ப் பிரதிநிதிகளின் ஒவ்வொரு ஆசனத்திற்கும் தக்க பலத்தையும், கௌரவத்தையும் பெற்றெடுத்துத் தரும் எனப் பல புத்தி ஜீவிகளால் கருதப்படும் ஆட்சி மாற்றத்தை, நாமும் ஆதரிக்க வேண்டிய காலத்தின் கட்டாயத்திற்குத் தள்ளப்படுகின்றோம்.

சமுதாயத்தின் பொறுப்பு மிக்க பிரஜைகளை உருவாக்கும், சமுதாயத்தை உற்பத்தி செய்யும் ஓர் சமூக நிறுவனமாகவும் நாமும் எம்மைச் சேர்ந்த சமூகத்தின் உள்ளக்கிடக்கைகளைப் பிரதிபலிப்பவர்கள் எனும் வகையிலும்-

எமது புத்திக்கும் சிந்தனைக்கும் உட்பட்டே இக்கருத்துக்களைத் தெரிவிக்கின்றோம்.எமக்கு எந்தவிதமான தனிநபர் சார்போ, கட்சி சார்போ கிடையாது. உலகின் ஜனநாயகத்தின் எல்லைகளுக்கு உட்பட்ட வகையில் கருத்துக்களுக்கு மதிப்பளிக்கும் சுதந்திரமான சூழ்நிலையையே ஏக்கத்துடன் எதிர்பார்க்கின்றோம். மக்களால் மக்களுக்காக மேற்கொள்ளப்படும் மக்களாட்சியான ஜனநாயகத்தின் வரைவிலக்கணத்தையே நாமும் தழுவி நிற்கின்றோம்- என்றுள்ளது. (4)




## புதிய கட்டடம் திறப்பு

கைதடி,ஜன.25

கைதடி முதியோர் இல்லத்தின் புதிய கட்டடத்திறப்பு விழா கடந்த சனிக்கிழமை இடம் பெற்றது.

மேற்படி இல்லத்தின் அத்தியட்சகர் ந.இராஜலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு புதிய கட்டடத்தைத் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் வடமாகாண சமூக சேவைகள் பணிப்பாளர் திரு.எஸ்.அருள்ராஜ், யாழ்ப்பாணப் பிராந்திய ஆணையாளர் திருமதி ப.சிவலிங்கம் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

(04-288)



அண்மையில் கீரிமலை வீதி, பண்டத்தரிப்புப் பகுதியில் சட்டவிரோதமாக விற்பனை செய்யப்பட்ட பெரும் தொகையான சாராயப் போத்தல்களைப் பொலிஸார் கைப்பற்றினர். கைப்பற்றப்பட்ட பொருள்களுடன் இளவாலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யு. எம்.ஜே.பி. விஜயரட்னவும் ஏனைய பொலிஸாரும் நிற்பதைப் படத்தில் காணலாம்.

(04-130)

# தம்புள்ளவில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு மரக்கறிவகைகள் பெருமளவில் தருவிப்பு!

### விலைகளில் பெரும் சரிவு

யாழ்ப்பாணம், ஜன.25

தம்புள்ளவில் இருந்து தரைப்பாதையூடாகக் குடாநாட்டுக்குக் கூடுதலான மரக்கறி வகைகள் எடுத்துவரப்பட்டதை அடுத்து மரக்கறிகளின் விலைகள் திடீரென யாழ்ப்பாணத்தில் சரிந்துள்ளன.

திருநெல்வேலி, மருதனார்மடம், சுன்னாகம் போன்ற சந்தைகளிலேயே மரக்கறி வகைகளின் விலைகள் இவ்வாறு வீழ்ச்சியடைந்து காணப்பட்டன.

வெங்காயம், பச்சைமிளகாய் போன்றவற்றைத் தவிர ஏனைய மரக்கறிகளின் விலைகள் வெகுவாகக் குறைவடைந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

கத்தரிக்காய் கிலோ 50 ரூபாவாகவும், கரட் கிலோ70 ரூபாவாகவும், கோவா கிலோ 60 ரூபாவாகவும், தக்காளிப்பழம் கிலோ 100 ரூபாவாகவும், பூசணிக்காய் கிலோ 25 ரூபாவாகவும், வெண்டிக்காய் கிலோ 50 ரூபாவாகவும், சிறிய வெங்காயம் கிலோ 80 ரூபாவாகவும், பச்சை மிளகாய் கிலோ 120 ரூபாவாகவும் திருநெல்வெலி சந்தையில் நேற்று விற்பனை செய்யப்பட்டன. (04-224)

# ஜனாதிபதித் தேர்தல் காரணமாக யாழ்.வரும் பயணிகள் எண்ணிக்கையில் வீழ்ச்சி

யாழ்ப்பாணம்,ஜன.25

யாழ்.குடாநாட்டுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை கடந்த சில தினங்களாகத் திடீரென வீழ்ச்சியடைந்து காணப்படுகின்றது.

எதிர்வரும் 26 ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளதாலேயே பயணிகளின் வருகை இவ்வாறு வீழ்ச்சியடைவதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.ஏ- 9 வீதி திறக்கப்பட்டதிலிருந்து கடந்த வாரம் வரை பெரும் எண்ணிக்கையான பயணிகள் தென்னிலங்கையிருந்து குடாநாட்டுக்குப் படையெடுத்திருந்தனர்.

ஆயினும் ஜனாதிபதித் தேர்தல் நெருங்கியுள்ள சமயத்தில் தென்னிலங்கையிலிருந்து வரும் பயணிகளின் வருகை மிகமிகக் குறைவாகவே காணப்படுகின்றது.

(04-224)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**



உற்சாகமான அனுபவங்களைப் பெறலாம். வீடு, நிலம் தொடர்பான விடயங்களில் கவனம் அவசியம். உங்களுக்கு விரோதமாக செயல்படும் ஒருவரை அறிந்து கொள்வீர்கள். சில விடயங்களில் மற்றவர்களை முந்திக் கொண்டு செயல்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம்.

**இடபம்**



பலநாள் குழப்பம் ஒன்று முடிவிற்கு வரும். எதிர்பாராத செலவுகளால் பிறரிடம் பணம் கைமாத்து வாங்கலாம். உற்றார் உறவினர்கள் உங்களின் எண்ணம் போல் நடந்து கொள்வர். நினைத்தது நடக்க வேண்டும் என பிரார்த்தனைகளை மேற்கொள்வீர்கள். எதிர்பார்த்த விடயம் ஒன்றில் ஏமாற்றத்தைச் சந்திக்கலாம்.

**மிதுனம்**



பணவரவுகளால் கையில் காசு பணப்புழக்கம் அதிகரிக்கும். நிறுத்தி வைத்த வேலை ஒன்று இன்று சுறுசுறுப்பாக செய்து முடிப்பீர்கள். பிள்ளைகளின் சின்னச்சின்ன ஆசைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். விருந்து, விசேடங்களால் வீட்டில் கலகலப்பு குடிகொள்ளும். பால்ய நண்பர் ஒருவரை பாதையில் சந்திக்கலாம்.

**கடகம்**



தொட்ட காரியங்கள் துளிர்விட்டு வளரும் நாள். அனுபவம் உள்ளவர்களின் ஆலோசனை கேட்டு நடப்பீர்கள். கொடுத்த வாக்குறுதியை காப்பாற்றுவீர்கள். நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த ஒருவர் உங்களைத் தேடி வரலாம். மற்றவர்கள் பெருமையாக நினைக்க வேண்டும் என்பதற்காக சில வேலைகளைச் செய்வீர்கள்.

**சிங்கம்**



வயிறு, வாயு உபாதைகளுக்கு ஆட்படலாம். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். கடன் நிலுவைகளை கண்டிப்புடன் கேட்டு வாங்குவீர்கள். சிலரை நம்பி ஒப்படைத்த காரியங்கள் கைநழுவிப் போகலாம். குடும்ப உறுப்பினர்களுக்குத் தெரிந்த ஒருவர் உங்களுக்கும் அறிமுகமாகலாம்.

**கன்னி**



ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆட்படலாம். உறவினர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பது தள்ளிப் போகலாம். ஒன்றுக்கு மேற்பட்ட வேலைகளை ஒரே நேரத்தில் செய்ய நேரிடலாம். வீண் பேச்சுக்கள் பேசி நேரத்தை வீணடிப்பீர்கள். ஆசைப்பட்டு சில பொருள்களை வாங்கியும் அதில் திருப்தி இருக்காது.

**துலாம்**



உங்களுக்காகவோ அல்லது குடும்பத்தினருக்காக ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். வெளியூர் பயணங்கள் செல்ல நேரிடலாம். ஓய்வு எடுக்க நினைத்தாலும் முடியாத அளவுக்கு, அடுக்கடுக்காகப் பல வேலைகளைச் செய்வீர்கள். உறவினர்களை உபசரிக்க கணிசமான பணத்தை செலவிடலாம்.

**விருச்சிகம்**



தந்தை தொடர்பான விஷயங்களில் விட்டுக் கொடுத்துச் செல்வீர்கள். பொழுது போக்கு விஷயங்களில் நாட்டம் செல்லும். உறவினர் தொடர்பான முக்கிய தகவல் ஒன்றை கேட்கலாம். பெண்கள் வகையில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம். உங்களின் தவறு ஒன்றை மறைத்து மற்றவர்களிடம் நல்லவர்கள் போல நடப்பீர்கள்.

**தனுசு**



சோதனைகளை எதிர்கொள்ள நேரிடலாம். உங்களிடம் சிலர் கடனுதவி கேட்கலாம். மறதியைத் தவிர்த்து எதிலும் முன்யோசனையுடன் செயல்பட வேண்டும். உங்களுடன் பேச விரும்பும் ஒருவரி டம் நீங்கள் பேச விரும்பாமல் தவிர்க்கலாம். சங்கடம் தரும் அல்லது சந்தோஷம் தரும் செய்தி ஒன்றை கேட்கலாம்.

**மகரம்**



கோபம், வேகம் தவிர்த்து நிதானமாக செயல்பட வேண்டும். விலகிச் சென்ற சொந்தங்கள் திரும்ப வந்து சேரும். திட்டமிட்ட காரியம் ஒன்றில் மாற்றங்கள் செய்யலாம். நீங்கள் கேட்ட உதவியைச் செய்ய மனம் இல்லாமல் சிலர் கையை விரிக்கலாம். நன்றி மறந்த ஒருவரை நினைத்து வேதனைப்படுவீர்கள். விரக்தி அடையும் நாள்.

**கும்பம்**



நல்லவர்கள் சி[illegible]ரின் உதவி கிட்டும். பழைய பொருள்களை மாற்றிப் புதிய பொ[illegible]ருள்கள் வாங்கலாம். சந்தோஷ செய்தி கேட்கலாம். நண்பர்கள் ஆதாயம் பெற நீங்கள் உதவிக்கரமாக இருப்பீர்கள். விருப்பமான உணவு வகைகளைச் சாப்பிடுவதில் நாட்டம் செல்லும். சோர்வின்றி சுறுசுறுப்பாக செயல்படுவீர்கள்.

**மீனம்**



முடிந்து விட்டதாக நினைத்த பிரச்சினை ஒன்று மீண்டும் தலை தூக்கி குழப்பத்தை உண்டாக்கலாம். எதிர்பாராத விதமாக உறவினர் ஒருவரின் வீட்டிற்கு செல்லலாம். தெய்வ காரியங்களுகாக சிறிதளவு செலவு செய்வீர்கள். அடுத்த சில நாள்களுக்கு நடக்க உள்ள காரியங்களுக்காக முன்னேற்பாடு செய்வீர்கள். எதிர்பாராத செலவினங்கள் ஏற்படும்.

---

**இளைய சமுதாயத்தின்..........**

(11ஆம் பக்கத்தொடர்ச்சி)

பாடத்தெரிவு எனப்படும்போது, அழகியல் பாடங்களின் தெரிவு தொழில் நுட்பபாடங்களின் தெரிவு மற்றும் விருப்புக்குரிய பாடங்களின் தெரிவு என்பவை இடைநிலை வகுப்புக்களில் முக்கியம்பெறுகின்றன. இப்பாடத் தெரிவுகளின் போது மாணவனின்விருப்பு, ஆற்றல், குடும் பப் பின்னணி என்பனவற்றுக்கு அமைவாக வழிகாட்ட வேண் டும். துரதிஷ் டவசமாக சில சமயங்களில் பாடசாலை கற்பித்தல் வள ஆளணி மற்றும் பௌதீக காரணிகள் மற்றும் அதிபர், ஆசிரியர்களின் விருப்பு வெறுப் புகளும் செல்வாக்கு செலுத்தி விடுகின்றன.

ஆரம்பகாலந்தொட்டு கபொ.த. உயர்தர பாடத்தெரிவுகளில் பிழையான தெரிவுகளும் இடம்பெற்றுவருகின்றன. இதனால் பரீட்சையில் தோல்வி அடைந்தபின் பாடத்துறைமாறுவோரும் உண்டு. மூன்று தடவையும் ஒரே பாடத் துறையில் தோற்றி சித்தியடையத் தவறி க.பொ.த உயர்தர தகைமையின்றி அல்லற்படுவோரும் உண்டு. தற்காலத்தில் க.பொ.த [சா/த] சித்தியடைந்து உயர்தரம் நுழையும் மாணவர்களுக்குப் பாடத்தெரிவுகள் தொடர்பான வழிகாட் டல்கள் வழங்கப்படுகின்றன. இருந்தும் பிழையான தெரிவுகள் இடம்பெற்று விடுகின்றன.

கல்வியியல் கல்லூரிகளுக்கான விண்ணப்பம் நிரப்புதல் மற்றும் பாடத்தெரிவுகளின் போதும், பல்கலைக்கழக அனுமதிப் படிவம் பூரணப்படுத்தும் போதும் கல்வி வழிகாட்டல் மிக அவசியமானதாகும். சர்வதேச ரீதியிலான கற்கை நெறிகளுக்கும் (CIMA, IELTS) முறையான கல்வி வழிகாட்டல் அவசியம். உயர் தொழில் நுட்ப நிறுவனங்கள், தொழில்நுட்பக் கல்லூரிகள், தொழிற்பயிற்சி அதிகாரசபை மற்றும் ஏனைய நிறுவனங்களால் நடத்தப்படும் பயனுள்ள கற்கை நெறிகள் பற்றி மாணவர்களுக்குத் தெரியப்படுத்தி அவர்கள் அக்கற்கை நெறிகளை தொடர ஆவன செய்ய வேண்டும்.

பல்கலைக்கழகத்தில் கற்கும் போது, தொழிற்சந்தையில் கேள்வியுள்ள பாடத்துறைகளைத் தேர்வு செய்து கற்கவேண்டும். அத்துடன் தமது இலக்குகளையும் கருத்தில் கொள்ள வேண்டும். இச்சந்தர்ப்பத்தில் இன்னொன்றையும் இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டியுள்ளது. கல்வித்துறையில் பாரிய வளர்ச்சியை கண்டுள்ள இந்தியாவில், மாணவர்கள் பத்தாம் தரத்தில் சித்தியடைந்ததும் தமது உயர் கல்வியைத் தொடரும் முகமாக ''வழிகாட்டலும் ஆலேசனையும்'' (Career guidance and Counselling) வகுப்புகள் ஒன்றரை மாதங்கள் வரையில் நடைபெறுகின்றன. இவ்வகுப்புகளில் உயர்கல்வி தொடர்பான பூரண விளக்கம் வழங்கப்படுகின்றது. இதனால் மாணவனின் உயர்கல்வித் தெரிவு இலகுவாக்கப்படுவதுடன், பிழையற்ற தெரிவுகளும் தவிர்க்கப்படுகின்றன. +1,+2 நிலையைக் கடந்து உரிய தகுதிப்புள்ளிகளுடன் பாடசாலைகளிலிருந்து வெளியேறும் மாணவர்களை அரவணைத்துக்கொள்ள அரசபல்கலைக் கழகங்களின் நேரடிப் பார்வையின்கீழ் தனியார் கல்லூரிகள் காத்திருக்கின்றன.

இந்திய மாணவர்களின் கல்வி முன்னேற்றம் கண்டு அவுஸ்திரேலிய மாணவர்களும், அமெரிக்க மாணவர்களும் கலங்கிப்போயுள்ளனர். அண்மையில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா அமெரிக்க மாணவர்களுக்கு கல்வி வழிகாட்டலொன்றை வழங்கினார். "இந்திய மாணவர்களும், சீனமாணவர்களும் கணனிகளில் புதிய கண்டுபிடிப்புக்களைச் செய்து கொண்டிருக்க, அமெரிக்க மாணவர்கள் கணனிகளில் வீடியோக்கேம்கள் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள் என்றும் அவர்களை அக்கறையாகப்படிக்குமாறும்" குறிப்பிட்டிருந்தார்.

ஒழுக்க/அறநெறி வழிகாட்டல் (Moral guidance)

இக்கட்டுரையின் ஆரம்பநோக்கமே ஒழுக்கத்திற்கான வழிகாட்டலாகும். மாணவர்களின் ஒழுக்கம் தற்காலத்தில் பெருமளவில் குறைவடைந்து செல்வதாக கூறப்படுகின்றது. தற்கால ஒழுக்கக் குறைபாடுகளாவன;

- ★ பெற்றோர், ஆசிரியர் போன்ற பெரியவர்களை மதியாமை
- ★ பொய்பேசுதல்
- ★ களவெடுத்தல்
- ★ தத்தமது சமய நெறிகளைப்பின்பற்றாமை [கோயில்கள், தேவாலயங்கள், விகாரைகள், பள்ளிவாசல்களுக்குச் செல்லாமை]
- ★ பொறாமைப்படுதல்
- ★ வன்முறைக்கலாசாரம்
- ★ தகாத வார்த்தைப்பிரயோகங்கள்
- ★ புகைப்பிடித்தல்
- ★ மதுவுக்கு அடிமையாதல்
- ★ போதைப்பொருள் பாவனை
- ★ பாலியல் நெறிபிறழ்வுகள்
- ★ கணனி/ இணையம் சார் குற்றங்கள் (Cyber crimes)
- ★ பரீட்சை முறைகேடுகள்

இத்தீய நடத்தைகளில் மாணவர் ஈடுபடாது தடுக்க பின்வரும் நிறுவனங்கள் கண்ணும் கருத்துமாக செயற்பட வேண்டும்.

I) குடும்பம்
I) சமூகம்
III) பாடசாலை
IV) தனியார்கல்வி நிறுவனங்கள்
V) சமய நிறுவனங்கள்
VI) சமூக நிறுவனங்கள்
VII)மற்றும் இதனுடன் தொடர்புடைய அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள்.

மேற்படி நிறுவனங்கள் சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவு பொலிஸாருடன் ஒத்துழைத்துச் செயலாற்றுவதன் மூலம் எமது மாணவர்களை நல்வழிப்படுத்தலாம்.

மாணவர்களுக்கு, இளைய சமுதாயத்துக்கு பொருத்தமான உளமேம்பாடு, தொழில், கல்வி மற்றும் அறநெறி வழிகாட்டல்களை வழங்குவதனூடாக எதிர்கால சமுதாயத்தை வழமுள்ளதாக உருவாக்கிக்கொள்ள முடியும்.

ஆனந்தமயில் நித்திலவர்ணன்
B.Sc.with Education (Hons),M.Ed
ஆசிரியர்
யாழ்.இந்துக்கல்லூரி.

**வீடு தேவை**

இளைப்பாறிய பாடசாலை அதிபரான கணவன், மனைவி இருவருக்கு யாழ். நகரில் இருந்து 3 மைல் சுற்றாடலுக்குள் மூன்று அறையுடன் உள்ள வீடு வாடகைக்கு உடன் தேவை:

தொடர்பு : 0773895325

**முதலாம் ஆண்டு நினைவு**

பிறப்பு 22 ★ 06 ★ 1951



இறப்பு 04 ★ 02 ★ 2009

**திருமதி வல்லிபுரம் தங்கமலர்**

(திதி:-25.01.2010)



நாம் பார்க்கும் இடமெங்கும்
நிறைந்திருந்த எம் அம்மா
எங்கிருந்தோ வந்த செல்லில்
கடைசி நேரம் கூட
முகம் பார்க்க முடியாமல் போனதேனோ
உன் விம்பம் காணத் துடிக்கின்றோம்
கண்ணில் நுழைந்திடம்மா.

நி.மு:-ஆழியவளை,
தாளையடி.
த.மு:-பொலிகண்டி.
(94679)

தகவல்:
குடும்பத்தினர்.

**உத்தியோக பூர்வ முடிவுகள்**

சப்பிரி வாசனா சம்பத்

சீட்டிழுப்பு இலக்கம் 533
திகதி 2010/01/23

சப்பிரி இலக்கம் 04 | வெற்றி இலக்கங்கள் 05 17 18 24

| | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|
| [illegible] | [illegible] | ரூ. 21,802,010.40 [illegible] | — |
| [illegible] | [illegible] | ரூ. 2,000,000.00 [illegible] | 01 |
| [illegible] | [illegible] | ரூ. 50,000.00 [illegible] | 09 |
| [illegible] | 1 [illegible] | ரூ. 2,000.00 [illegible] | 233 |
| [illegible] | [illegible] | ரூ. 1,000.00 [illegible] | 445 |
| [illegible] | 1 [illegible] | ரூ. 40.00 [illegible] | 11,416 |
| [illegible] | [illegible] | ரூ. 40.00 [illegible] | 6,606 |
| [illegible] | 1 [illegible] | ரூ. 20.00 [illegible] | 164,800 |
| [illegible] | [illegible] | ரூ. 20.00 [illegible] | 26,411 |

[illegible] ரூ. 7,906,100.00

[illegible] ரூ 22,045,540.80

தேசிய லொத்தர் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதம் அடித்து அசத்தினார் எட்வின் எடின் இன்னிங்ஸ் வெற்றி யாழ். சென்றலுக்கு

வலி.வடக்கு, ஜன.25

யாழ். மாவட்டப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ். மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்பட்டு வரும் 19 வயதுப் பிரிவினர்களுக்கான சுற்றுப் போட்டியில் ஆட்டமொன்றில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி வீரன் எட்வின் எடின் 2010 ஆம் ஆண்டில் முதலாவது சதத்தை அடித்து கல்லூரியை இன்னிங்ஸ் வெற்றிக்கு வழிசமைத்துக் கொடுத்துள்ளார்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடை பெற்ற போட்டி ஆட்டத்தில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய விக்ரோறியாக் கல்லூரி 33.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 68 ஓட்டங்களைப்பெற்றுக் கொண்டது.

கோவர்த்தனன் 15, கிரிசாந் 14, முகுந்தன்11 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டதுடன் உதிரிகளாக 04 ஓட்டங்களும் பெறப்பட்டன.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியைச் சேர்ந்த தர்சன் 11.4 ஓவர்கள் பந்து விசி 03 ஓட்டமற்ற ஓவர்களுடன் 18 ஓட்டங்களுக்கு 08 விக்கெட்டுக்களையும் யுவேந்திரன் 03 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 04 ஓட்டங்களுக்கு ஒருவிக்கெட்டையும் ஜெரிக்துசாந் 21 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 71.2 ஓவர்களில் 09 விக்கெட்டுக்களை இழந்து 329 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

எட்வின் எடின் 166, ரதீசன் 34, ஜெரிக்துசாந் 20 ஓட்டங்களை பெற்றுக் கொண்டதுடன் உதிரிகளாக 46 ஓட்டங்களும் பெறப்பட்டன.

விக்ரோறியாக் கல்லூரியைச் சேர்ந்த அசோக் கிருஷ்ணா 9.2 ஓவர்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 34 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும் சிவபாலன் 13 ஓவர்கள் பந்து வீசி 63 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் முகுந்தன், நகுலேந்திரன், கவில்சாந் முறையே 34,35,50 ஓட்டங்களைத் கொடுத்து தலா ஒருவிக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

இரண்டாவது இன்னிங்ஸ்சில் துடுப்பெடுத்தாடிய விக்ரோறியாக் கல்லூரி 46.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 90 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

கிரிசாந் 26, சுதர்சன்13 , நகுலேந்திரன் 11 ஓட்டங்களை பெற்றுக் கொண்டதுடன் உதிரிகளாக 19 ஓட்டங்களும் பெறப்பட்டன.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியைச் சேர்ந்த தர்சன் 9.3 ஓவர்கள் பந்து வீசி 03 ஓட்டமற்ற ஓவர்களுடன் 13 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும் கோபிகன் 13 ஓவர்கள் பந்து வீசி 04 ஓட்டமற்ற ஓவர்களுடன் 18 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும் தனுஜன் 09 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 14 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் ஜெரிக்துசாந் 10 ஓவர்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 15 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள். (1-86-23)

# பாடசாலைகளுக்கு இடையில் அடுத்தமாதம் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம், ஜன.25

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் பாடசாலைகளுக்கு இடையில் 2010 ஆம் ஆண்டு நடத்தவிருக்கும் 17 வயது பிரிவினருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி அடுத்த மாதம் இறுதிப் பகுதியில் இடம்பெறவிருக்கிறது.

இப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்பாதாக ''ம.பேர்ட்டி பனிஸ்ரர், இணைப்பாளர், புனித பத்திரிசியார் கல்லூரி,'' அல்லது ''மு.பிரான்சிஸ், செயலாளர், யாழ். உதைபந்தாட்ட லீக், இல. 70, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்'' என்னும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (1-23)

# றோட்டறக்ட் நடத்திய கரப்பந்தாட்டத்தில் கே.கே.எஸ்., ஆவரங்கால் அணிகள் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜன.25

யாழ். பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையின் அனுசரணையுடன் யாழ். நகர் மைய றோட்டறக்ட் கழகம் நடத்திய கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் ஆண், பெண் இருபாலாருக்குமான இறுதியாட்டத்தில் பெண்கள் பிரிவில் கே.கே.எஸ். விளையாட்டுக்கழகமும், ஆண்கள் பிரிவில் ஆவரங்கால் மத்திய விளையாட் டுக் கழகமும் சம்பியனாகின.

கடந்தவாரம் றாக்கா வீதியில் அமைத்துள்ள யாழ் மாவட்ட கரப்பந்தாட்டச் சங்க மைதானத்தில் இடம்பெற்ற இந்த இறுதி யாட்டத்தில் பெண்கள் பிரிவில் கே.கே.எஸ். விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சங்கானை யுத் கழகம் மோதியது.

ஐந்து செற்களை கொண்ட இந்தப் போட்டியில் கே.கே.எஸ். விளையாட்டுக் கழக அணி 18:25, 25:17, 25:13, 25:21 என்ற செற்கணக்கில் சங்கானையுத் கழக அணியை வெற்றி கொண்டது.

தொடர்ந்து இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் அணி மோதியது.

ஐந்து செற்களை கொண்டதாக அமைந்த போட்டியில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணி தொடர்ந்து மூன்று செற்களில் 25:18, 25:21, 29:19 என்ற புள்ளி அடிப்படையில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணியை வெற்றி கொண்டது. (1-23)

# யங் பைற்றர் விளையாட்டுக் கழகம் நடத்திவரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் சில ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஜன.25

யங் பைற்றர் விளையாட்டுக் கழகம் நடத்திவரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் வெற்றிபெற்ற அணிகளின் விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

ஈச்சமோட்டை பச்சை விளையாட்டுக் கழக அணிக்கும் கடல்நட்சத்திர விளையாட்டுக்கழக அணிக்கும் இடையில் இடம் பெற்ற ஆட்டத்தில். முதலில் துடுப்பெடுத்தாடிய ஈச்சமோட்டை பச்சை விளையாட்டுக்கழக அணி இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 69 ஓட்டங்களைப் பெற்றது.

ஆட்டம் இழக்காமல் சால்டன், சங்கர் முறையே 31,19 ஓட்டங்களையும் வேந்தன் 17 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் கடல்நட்சத்திர அணிவீரர் அனுசன் 12 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டினை வீழ்த்தினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கடல்நட்சத்திர விளையாட்டுக்கழக அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 61 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

அனுசன் 29 ஓட்டங்களையும் குட்டி 9 ஓட்டங்களையும் தமது அணிக்காக பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் ஈச்சமோட்டை விளையாட்டுக்கழக அணி (பச்சை) வீரர்கள் சுலக்ஸன் 9 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும், சால்டன் ஆறு ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

ஈச்சமோட்டை விளையாட்டுக்கழக அணி 8 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

அலைகள் விளையாட் டுக் கழக அணிக்கும் ஸ்ரார் போயிஸ் (ஏ) விளையாட்டுக் கழக அணிக்கும் இடையில் இடம்பெற்ற மற்றொரு ஆட்டத்தில் - முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரார் போயிஸ் (ஏ) அணி நான்கு விக்கெட்டுக்களை இழந்து 60 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

வாசன் 17 ஓட்டங்களையும், வீபூசன், மதுசன், முறையே 10 ஓட்டங்களை தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் அலைகள் விளையாட்டுக் கழக அணி வீரர்களான கிளிங்ரன் 10 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் ஜனுசன் 13 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பொடுத்தாடிய அலைகள் விளையாட்டுக்கழக அணியினர் சகல விக்கெட்டுக்களையும் இழந்து28 ஓட்டங்களை மட்டும் பெற்றுக் கொண்டனர்.

விஜய் 14 ஓட்டங்களையும், ஜனுசன் 6 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் ஸ்ரார் போயிஸ் (ஏ) விளையாட்டுக்கழக வீரர்களான வாசன், ஒரு ஓட்டத்தைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் யசிந்தன் இரண்டு ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதில் ஸ்ரார் போயிஸ் (ஏ) விளையாட்டுக்கழக அணி 48 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

உதய சூரியன்(பி) விளையாட்டுக்கழக அணிக்கும் லயன்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையில் இடம் பெற்ற ஆட்டத்தில் - முதலில் துடுப்பெடுத்தாடிய உதயசூரியன் (பி) விளையாட்டுக் கழக அணி ஒரு விக்கெட்டை இழந்து 68 ஓட்டங்களை பெற்றது.

சுயந்தன், சஞ்ஜேய் ஆகியோர் முறையே ஆட்டம் இழக்காமல் 21,13 ஓட்டங்களையும், ஜீவராஜ் 12 ஓட்டங்களையும் தமது அணிகளுக்காக பெற்றுக் கொடுத்தனர். லயன்ஸ் ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி வீரர் வெஸ்லி 9 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய லயன் ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 52 ஓட்டங்களை மட்டும் பெற்றது. பந்து வீச்சில் உதய சூரியன் விளையாட்டுக்கழக வீரர்களான சயந்தன் 5 ஓட்டங்களை, கொடுத்து ஒரு விக்கெட்டையும் ஜீவராஜ் 4 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

உதய சூரியன் 'பி' அணியினர் 17 ஓட்டங்களினால் வெற்றிபெற்றனர். திருமகள் விளையாட்டுக்கழக அணிக்கும் கே.எஸ். கே.எஸ்.சி விளையாட்டுக்கழக அணிக்குமிடையே இடம்பெற்ற ஆட்டத்தில் -

முதலில் துடுப்பெடுத்தாடிய திருமகள் அணி மூன்று விக்கெட்டுகளை இழந்து 65 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

பத்மமுரளி 28 ஓட்டங்களையும் பூசா 25 ஓட்டங்களையும் தமது அணிக்காக பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் கே.எஸ்.கே.எஸ்.சி விளையாட்டுக்கழக அணிவீரர்களான தமிழ் 8 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுகளையும் கிருபன் 13 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கே.எஸ். கே.எஸ்.சி விளையாட்டுக்கழக அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 52 ஓட்டங்களைப் பெற்றது.

தமிழ் ஆட்டமிழக்காமல் 33 ஓட்டங்களையும் கிருபா 9 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர். பந்து வீச்சில் திருமகள் விளையாட்டுக்கழக அணி வீரர்களான சுஜீவன் 8 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் முரளி 6 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் தினேஸ் ஒரு ஓட்டத்தை கொடுத்து ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். திருமகள் விளையாட்டுக்கழக அணி 13 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. (1-23)



யாழ். பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையின் அனுசரணையுடன் யாழ். நகரமைய றோட்டறக்ட் கழகம் நடத்திய ஆண், பெண் இருபாலாருக்குமான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் அண்மையில் யாழ். றக்காவீதியில் அமைந்துள்ள யாழ். மாவட்டக்கரப்பந்தாட்டச்சங்க மைதானத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழக மக்கள் வங்கிக்கிளையின் முகாமையாளர் நா.நாகேஸ்வரன் அவர்களுக்கு வீராங்கனைகள் அறிமுகம் செய்யப்படுவதனை முதலாவது படத்திலும் இறுதிப்போட்டியில் ஆக்ரோசத்துடன் விளையாடும் வீரர்களையும், வீராங்கனைகளையும் இறுதி இரண்டு படங்களிலும் காணலாம். (படங்கள்: தமிழினியன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

## விஸ்வலிங்கம் சிறீஹரன்

(உத்தரவுபெற்ற நில அளவையாளர்)

(94659)

எமது சங்கத்தின் நீண்ட நாள் உறுப்பினரும்
முன்னாள் செயலாளருமாகிய
விஸ்வலிங்கம் சிறீஹரன் அவர்களின்
மறைவையொட்டி எமது சங்கத்தின் சார்பில் இரங்கலைத்
தெரிவிப்பதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த
அனுதாபங்களையும் தெரிவிக்கின்றோம்.

உத்தரவு பெற்ற நில அளவையாளர் சங்கம் (வடபகுதி).

# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2090 திகதி 23 – 01 – 2010

ஆங்கில எழுத்திற்கும் Q

வெற்றி எண்கள் 03 28 33 45

போனஸ் இல: 55

ஜக்பொட் பரிசு ரூ. 14,274,450/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 192756 | 20/- | 3,855,120/- |
| 2 இல | 13852 | 100/- | 1,385,200/- |
| 3 இல | 291 | 1,000/- | 291,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7766 | 40/- | 310,640/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 505 | 1,000/- | 505,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 12 | 10,000/- | 120,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 14,274,450/- | - |
| 1 இல + போனஸ் இல | 9102 | 100/- | 910,200/- |
| 2 இல + போனஸ் இல | 424 | 500/- | 212,000/- |
| 3 இல + போனஸ் இல | 05 | 100,000/- | 500,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 432 | 200/- | 86,400/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 26 | 1,500/- | 39,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 9,214,560/- |
| தங்க நாணயங்களின் பெறுமதி | 10 | | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 225182 | | 9,814,560/- |

ஆலிந்தயே வாசனா வெற்றியாளர்கள்
தங்கக்காசு வெற்றியாளர் - K. சுசன்தா மாலினி – தெகடன.
கையடக்கத் தொலைபேசி வெற்றியாளர் - N.E. சின்தக ஜயசேகர – களுத்தறை தெற்கு.

2 தங்க நாணயங்கள் வெற்றி பெற்ற டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| பொலன்னறுவை | 301560514-0-41 |
| கம்பஹா | 301569484-9-18 |
| கம்பஹா | 301555907-3-08 |
| கொழும்பு | 301556027-6-43 |
| இரத்தினபுரி | 301569056-4-27 |
| திருகோணமலை | 301569283-7-19 |
| மாத்தறை | 301556870-7-20 |
| நுவரேலியா | 301560600-4-30 |
| களுத்துறை | 301562201-6-15 |
| குருணாகல் | 301553046-6-36 |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
ரூ. 14,800,425/-

ஊதா நிற டிக்கட்டுகள் 2010 ஜனவரி 27 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே. 2333546/7

# புனித காணிக்கை மாதா தேவாலய வருடாந்த பெருந்திருவிழா

வண்ணை, ஜன.25

யாழ். பாங்ஷால் வீதியில் அமைந்துள்ள யாத்திரை தலமான புனித காணிக்கை மாதாதேவாலய வருடாந்த பெருந்திருவிழா நாளை திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாக உள்ளது.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி நற்கருணை விழாவும், 3ஆம் திகதி பெருந்திருவிழாவும் நடைபெறும்.

தினமும் மாலை 4 மணிக்கு செபமாலையுடன் தொடங்கி பிரசங்கம், திருப்பலி என்பன இடம் பெறும்.

பெப்ரவரி மாதம் 3 ஆம் திகதி புதன் கிழமை மாலை 5 மணிக்கு திருச்சொரூப பவனிநடைபெற்று முடிவில் மாதா சொரூப ஆசீர் வழங்கலுடன் வருடாந்த மஹோற்சவக் கொண்டாட்டங்கள் நிறைவு பெறும்.

(201-160)

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு

## மலேசியாவிற்கு மிக விரைவில் பயணம்

மலேசியா நாட்டில் எலக்ரோனிக் ஏனைய உதிரிப்பாகங்கள் மற்றும் அது போன்ற ஏனைய சகல விதமான உதிரிப்பாகங்களும் உற்பத்தி நிறுவனமான அர்சொபா நிறுவனத்திற்குக் கைத் தொழிலாளிகள் 100 பேர் மிக விரைவில் தேவை.

சம்பளம் மலேசியா ரிங்கிட் 910
இலங்கை ரூபா 30,940

அதற்கு மேலாக மேலதிக கொடுப்பனவு மலேசியாநாட்டின் அரசாங்க சட்டதிட்டத்திற்கமைய வழங்கப்படும்.

ஒப்பந்த காலம் 03 வருடம்

தங்குமிட வசதி மற்றும் மருத்துவ வசதிகள் மலேசியா தொழில் சட்டத்திற்கமைய இலவசமாக வழங்கப்படும்.

03வருடகால இறுதியில் திரும்பி வருவதற்கான விமானடிக்கட் அந்நாட்டு நிறுவனத்தின் பொறுப்பில் உள்ளது.

கடவுச்சீட்டு சகல நாட்டுக்கும் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.

தயவு செய்து கடவுச் சீட்டுடன் கடவுச்சீட்டளவு புகைப்படம் 06 உடன் உடனே சமுகமளிக்கவும்.

பஸ்மினா டிரேட் எக்ஸ்சென்ச்
தனியார் நிறுவனம்.
இலக்கம் 121/1, மாளிகாகந்த வீதி,
மருதானை, கொழும்பு 10.
தொ.பேசி: 0112667568
பெக்ஸ்: 011 2682467
ஹொட் லைய்ன்: 0777881356

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின்
இலக்கம் : AC/1804/ADV
L.L.B, No: 790

(564355)

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியை திருமதி ரோகினி குலசிங்கம் அவர்களது அன்புக் கணவர்

## க.குலசிங்கம்

அவர்களின் திடீர் மறைவு, எமக்கு அதிர்ச்சியைத் தந்துள்ளது. அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி.

(94669)

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

1159 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

மிதுனம் 16 27 28 37

22-01-2010

ஜக்பொட் பரிசு ரூபா. 7,411,650/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 213,763 | 20/- | 4,275,260/- |
| 2 இலக்கங்கள் | 19,711 | 40/- | 788,440/- |
| 1 இல. + லக்கினம் | 19,497 | 60/- | 1,169,820/- |
| 2 இல. + லக்கினம் | 1,778 | 200/- | 355,600/- |
| 3 இலக்கங்கள் | 531 | 1000/- | 531,000/- |
| 3 இல. + லக்கினம் | 47 | 10,000/- | 470,000/- |
| 4 இலக்கங்கள் | 2 | 200,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 7,411,650/- | 7,411,650/- |
| மொத்தம் | | | 15,401,770/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 255,335 | . | 15,901,770/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,000,000/-

ஆலிந்தயே வாசனாவ
தங்கக்காசு வெற்றியாளர் : ஏ.எம்.சி.அபேசிங்க கண்டி
கைத்தொலைபேசி வெற்றியாளர் : எம்.நிவர்தனா ஷிரோமி அபேசுந்தர

2010 ஜனவரி 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நீல நிற டிக்கட்டுக்கள் சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.


அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| பொலன்னறுவை | 500915522-7-35 |
| கண்டி | 500915761-0-24 |
| குருநாகல் | 500907580-0-15 |
| கொழும்பு | 500909497-3-00 |
| அனுராதபுரம் | 500920689-0-47 |

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02

# துயர் பகிர்வு



கலாநிதி

## வல்லிபுரம் கந்தசாமி

(சைவப்புலவர், சிவநெறிச் செம்மல், சிவநெறிக் காவலன், சைவபூஷணம், முன்னாள் தலைவர் - சைவ பரிபாலன சபை, முன்னாள் பரீட்சைச் செயலாளர் - சைவ பரிபாலன சபை)

வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பகவிநாயகர் கோயிலே தனது மூச்சாக ஐம்பது வருடங்களுக்கு மேலாக சமயப்பணி பல செய்தவரும், சைவ சமய அபிவிருத்திக் கழகத்தை ஸ்தாபித்தவருமாகிய கலாநிதி வல்லிபுரம் கந்தசாமி அவர்கள் இயற்கையெய்தியதைக் கேள்வியுற்று நாம் ஆழ்ந்த கவலையடைகின்றோம். அன்னாரது ஆத்மா சாந்தியடைய கற்பகவிநாயகரை வேண்டி நிற்பதோடு அன்னாரது குடும்பத்தவருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

366, K.K.S. வீதி,
யாழ்ப்பாணம்.

தர்மபரிபாலன சபை,
சைவ சமய அபிவிருத்திக் கழகம்,
வண்ணை சாந்தையர் மடம் கற்பக விநாயகர் கோயில்.

(94658)

# மஹஜன சம்பத

මහජන සම්පත
மஹாஜன சம்பத
Mahajana Sampatha

22.01.2010

அதிர்ஷ்டக முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2200

வெற்றி எழுத்து P

வெற்றி எண்கள் 2 2 3 7 7 3

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | | | | | | | | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | P | 2 | 2 | 3 | 7 | 7 | 3 | ரூபா.14,747,107/= | பரிசு - |
| 1 பரிசுகள் | | 2 | 2 | 3 | 7 | 7 | 3 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 01 |
| 2 பரிசுகள் | | | 2 | 3 | 7 | 7 | 3 | ரூபா. 100,000/= | பரிசுகள் 13 |
| 3 பரிசுகள் | | | | 3 | 7 | 7 | 3 | ரூபா. 10,000/= | பரிசுகள் 136 |
| 4 பரிசுகள் | | | | | 7 | 7 | 3 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1394 |
| 5 பரிசுகள் | | | | | | 7 | 3 | ரூபா. 100/= | பரிசுகள் 13749 |
| 6 பரிசுகள் | | | | | | | 3 | ரூபா. 20/= | பரிசுகள் 136272 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | | | | | | | | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசுகள் | | 2 | 2 | 3 | 7 | 7 | | ரூபா. 10,000/= | பரிசுகள் 15 |
| 8 பரிசுகள் | | 2 | 2 | 3 | 7 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் 138 |
| 9 பரிசுகள் | | 2 | 2 | 3 | | | | ரூபா. 100/= | பரிசுகள் 1360 |
| 10 பரிசுகள் | | 2 | 2 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் 13611 |
| 11 பரிசுகள் | P | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் 54498 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 12,348,850.00


Rs. 16,067,624.00

தேசிய லொத்தர் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைய சமுதாயத்தில் இன்றைய முக்கியதேவை முறையான வழிகாட்டல் ஆலோசனை

விரைவாக ஏற்பட்டுவரும் அரசியல் பொருளாதார மற்றும் சமூக மாற்றங்களால் எமது இளைய சமுதாயம் குறிப்பாக மாணவ சமுதாயம் வழி தவறிப் போவதற்கான சந்தர்ப்பங்கள் முன்னைய காலங்களைவிட அதிகமாக உள்ளன. இந்த ஆபத்தை உணர்ந்து பெற்றோர்கள், ஆசிரியர்கள், தனியார் கல்வி நிறுவனங்களின் நிர்வாகத்தினர், சமய மற்றும் சமூக நிறுவனங்கள் என்பவற்றுடன் இந்நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் இதில் கூடிய கவனம் எடுக்க வேண்டியது, காலத்தின் கட்டாயமாகவுள்ளது. தற்காலத்தில் மாணவர்களைச் சூழவுள்ள ஆபத்துக்களாக பின்வருவனவுள்ளன.




இவ்வாறான ஆபத்துக்களால் மாணவர்களின் கல்வி பாழடிக்கப்படுகின்றது. யாழ். மாவட்டக் கல்வி அடைவுகள் வீழ்ச்சியடைந்து செல்கின்றன. இதை அண்மையில் யாழ்.மாவட்டத்திற்கு விஜயம் செய்திருந்த கல்வி அமைச்சர் சுட்டிக்காட்டியிருந்தார். இதற்கு பிரதான காரணம் மாணவர்களுக்கு கல்வியின் மீதான நாட்டம் குன்றிச் செல்வதுடன், மாணவர் ஒழுக்கப் பண்புகளும் வீழ்ச்சி அடைந்து செல்வதாகும்.

### கைத்தொலைபேசி, இணையம் என்பவற்றால் ஏற்படும் பிரச்சினைகள்

நவீன தொலைத்தொடர்பு சாதனங்கள் பல நன்மைகள் ஏற்படுத்திய போதும், அவை மாணவர்கள் மத்தியில் சில சிக்கல்களையும் ஏற்படுத்தி வருகின்றன. இலங்கையில் அதிகளவிலான கைத்தொலைபேசி பாவனையாளர்கள் உள்ள மாவட்டமாக யாழ்ப்பாண மாவட்டமே உள்ளது. கைத்தொலைபேசிகளை பாடசாலை மாணவர்கள் துஷ்பிரயோகம் செய்வதாக சிறுவர் மற்றும் பெண்கள் பாதுகாப்புப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். அண்மையில் தலைநகரின் பிரபல பாடசாலையொன்றின் மாணவி ஒருத்தி கையடக்கத் தொலைபேசியின் தீய கலாசாரம் காரணமாக தற்கொலை செய்துகொண்டுள்ளார். கிராமப் புறங்களில் கூட வெளிநாட்டுப் பாணியிலான குற்றச் செயல்கள் அதிகரித் துள்ளன.

சில பாடசாலைகளில் மாணவர்கள் கையடக்கத் தொலைபேசி புகைப்படக் கருவியால் ஆசிரியைகளையும் மாணவிகளையும் படம் எடுத்ததாகவும் அவற்றை இணையத்தளம் ஊடாகப் பயன்படுத்துவதாகவும் புகார்கள் வந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். பாடசாலைகளில் கைத்தொலைபேசிகள் முற்றாக தடை செய்யவேண்டியது காலத்தின் கட்டாயமாகும். பத்து ஆபாச இணையத்தளங்களை அரசாங்கம் அண்மையில் தடைசெய்துள்ளது.

### பாலியல்சார் நெறிபிறழ்வுகள்

அண்மையில் சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்த கருத்துக்கள் மிகவும் முக்கியமானவை. "இளம் வயதில் பிள்ளைகளுக்கும் பெற்றோருக்குமிடையில் இடைவெளி ஏற்படுகின்றது. பெற்றோர்கள் பாலியல் பாதுகாப்பு தொடர்பாகவோ, பழக்கவழக்கங்கள் தொடர்பாகவோ பிள்ளைகளுக்கு அறிவுரை வழங்குவதில்லை. முன்னைய காலத்துடன் ஒப்பிடும்போது தற்போது பெண் பிள்ளைகள் மிக இளவயதில் பூப்படைகின்றனர். அதேவேளை காலம் தாமதித்தே திருமணம் செய்துகொள்கின்றனர். இதற்கு இடைப்பட்ட காலங்களில் அவர்கள் வழிதவறிப்போகாதிருக்கவும், வயது வரும்வரை திருமணத்தையும் கர்ப்பத்தையும் தாமதப்படுத்தவும், எச். ஐ.வி. தொற்றுவதைத்தடுக்கவும், மற்றும் வாழ்க்கைத்திறன்களை கட்டியெழுப்பவும் வழிகாட்ட வேண்டும்" எனக் குறிப்பிடுகின்றார்.

### வழிகாட்டல் ஆலோசனைச் சேவையின் தேவை

தற்கால ஆபத்தான சூழலில் முறையான வழிகாட்டல் ஆலோசனை வழங்கவேண்டியது அவசியமாகவுள்ளது. பின்வரும் பிரிவுகள் துறைசார் வழிகாட்டல்களை அவ்வவ்துறை சார் நிபுணர்கள் வழங்கி எமது எதிர்கால சமுதாயத்தை வளமுள்ளதாக்குவோம்.

### உளவளத்துணை-சீர்மியம் -ஆலோசனை கூறல்(Counselling)

2007ஆம் ஆண்டு புள்ளி விபரங்களின்படி இலங்கையில் 69,026 மனநோயாளர்கள் இருப்பதாகவும், இவர்களில் 37,181 பேர் ஆண்கள் எனவும் 31,845 பேர் பெண்கள் எனவும் சுகாதார அமைச்சின் பேச்சாளர் குறிப்பிடுகின்றார்.

மன நோய் காரணமாக 251 பேர் தற்கொலை செய்துகொண்டதாகவும் மேலும் தெரிவித்தார். இலங்கைச் சனத்தொகையில் பத்து சதவீதமானவர்கள் மனரீதியாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களில் இரண்டு சத வீதத் தினர் கடுமையாகப்பாதிக்கப்பட்டுள்ளதாக இன்னொரு கணக்கெடுப்புத் தெரி விக்கின்றது.

நீண்ட காலமாக எமது நாட்டில் நடைபெற்ற யுத்தம், அதன் தொடர்ச்சியான நிவாரணக் கிராம வாழ்க்கை என்பவற்றால்பல மக்கள் சொல்லொணாத்துயரங்களை அனுபவித்து வருகின்றனர். உயிரிழப்புக்கள், உறவுகள், உடைமைகள், இழப்புக்கள், எதிர்பார்ப்புகளின் சிதறடிப்புகள் என்பன ஆழமான மன வடுக்களை ஏற்படுத்தி விட்டது. இடையில் திடீரென ஏற்பட்ட சுனாமியும், இனம், மொழி, மதம் எனப் பாராது எமது நாட்டு மக்கள் அனைவரையும் உளரீதியாகவும் பாதித்துள்ளது.

சமகால சூழ்நிலை, சிறுவர்கள் மற்றும் மாணவர்களுக்கான பாதிப்புக்கள், மன அழுத்தங்கள் என்பனவற்றைக் கருத்திற்கொண்டு பாடசாலைகளில் மாணவர்களின் உளவள மேம்பாட்டிற்கான முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

உளவியலாளரின் கருத்துப்படி மனிதன் இயற்கையாகவே உளப்பாதிப்புக்கு உள்ளாகின்றான். அவன் வாழும் குடும்பம், சூழ்நிலை, செய்யும் தொழில், வருமானம் கிடைக்கும் முறை எனப் பலவகைகளில் உளரீதியான பாதிப்புக்குள்ளாகுகின்றான். தான் பிறக்கும் முன்பே தாய் உட்கொள்ளும் மருந்துகளினால் கூட உளப்பாதிப்புக்கு உட்படலாம். ஆயினும் கட்டிளமைப் பருவத்தில் ஏற்படும் இயற்கையான ஆசைகள் ஹோமோன்களால் உந்தப்படும்போது அதற்குரிய சரியான வழிகாட்டலும் ஆலோசனைகளும் வழங்கப்படாவிட்டால் உளப்பாதிப்புக்கு உட்படலாம்.

உளவளத்துணை என்றால் என்ன? அது யாருக்கு செய்ய வேண்டும்! யாரல் செய்யப்பட வேண்டும் என்ற தெளிவு, விழிப்புணர்வு எம்மவர் மத்தியில் ஏற்படவில்லை. இதனை சடுதியாக ஏற்படுத்திவிட முடியாது. உளவளத் துணையானது உள்ளத்தோடு சம்பந்தப்பட்டது. உளப்பாதிப்புக்கு உட்பட்டவர்கள் உளவளத்துணை நிபுணர்களிடம் சென்று பெற்றுக்கொண்ட நன்மைகளைப் பகிரங்கப்படுத்துவதனூடாகவும், மன ரீதியாகப் பாதிக்கப்பட்டவர்கள் வைத்தியசாலைகளை நாடிச்செல்லும்போது அவர்களை உளவளத்துணையாளர்களை நோக்கி செல்லுமாறு ஆலோசனை கூறுவதன் முலமாகவும் விழிப்புணர்வை ஏற்படுத்தலாம். யாழ்ப்பாண மாவட்டத்தில் உளவளத் துணை நிபுணத்துவ உதவிகளைப் பின்வரும் நிறுவனங்கள் வழங்குகின்றன.

★மனநோயியல் பிரிவு யாழ். மற்றும் தெல்லிப்பழை மருத்துவமனைகள்

★"சாந்திகம்" 8/1, கற்பக விநாயகர் ஒழுங்கை, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் (தொ.பே: 021 222 3338, 021 222 9720, மின்னஞ்சல் முகவரி: psych@sltnet.lk)

★" சுகவாழ்வு" இல. 16, 3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். [தொ.பே. 0212228130].

★"அகவொளி", குடும்ப வளத்துணை நிலையம், சென்.பற்றிக்ஸ்வீதி, யாழ்ப்பாணம். [தொ.பே. 0212222856, மின்னஞ்சல் raji@sltnet.lk ]

★"அஞ்சலியகம்" தும்பளை, பருத்தித்துறை.

### இலங்கையின் பாடசாலைகளில் வழிகாட்டலும் ஆலோசனைகளும் சேவை

இலங்கையிலுள்ள சகல பாடசாலைகளிலும் வாழிகாட்டலும் ஆலோசனை நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்த வேண்டுமெனக் கல்வி அமைச்சு வெளியிட்ட 2001-06-20 ஆம் திகதிய 2001- 16 ஆம் சுற்றறிக்கையின்படியும் 2003 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட பாடசாலைகளின் ஆளணி வளநிலை தொடர்பான 2003-38 ஆம் இலக்கச் சுற்றறிக்கையிலும் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் பாடசலைகள்தோறும் வழிகாட்டல் ஆலோசனை நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு 300மாணவர்களுக்குமேல் கல்வி கற்கும் பாடசாலைகளில், ஒரு ஆசிரியரை முற்றாக வகுப்பறைக் கடமைகளில் இருந்து விடுவித்தும், 300 மாணவர்களுக்கு குறைவாக உள்ள பாடசாலைகளில் ஒரு ஆசிரியரை பத்து மணித்தியாளங்கள் [பகுதி நேரமாக] வகுப்பறைக்கற்பித்தல் கடமைகளில் இருந்து விடுவித்தும் ஆசிரியர்களை வழிகாட்டல் ஆலோசனைச் சேவைக்குப் பயன்படுத்தப் பட்டு வந்தது.

| ஆண்டு | வேலையற்றோர் சதவீதம் |
| --- | --- |
| 1990 | 16.0% |
| 2005 | 7.7% |
| 2006 | 7.5% |
| 2007 | 6.0% |
| 2008 | 5.2% |

2005ஆம் ஆண்டும் அதன் பின்னரும் வழங்கப்பட்ட பட்டதாரி ஆசிரிய நியமனங்களில் தேசிய பாடசாலைகளிலும் மாகாணப் பாடசாலைகளிலும் வழிகாட்டல் ஆலோசனைக்கென தனியாக ஆசிரிய நியமனங்கள் வழங்கப்பட்டன. மேலும் வடக்கு- கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனைச் சேவையை மேம்படுத்துவதற்கு வசதியாக வலய ரீதியில் 24 ஆசிரிய ஆலோசகர்கள் தெரிவுசெய்யப்பட்டு இருந்தனர். இவர்களில் உத்தியோகபூர்வ பயன்பாட்டுக்கென வெளிநாட்டுத் தொண்டு நிறுவனம் ஒன்று மோட்டார் சைக்கிள்களை அன்பளிப்பாக வழங்கியிருந்தது.

சமகால சூழலைக் கருத்தில் கொண்டு சிறுவர்கள், மாணவர்களுக்கான வழிகாட்டல் ஆலோசனை வினைத்திறனுடன் முறையாக முன்னெடுக்கப்பட வேண்டும். பாடசாலைச்சமூகத்தினர் மத்தியில் இது தொடர்பான பூரண விளக்கம் இன்னும் ஏற்படவில்லை. வழிகாட்டல் ஆலோசனைக்குப் பொறுப்பான ஆசிரியர் மட்டுமே இதற்கு பொறுப்பானவர் என எண்ணுகின்றனர். இது தவறானது ஒவ்வொரு ஆசிரியரும் இதில் பங்கெடுக்க வேண்டும். ஆசிரிய வகிபாகத்தில் சீர்மியர் [Teacher as a Counsellor], வழிகாட்டி [Teacher as a Guide] என்பனவும் முக்கியமானவையாகும்.

இன்றை காலகட்டத்தில் சகல ஆசிரியர்களும் உளவளத்துறைப் பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டியது கட்டாயமாகும். யுத்த அனார்த்தங்களாலும் சுனாமி மற்றும், வேறு காரணங்களாலும் உளநிலையில் பாதிப்படைந்து அல்லலுற்றிருக்கும் மாணவர்களின் உளவளப்பாதிப்புக்களை இனங்கண்டு அவர்களின் கற்றல் திறனை மேம்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டியது ஆசிரியர்களின் முக்கிய கடைமையாகும். எனக் குறிப்பிடுகிறார் யாழ். சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் ஆவார்.

### தொழில் வழிகாட்டல் (Vocational/ Career Guidance)

வேலையில்லாப் பிரச்சினை என்பது உலகளாவிய பாரிய நெருக்கடியாகும். எமது நாட்டிலும் வேலையற்றோர் சதவீதம் அண்மைய ஆண்டுகளில் குறைவடைந்துசெல்கின்ற போதும் இது முடிவுறும் பிரச்சினையாக இல்லை. அண்மையில் [ 22.07.2009 ] நாடாளுமன்றத்தில் பிரதிநிதியமைச்சர் றஞ்சித் சிலாம்பலப்பிட்டிய ஆற்றிய உரையின்போது வெளியிட்ட புள்ளி விவரங்கள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

தொழிற்றுறைகள் மற்றும் தொழில்சார் நிறுவனங்கள் எதிர்பார்க்கும் தகுதிகள் அற்று உயர் கல்வி கற்றோர்தொகையினரே பெரும்பாலும் வேலையற்றோராக உள்ளனர். முறையான தொழில் வழிகாட்டல் இன்றி தாம்கற்றகல்விக்கு எதுவித தொடர்புமற்ற தொழில்களில் முடக்கப்பட்டு, மனக்கவலையுடனும், விரக்தியுடனும் காலத்தைக் கழிப்போரும் பலர்.

பாடசாலையில் கற்கின்றபோது உயர்தரம் முடிந்தபிறகு நிச்சயமாக தமக்கு உயர் கல்வியை தொடரும் வாய்ப்புக் கிட்டுமென்று நம்பியிருக்கின்றனர். இதனால் கல்வியிலேயே முழுக்கவனத்தையும் குவித்து செயற்படுகின்றனர். இவ்வாறு கல்வியில் கண்ணாயிருத்தல் என்பது கல்வியின் வெற் றிக்கு அவசியம்தான். ஆயினும் துரதிஷ்டவசமாகப் பல்கலைக்கழக அனுமதி கைநழுவிப்போய் விடுமாக இருந்தால் நம் இளைஞர்கள் வாழ்க்கையே தொலைந்தது போல் முடங்கிவிடுவதுமுண்டு.

பாடசாலைகளில் தொழில் வழிகாட்டல் தொடர்பாகப் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

★ஆரம்ப, இடைநிலை மட்டங்களில் உள்ள மாணவர்களுக்குப் பல்வேறு தொழில்கள் தொடர்பான தகவல்கள் வழங்கப்படுகின்றன.

★ஒவ்வொரு தொழில்களுக்கும் பிரவேசிப்பதற்கான கல்வித்தகைமைகள், தொழில் சார் தகைமைகள் பற்றி தெரியப்படுத்தப்படுகின்றது.

★பல்வேறு தொழில் நிறுவனங்கள், அலுவலகங்கள் மற்றும் தொழிற்சாலைகள் என்பவற்றைத் தரிசிப்பதற்காக மாணவர்கள் அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

★மாவட்டத் தொழில்திணைக்களம், மற்றும் தொழிற்பயிற்சி அதிகார சபை என்பவற்றுடன் இணைந்து 'தொழில்வழிகாட்டல்' தொடர்பான கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன.

★பல்வேறு தொழில்களிலுமுள்ள கஷ்ட நஷ்டங்களை விளங்கிக்கொள்வதற்காகக் களப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

★எல்லாத் தொழில்களையும் சமனாக மதிக்கும் திறன், செய்யும் தொழிலைத் தெய்வமாகப் போற்றும் திறன், மற்றும் செய்யும் தொழிலைப் பயன்படுத்தி முறையற்ற விதத்தில் நன்மையடையாமை போன்ற தொழில் சார் நற்பண்புகளை வளர்த்தலும் பாடசாலை தொழில் வழிகாட்டலில் இடம்பெறுகின்றன.

★பல்கலைக் கழகங்களிலும் தற்போது தொழில் வழிகாட்டல் அலகுகள் [Career Guidance Units] சிறப்பாகச் செயற்படத் தொடங்கியுள்ளன. அவற்றினூடாகப் பின்வரும் சேவைகள் வழங்கப்படுகின்றன.

★தொழில் தொடர்பான அறிவித்தல்களை / தகவல்ளை எவ்வாறு பெற்றுக்கொள்ளல்.

★சிறப்பான சுயவிவரக்கோவையை எவ்வாறு தயார் செய்தல். [illegible] அடிப்படை [illegible] தகைமைகளா [illegible]



**ஆனந்தமயில் நித்திலவர்ணன்**
B.Sc.with Education (Hons), MED,
ஆசிரியர், யாழ்.இந்துக் கல்லூரி.

தகவல் தொழில் நுட்ப அறிவு, ஆங்கில அறிவு என்பவற்றை எவ்வாறு வளர்த்துக்கொள் வது பற்றிய நுட்பங்கள்.

★நேர்முகப்பரீட்சைகளை எவ்வாறு வெற்றிகரமாக எதிர்கொள்வது பற்றிய விளக்கங்கள்.

★ஆளுமை விருத்தி நுட்பங்கள்

★குழுவாகச் செயற்படல் திறன்கள்

★ தலைமைத்துவப் பண்பு மேம்பாடு

போன்ற நவீன காலத்து தொழிலகளுக்கு தேவையான திறன்களை உள்ளடக்கியதாகப் பல்லைக்கழக மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல் அமைகின்றது.

பண்டைய காலத்தில் பெற்றோருடைய தொழில்களையே பெரும்பாலும் பிள்ளைகள் செய்தனர். அத்துடன் தற்காலத்துடன் ஒப்பிடுகையில் மிகவும் குறைந்த எண்ணிக்கையான தொழில்களே இருந்தன. இதனால் தொழில் வழிகாட்டலுக்கான அவசியம் மிகவும் குறைவாகவே இருந்தது. தற்காலத்தில் தொழில்கள் பல்கிப் பெருகியுள்ளன. மேலும் உலகமயமாக்கலின் விளைவாக எமது நாட்டு இளைஞர்கள் ஏனைய நாட்டினருடனும் போட்டிபோட்டு தொழில்களைப் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. இதற்கு முறையான தொழில் வழிகாட்டல் அவசியம். வளர்ச்சியடைந்த நாடுகளிலும் எமது நாட்டின் தலைநகரிலும் மிகவும் சிறப்பாகச் செயற்படும் தொழில் வழிகாட்டல் நிறுவனங்கள் (Career guidance Institutions) உண்டு.

### கல்வி வழிகாட்டல் (Educational Guidance)

கல்விசார் வழிகாட்டல் என்பதனை பெற்றோர்களும், ஆசிரியர்களும், சிரேஷ்ட மற்றும் சக மாணவர்கள் ஆகியோர் மாணவர்களுக்குப் பாரம்பரியமாக வழங்கி வருகின்றனர். இருந்த போதும் பின்வரும் விடயங்களில் துறைதேர்ந்தவர்கள் வழிகாட்டும்போது மாணவர்களின் பிரச்சினைகள் தீர்வடைவதுடன் கல்வியின் பாலான அவனது நாட்டமும் அதிகரித்துச் செல்கின்றது. அத்துடன் மாணவனது அடைவு மட்டமும் அதிகரிக்கிறது.


★பாடத் தெரிவுகள் (Choice of subjects)

★ நூலகப் பயன்பாடு (Use of Libraries)

★ கற்றல் பழக்கங்கள் (Study habits)

மதிப்பூடு நுட்பங்கள்(Evaluation techniques)

★பாடசாலை வாழ்க்கையிலிருந்து ஏனைய செயற்பாடுகளுடன் இணங்கிப் போதல் (Adjustment of school life to other activi-




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்
### தினைக்கள அடையாள அட்டை வழங்குவதற்கான கூறுவிலை கோரல்-2010

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் அலுவலர்களுக்கான பிளாஸ்டிக் அடையாள அட்டை வழங்குவதற்கான கூறுவிலைகள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து 01.02.2010 திகதி மு.ப 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். கூறுவிலையுடன் அடையாள அட்டையின் மாதிரியும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**நிபந்தனைகள்**

1) அடையாள அட்டை வழங்குதலில் பின்வரும் விடயங்கள் உள்ளடங்கும்.
   - ★ புகைப்படம் எடுத்தல்
   - ★ லமினேற்றிங் செய்தல்
   - ★ அடையாள அட்டைக்குரிய கிளிப் வழங்கல்

2) அலுவலர்களுக்குப் புகைப்படம் எடுப்பதற்காக 01நாள் முன் அறிவித்தல் கொடுக்கப்படும்.

3) விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 01வாரத்தினுள் பூர்த்தி செய்யப்பட்ட அடையாள அட்டை, அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4) ஆகக் குறைந்தது 10 அலுவலர்களுக்குப் புகைப்படம் எடுப்பதற்காக அழைப்பு விடுக்கப்படும்.

வைத்தியகலாநிதி ச.தேவநேசன்,
பணிப்பாளர்,
போதனாவைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

(சி/584294)

DANISH DEMINING GROUP

Danish Demining Group (DDG) is a Humanitarian Mine Action Unit in the Danish Refugee Council (DRC).DRC is a non -profit oranization that works worldwide to help and protect refugees,internally displaced - and other conflict-affected persons.

The DDG mission is to recreate an environment free from threat of landimines,unexploded ordnances and small arms and light weapons;an environment where peoople can live safely and have access to their land.DDG SriLanka is looking for a Back Hoe Operator to work in all part of Srilanka.

**Back Hoe Operator.**

**Requirements:**

-Valid License to operate such machinery.
-Availability to work all parts of SriLanka.
-Minimum one year experience in the related field
-Fluency in Tamil. Ability to speak and understand English is also required
-Knowledge of Sinhala will be an added qualification.

Please subit your applications by post,fax or by-e.mail to Office Manager.Only short listed candidates will be called for an interview.

**Address: Danish Demining Group,No.456 Main Street, Chundikulli, Jaffna.**
fax :021 2228180
E-mail -jafofficemgr@ddg.lk
**Closing Date:31th jan2010**

(564291)

## கிரிக்கெட் போட்டிகள்

யாழ்ப்பாணம்.ஜன.25

யாழ்.இந்து கல்லூரிக்கும், யாழ்.மத்திய கல்லூரிக்கும் இடையான 19வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட் போட்டி 28,29 ஆம் திகதிகளில் யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும். (04-23)

* * * *

யாழ்ப்பாணம்.ஜன.25

கொக்குவில் இந்துக்கல்லூரிக்கும் மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கும் இடையிலான 19வயதுப் பிரிவுக்கான கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 29, 30ஆம் திகதிகளில் மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (04-23)

## 'இசுறு' திட்டத்தின் கீழ் புத்தூர் சோமஸ்கந்தாவில் புதிய கட்டடம்

வலி. கிழக்கு பிரதேச செயலக பிரிவில் 'இசுறு' பாடசாலைத்திட்டத்தின் கீழ் புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தா கல்லூரியில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதனடிப்படையில் பாடசாலைக்கான கட்டடம் ஒன்றை அமைப்பதற்கான நிகழ்வு கடந்த சனிக்கிழமை பாடசாலை முதல்வர் சி.ராஜமோகன் தலைமையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராகவடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி கலந்து கொண்டு நிகழ்வினை ஆரம்பித்து வைத்தார்.

இதில் வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா, மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம், யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ். சித்திரவடிவேல் ஆகியோரும் கலந்து கொண்டனர். நிகழ்வில் வசதி குறைந்த மாணவர்கள் 25 பேருக்கு வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி துவிச்சக்கர வண்டிகளையும் வழங்கினார். (04-72)


வீட்டுக்கு பிரஷர் குக்கர்
மற்றும்
ஹோட்டலுக்கு



டயிடஸ் ஸ்ரோஸ்
2439422


## இவ்வருட காலாண்டுக்குரிய மருந்துகள் வந்து சேரவில்லை சுகாதாரப் பணிப்பாளர் தரும் விளக்கம்

உதயன் 19.01.2010 ஆம் திகதி பத்திரிகையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் மருந்துகள் தட்டுப்பாடு என்ற தலைப்பில் வெளியான செய்தி சம்பந்தமாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆர்.கேதீஸ்வரன் பின்வரும் விளக்கத்தை அனுப்பியுள்ளார்.

இந்த வைத்தியசாலைக்கு 2009ஆம் ஆண்டு4ஆவது காலாண்டுக்குரிய மருந்துகள் 26.10.2009ஆம் திகதி வழங்கப்பட்டுள்ளன. யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து வைத்தியசாலைகளுக்கும் 4 ஆவது காலாண்டுக்குரிய மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வருடத்தின் முதலாவது காலாண்டுக்குரிய மருந்துகள் இன்னமும் சுகாதார அமைச்சின் மத்திய மருந்துக் களஞ்சியத்திலிருந்து இதுவரை வழங்கப்படவில்லை. யாழ்.மாவட்டத்துக்குரிய மருந்துகள் அடுத்தமாத முற்பகுதியிலேயே வழங்கப்படும். அவை இங்கு கிடைத்ததும் வைத்தியசாலைகளுக்கு உடனடியாக விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும். இருமலைத் தணிக்கும் பாணி மருந்துகள் மத்திய சுகாதார அமைச்சின் களஞ்சியத்திலிருந்து போதியளவு கிடைக்கப் பெற்றன. இவை போதியளவு சகல வைத்தியசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. சாவகச்சேரி வைத்தியசாலையிலும் இம்மருந்து போதியளவு கையிருப்பில் இருப்பதை சுட்டடிக்காட்ட விரும்புகின்றேன்- என்று அவர் தெரிவித்தார்.

## திருமண வைபவத் திகதி மாற்ற அறிவித்தல்

*அன்புடையீர்!*

*நிகழும் சுப மங்களகரமான விரோதி வருடம் தைத் திங்கள் 14ஆம் நாள் (27.01.2010) புதன்கிழமை மு.ப 9.36 தொடக்கம் 10.58மணி வரையுள்ள சுபமுகூர்த்த சுப வேளையில்*

திரு. திருமதி சூரியகுமார் உமாதேவி தம்பதியரின் புத்திரன்
**ராஜ்குமார் (ராஜ்)**
அவர்களுக்கும்

திரு. திருமதி கந்தசாமி சரோஜா தம்பதியரின் புதல்வி
**அனுஷா (அனு)**
அவர்களுக்கும்

நடைபெறவிருந்த திருமண வைபவம் தவிர்க்க முடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டு (05.02.2010) வெள்ளிக்கிழமை நடைபெறும் என்பதனை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

**குறிப்பு:** 06.02.2010 சனி பி.ப 4 மணிக்கு மணமகன் இல்லத்தில் வரவேற்பு உபசாரம் நடைபெறும்.

திரு.திருமதி சூரியகுமார் உமாதேவி,
3/21, கோவில் வீதி,
வண்ணார்பண்ணை.

திரு.திருமதி கந்தசாமி சரோஜா,
ஏழாலை மத்தி, ஏழாலை.

(94159)

## திரு. சிதம்பரம் இராசலிங்கம் அவர்களின் 76ஆவது பிறந்த தின வாழ்த்தும், திருமதி இராசலிங்கம் விசாலாட்சி தம்பதிகளின் 50ஆவது வருட திருமணவாழ்த்தும்

(ஓய்வு பெற்ற அரச உத்தியோகத்தரும், சமாதான நீதிவானும், சமூக சேவையாளரும்)



பட்டிக்கடவை கிராமம், தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டு தற்போது தேவாலய வீதியில் வசிப்பவருமாகிய **திரு. இராசலிங்கம்** எங்கள் அன்பு அப்பா 76ஆவது அகவையும், 50ஆவது திருமண வருடங்களும் காணும் இந்நன்நாளில் எமக்குப் பல இடர்கள், இன்னல்கள், இடப்பெயர்வுகள் வந்துற்றபோதும் பக்கு வமாய் எமைக்காத்து, பாரினில் நல்வாழ்வு வாழ வழிசமைத்த எங்கள் அன்பு அப்பா, அம்மா பல்லாண்டு காலம் அவனியில் சுகமாக வாழ சங்கானை இலுப்பைத்தாழ்வு முருகமூர்த்தியினை வேண்டுகின்றோம்.

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் பட்டிக்கடவை வாழ் மக்களும், சங்கானை வாழ் மக்களும்.**

(94652)

## பதிவுகளை மேற்கொள்ளவும்

யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தில் இது வரையில் பதிவு செய்து கொள்ளாத கழகங்கள் தங்களது பதிவுகளை எதிர் வரும் பெப்ரவரி மாதம் ஆறாம் திகத்திக்கு முன்னர் பதிவு செய்துகொள்ளுமாறு சங்கத்தின் செயலாளர் மனோகரன் கேட்டுள்ளார். (04-23)

## பதவி வெற்றிடம்

CO OP INSURANCE

வரையறுக்கப்பட்ட கூட்டுறவுக் காப்புறுதி கம்பனி யானது மிகச் சிறந்த முறையில் நிர்வாக கட்டமைப்புடன் புதிய உத்வேகத்துடன் காப்புறுதிச் சந்தையில் புதிய பரிமாண வளர்ச்சியடைந்து வருகிறது. வாடிக்கையாளர்களுக்கு சிறந்த முறையில் சேவையை வழங்குவதற்காக ஆர்வமிக்க இளைஞர், யுவதிகளிடமிருந்து பின்வரும் பதவிகள் பூரணப்படுத்தப் படவுள்ளன. யாழ்.மாவட்டத்தில் கீழ்வரும் பிரதேசங்களில் இருந்து விண்ணப்பங்கள் கோரப்டுகின்றன.

*(நெல்லியடி, சுன்னாகம், சாவகச்சேரி, மானிப்பாய்,பருத்தித்துறை, சங்கானை)*

தங்களது சுயவிவரக்கோவையை கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு 05.02.2010 க்கு முன்பு அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**பதவி விபரம்**

1. உதவி விற்பனை முகாமையாளர் - (ஆயுள் காப்புறுதி/பொதுக்காப்புறுதி)
2. கனிஷ்ட விற்பனை முன்னேற்றத்திற்கான நிறைவேற்று அதிகாரி- (ஆயுள் காப்புறுதி/பொதுக்காப்புறுதி)
3. சிரேஷ்ட விற்பனை முன்னேற்றத்திற்கான நிறைவேற்று அதிகாரி- (ஆயுள் காப்புறுதி/பொதுக்காப்புறுதி)
4. விற்பனை முன்னேற்றத்திற்கான நிறைவேற்று அதிகாரி- (ஆயுள் காப்புறுதி/பொதுக்காப்புறுதி)
5. விற்பனை முன்னேற்ற அதிகாரி- (ஆயுள் காப்புறுதி/ பொதுக்காப்புறுதி)
6. வெளிக்கள உத்தியோகத்தர்- (ஆயுள் காப்புறுதி/பொதுக்காப்புறுதி) (பகுதி நேரம்/முழுநேரம்)

**தகைமைகள்**

உதவி விற்பனை முகாமையாளர் - காப்புறுதித்துறையில் நான்கு வருட அனுபவம் உள்ளவர்கள் IBSLபரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

விற்பனை அதிகாரிகள்- காப்புறுதித் துறையில் ஆறுமாதம் அல்லது ஒருவருடத்திற்கு மேல் அனுபவம் உள்ளவர்கள் IBSL பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

**ஊதியம்**

நிரந்த ஊதியத்துடன் தரகுப்பணமும் வழங்கப்படும் (பதவி இல. 1 முதல் 5வரை) இது தகைமைக்கேற்ப பேசித்தீர்மானிக்கப்படும்.

வெளிக்கள உத்தியோகத்தர் தரகுப்பணம் வழங்கப்படும்.

**குறிப்பு:** விண்ணப்பதாரிகள் தங்களது சுயவிவரக்கோவையில் விண்ணப்பிக்கும் பதவி, தற்போதைய முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டு அனுப்பவும்.

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

கிளை முகாமையாளர்,
வ/கூட்டுறவுக்காப்புறுதி கம்பனி, இல-305, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். தொ.பேசி: 0212228071

(சி/564420)

## திருமறைக் கலாமன்றம் கலைத்தூது அழகியல் கல்லூரி
### Kalaithuthu College Of Aesthetics

*எமது கல்லூரியில் 2010ஆம் ஆண்டுக்கான புதிய பிரிவுகளில் பயில்வதற்குப் பின்வரும் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

**பாடவிதானங்கள்**

**முதன்மைப் பாடங்கள்**

| | | | |
|---|---|---|---|
| வாய்ப்பாட்டு. | வீணை. | புல்லாங்குழல். | இவற்றுடன் |
| நடனம் (பரதம்). | வயலின். | ஓர்கன். (கீபோட்) | Octopad Drum. |
| நடனம் (கதகளி). | கிற்றார். | சித்திரம். | Manual Drum. |
| நடனம் (மோகினி). | மிருதங்கம். | நாடகமும் அரங்கியலும். | Bongos Drum. |

**சிறப்புப் பாடங்கள்**

கண்டிய நடனம்.
யோகாசனம்.
சவுண்ட் எஞ்சினியறிங்.
பண்பாடு
கிறிஸ்தவக்கலைகள்.
சைவ சித்தாந்தம்.

அழகுக்கலை (Beauty culture) *(மூன்று மாதப் பயிற்சி)*
முகஒப்பனை (Facial)
தலையலங்காரம் (Hair Style)
கேக் ஐசிங் (Cake Icing)
சேலை அலங்காரம் (Saree works)

**துணைப்பாடம்**

ஆங்கிலம்.
*(ஆறு மாத சான்றிதழ்க் கற்கை நெறி Spoken உட்பட)*
(10பேர் பங்கு கொள்ளத்தக்கதாக ஒவ்வொருவருக்கும் கணனி, தொலைபேசி, ஆங்கில நூல்கள் போன்றவற்றுடன்)

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகம், கலைக்காவிரி நுண்கலைக்கல்லூரி ஆகியவற்றுடன் இணைந்து எமது கல்லூரி வழங்கும்.

வளாகம் கடந்த பரதநாட்டியப் பட்டப்படிப்புக்கள்

M.F.A. முதுகலைமாணி B.F.A. இளங்கலைமாணி Diploma பெருஞ்சான்றிதழ் கற்கை நெறி

அனைத்துக் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பப் படிவங்களையும் மாணவர்கள் கல்லூரியில் பெற்றுக்கொள்ளலாம். பரதநாட்டிய பட்டப்படிப்புகளுக்கான விண்ணப்பங்கள் மட்டும் மே மாதம் முதல் ஓகஸ்ட் மாதம் வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

**2010 ஆம் ஆண்டுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம் -30.01.2010**

தொடர்புகளுக்கு: கலைத்தூது அழகியல் கல்லூரி, 128, டேவிட் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 9419

(சி/564404)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் ஆசிரியை திருமதி பத்மகுமாரி கதிரேசன் அவர்களின் பாசமிகு தாய்

### திருமதி கதிரவேலு வள்ளியம்மை

அவர்கள் இறைபதம் எய்திய செய்தி அறிந்து மிக்க துயருறுவதுடன், அன்னாரது மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவருடைய ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை,
யாழ்ப்பாணம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
பழைய மாணவர் சங்கம்.

(சி/564402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவுக்கான விதாதா வள நிலையத்துக்கான அடிக்கல் நடும் விழாவின் போது எடுக்கப்பட்ட படங்களே இவை. விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண, கோப்பாய் பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ், பிரதேச செயலக விஞ்ஞான தொழில்நுட்ப உத்தியோத்தர் ப.பகீரதன் ஆகியோர் உரையாற்றுவதை முதல் மூன்று படங்களிலும் நிலையக் கட்டடத்துக்கான அடிக்கல்லை பேராசிரியர் திஸ்ஸ விதாரண உதவிப் பிரதேச செயலர் பிரேமினி சபாரட்ணம் ஆகியோர் நாட்டி வைப்பதை அடுத்துள்ள படங்களிலும் காணலாம்.

*(படங்கள்: கோப்பாய் செய்தியாளர்)*

# சமூகத்தின் வலுவான சக்திகளாக பெண்கள் உருவெடுக்க வேண்டும்

## கரித்தாஸ் -கியூடெக் நிறுவன இயக்குநர் உரை

வண்ணை, ஜன.25

பெண்கள் வலுவுள்ளவர்களாக உருவாக வேண்டும். 21ஆம் நூற்றாண்டில் கால்பதிக்கும் பெண்கள் சிறந்த வாகனச் சாரதிகளாகவும் உருவாக வேண்டும்.

குருநகர் துணை இழந்த மாதர் சங்கத்துக்கு நிதியுதவி வழங்கும் நிகழ்வில் கரித்தாஸ்-கியூடெக் நிறுவன இயக்குநர் வணபிதா கி.யோ. ஜெயக்குமார் அடிகள் மேற்கண்டவாறு கூறினார்.

சங்கத் தலைவியும், யாழ். மநாகரசபை உறுப்பினருமான திருமதி அந்தோனிப்பிள்ளை மேரியம்மா தலைமையில் இந்த வைபவம் நடைபெற்றது.

கரித்தாஸ் - கியூடெக் நிறுவனத்தின் சுனாமி சுயதொழில் முயற்சிப் பிரிவினரால் சங்கத்தின் 24 உறுப்பினர் களுக்கு நிதியுதவியை வழங்கிய இயக்குநர் தொடர்ந்து பேசுகையில் -

பெண்கள் புத்துயிர் பெற்று எதற்கும் துணிந்து நின்று செயற்பட வேண்டும். தையல் இயந்திரங்களுடன் மட்டுமே மாரடிக்காமல் எதிர்காலத்தில் சமூகத்திலுள்ள சகல தொழில்துறைகளிலும் பெண்கள் முன்வந்து உழைக்க வேண்டும்''- என்றார்.

யாழ். மாநகர சபை உறுப்பினர் திருமதி அந்தோனிப்பிள்ளை மேரியம்மா உரையாற்றுகையில்-

பெண்கள் ஒவ்வொரு வீடுகளிலும் தலைமைத்துவம் செலுத்துகின்றனர். அவர்களுக்கு இல்லங்களில் ஆயிரம் பிரச்சினைகள் இருக்கின்றன. அவர்கள் நாளாந்தம் கணவன், பிள்ளைகளுடன் போராடியும் இணைந்தும் வாழ்க்கை நடத்தி வருவதுபோல் சமுதாய நீரோட்டத்திலும் பெண்கள் பங்கெடுத்து பெண்ணிய மறுமலர்ச்சிக்கு உதவ வேண்டும்'' - எனக் கேட்டுக்கொண்டார். (04-160)

# இடம் மாற்றம்

பண்டத்தரிப்பு, ஜன, 25

பிரான்பற்று கலைமகள் வித்தியாலயத்தில் கடந்த பன்னிரண்டு வருடங்களாக அதிபராக கடமையாற்றிய வே.சிவசுந்தரம் அண்மையில் சங்கானை சிவப்பிரகாசம் மகாவித்தியாலயத்திற்கு அதிபராக இடம்மாற்றம் செய்யப்பட்டு கடமையைப் பொறுப்பேற்றுள்ளார்.

பிரான்பற்று கலைமகள் வித்தியாலத்திற்கு புதிய அதிபர் நியமிக்கப்படும் வரை உப அதிபர் சோ.நடராசா தற்காலிகமாக கடமைப் பொறுப்புக்களைப் ஏற்றுக் கொள்வார்.

(04-130)

# நாடகமும் அரங்கியலும் பாடநெறியைத் தொடர்ந்தும் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் நடத்த அனுமதி

## பீடாதிபதி யோகநாதன் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.25

நாடகமும் அரங்கியலும் பாட நெறியைத் தொடர்ந்தும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நடத்துவதற்குரிய அனுமதி கிடைத்திருப்பதாக பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் அறிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்-

2010ஆம் ஆண்டுக்கான புதிய மாணவர்களை இணைத்துக்கொள்ளும் நிகழ்வு பெப்ரவரி மாதம் 8ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் இடம் பெறவுள்ளது.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் இதுவரை நடைபெற்று வந்த நாடகமும் அரங்கியலும் பாடநெறி, 2010 ஆம் கல்வி ஆண்டிலிருந்து மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரிக்கு மாற்றப் படவிருந்தது.

இதற்கு பல்வேறு அமைப்புகளும் கல்வியாளர்களும் எதிர்ப்புத் தெரிவித்தனர். இந்நிலையில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் இவ்விடயம் தொடர்பாக கல்வியமைச்சின் செயலாளர், கல்விக் கல்லூரியின் பிரதம ஆணையாளர், சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோருடன் தொடர்பு கொண்டு கலந்துரையாடியதன் காரணமாக இந்தப் பாடநெறியை யாழ். தேசிய கல்வியற் கல்லூரியில் நடத்துவதற்குரிய அனுமதி வழங்கப் பட்டுள்ளது என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

(04-14)

# நவாலி- கட்டுடை நன்னீர் திட்டத்தை அமைச்சர் டக்ளஸ் இன்று பார்வையிடுகிறார்

யாழ்ப்பாணம், ஜன.25

நவாலி- கட்டுடை நன்னீர் குடிதண்ணீர் விஸ்தரிப்புத் திட்டத்தை சமூக சேவைகள் சமூக நலத்துறை அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா இன்று மாலை 4 மணிக்கு பார்வையிடவுள்ளார்.

ஊரெழு- பொக்கணை- கந்தரோடை ஊடாக கட்டுடை- நவாலிக்கு குழாய்கள் மூலம் நன்னீர் கொண்டுவரப்படுகின்றது.

யாழ். தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்பு சபையினர் குடிதண்ணீர் வழங்கலுக்கான குழாய் வசதிகளை முழுமையாக வழங்கியுள்ள நிலையில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

யாழ். மாவட்ட தேச வளவிவசாயிகள் சம்மேளன தலைவர் சி.பொ.வ.மா.க. முதலியார் (ச.நீ) தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

வடக்கு மாகாண தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபையின் உதவி பொது முகாமையாளர் எந்திரி.தி.பாரதிதாசன் சிறப்பு அதிதியாகக் கலந்து கொள்வார்.

கடந்த 100 வருடங்களுக்குப்பின்னர் நவாலி அரசடிச்சந்திவரை உள்ள மக்கள் முதற்கட்டமாக குடிதண்ணீர் பெறஉள்ளமையும் -

அதனைத்தொடர்ந்து ஆனைக்கோட்டை - காக்கைதீவு - அராலி ஆகிய பகுதிகளுக்கும் இத்திட்டம் விஸ்தரிக்கப்படவுள்ளதாக உதவிப் பொது முகாமையாளர் எந்திரி தி. பாரதிதாசன் தெரிவித்தார்.

(04-302)

# களைகட்டும் வியாபாரத்தால் விழாக்கோலம் பூணும் நல்லூர்

பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி கோவில் ஆலயச் சுற்றாடல் களைகட்டியுள்ள வியாபார நடவடிக்கைகளால் தற்போது விழாக்கோலம் பூண்டு காணப் படுகின்றது.

தென்பகுதியில் இருந்து வருகை தந்த நடைபாதை வியாபாரிகள் பலர் பொருள்களை ஆலயச் சுற்றாடல் பகுதியில் வைத்து விற்பனை செய்து வருகின்றனர். அத்துடன் பாதாளக்கிணற்று சைக்கிள் ஓட்டம் போன்ற கேளிக்கை நிகழ்வுகளும் இடம் பெறுகின்றன.

இதனால் தினமும் மாலை நேரங்களில் இப்பகுதியில் சனக்கூட்டம் நிரம்பி வழிகின்றது.

தென்பகுதி வர்த்தகர்கள் அதிகளவு பொருள்களை மலிவுவிலையில் இப்பகுதியில் வைத்து விற்பதால் ஆலய சுற்றாடல் விழாக்கோலம் பூண்டுள்ளது.

அதனைவிட ஆலயத்தை தரிசிக்க சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையும் அதிகரித்து காணப்படுகின்றது.(04-224)

# டெங்குநோயை ஒழிக்கும் பணிகள் வலி.கிழக்கில் முழுவீச்சில் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், ஜன, 25

டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் முகமாக வலி.கிழக்கு பிரதேசத்தில் மக்கள் விழிப்புணர்வுச் செயற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இப்பிரதேசங்களில் பொது இடங்களைச் சிரமதானம் மூலம் துப்புரவு செய்தல் மற்றும் குடியிருப்புப் பிரதேசங்களில் இருக்கும் பற்றைகள், புற்கள் போன்றவற்றை அகற்றுவதில் மக்கள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

அதனைவிட இப்பிரதேசப் பாடசாலைகளில் மாணவர்கள் விடுமுறைகளில் கூட சிரமதான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அதனைவிட டெங்கு நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் முகமாக மக்கள் குடியிருப்புப் பிரதேசங்களில் மருந்து விசிறும் பணிகளும் முழுவீச்சில் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

(04-224)

# கவனிப்பாரற்றுக் காணப்பட்ட கயிற்றப்புலம் வீதிக்கு விமோசனம்

யாழ்ப்பாணம், ஜன.25

நீர்வேலி தெற்கு; கயிற்றப்புலம் வீதி நீண்டகாலத்தின் பின்னர் புனரமைக்கப் பட்டு வருகின்றது.

இந்த வீதி உலக உணவுத் திட்டத்தின் கீழ் தற்போது துரிதகதியில் செப்பனிடப் படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த பல ஆண்டுகளாக எதுவித புனரமைப்பும் இன்றிய நிலையில் மிக மோசமாக சேதமடைந்து போக்குவரத்துக்கு ஒவ்வாத நிலையில் காணப்பட்ட இந்த வீதியை தற்போது 'கிரவல்' மக்கியைப் பயன்படுத்தி சீரமைக்கும் பணிகள் மேற் கொள்ளபட்டுவருகின்றன. (04-224)

# தேசிய கலை இலக்கிய போட்டிகள்

குருநகர், ஜன.25

தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை பிரதேச செயலகமும் கலாசார அலுவல்கள் திணைகளமும் இணைந்து 2010ஆம் ஆண்டுக்கான தேசிய கலை இலக்கிய போட்டிகளை நடத்த உள்ளன.

இந்தப் போட்டிகள் பிரதேச, மாவட்ட, மாகாண, தேசிய மட்டங்களில் நடைபெறுவதுடன் வெற்றி பெறுபவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப் படவுள்ளன. இப் போட்டிகள் கட்டுரை, கவிதை, சிறுகதை, பாடலாக்கம் ஆகியவைகளில் கனிஷ்ட, சிரேஷ்ட, திறந்த பரிவுகளாக நடைபெற உள்ளன.

போட்டிகளில் கலந்து தமது ஆக்கங்களை அனுப்ப உள்ளவர்கள் இதற் கான விண்ணப்பங்களை பிரதேச செயலகப் பணிமனையில் பெற்றுக் கொள்ளமுடியும்.

உரிய ஆக்கங்களை எதிர்வரும் பெப்ரவரி 25 ஆம் திகதிக்கு முன்பதாக இந்த அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை கோரியுள்ளது.

# அபிவிருத்தி அதிர்ஷ்டத்தில் யாழ்.வாசிக்கு இரண்டாம்பரிசு

யாழ்ப்பாணம், ஜன, 25

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பின் மூலம் யாழ்ப்பாண வாசி ஒருவர் இரண்டாம் பரிசுக்குரியவராக தெரிவு செய்யப்பட்டு 74 இலட்சத்து பதினோராயிரத்து அறுநூற்று ஐம்பது ரூபா பெறும் வாய்ப்பு கிட்டியுள்ளது.

கடந்த 22 ஆம் திகதி அபிவிருத்தி லொத்தர் சபையினால் நடத்தப்பட்ட சீட்டிழுப்பின் பிரகாரமே இந்த அதிர்ஷ்டம் கிடைத்துள்ளது. இந்த அதிர்ஷ்ட ரிக்கட் சிறிமுருகன் தொலைத்தொடர்பு நிலையத்தின் ஊடாக விற்பனை செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

(04-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டடம் தேவை



கொழும்பைத் தலைமையக மாகக் கொண்டு இயங்கும் விமானப் போக்குவரத்து நிறுவனத்துக்கு யாழ்ப்பாணத்தில் காரியாலயம் ஒன்றினை ஆரம்பிப்பதற்கு யாழ்.நகர்ப் பகுதியில் சிறிய கட்டடம் தேவை.

**081-4993960**

(94682)


## மரண அறிவித்தல்

### கனகரத்தினம் குலசிங்கம்



மதவடி ஒழுங்கை, சுதுமலை தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் குலசிங்கம் (குலம்- வர்த்தகர்) 23.01.2010 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு கனகரத்தினம் மற்றும் பஞ்சரத்தினம் ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிவசம்பு, நாகம்மா (ஆசிரியர்கள்- தையிட்டி) ஆகியோரின் மருமகனும், றோகிணியின் (ஆசிரியை, யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி) அன்புக் கணவரும், திலகவதி, ஜெகதீஸ்வரி, தர்மசேகரம், துரைசிங்கம், தர்மசோதி (ஆசிரியை, யா/சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயம்), பாலசிங்கம் (உரும்பிராய்), சிவநாதன் (ஆசிரியர், கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற தில்லையம்பலம் மற்றும் தபோவதி, அருளேஸ்வரி, காலஞ்சென்ற கோகிலா (ஆசிரியை) மற்றும் காலஞ்சென்ற சிவயோகேஸ்வரன் (தபாலதிபர்) மற்றும் திருமதி சண்முகநாதன் சாரதாம்பிகை (லண்டன்), நல்லநாயகி, காலஞ்சென்ற சறோஜினி மற்றும் சிவானந்தன் (லண்டன்), காலஞ்சென்ற சிவகாமசுந்தரி மற்றும் திருமதி நாகேஸ்வரி, மகேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும், தர்மதா, தர்மி, தர்சிகா, சரோஜா, ரவீந்திரன், சாந்தி, துஷ்யந்தி ஆகியோரின் சித்தப்பாவும், லிசி, கேசினி ஆகியோரின் பெரியப்பாவும், சுஜாத்தா, திருமதி மதுமதி வசந்தகுமார் (உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்), சிவதாரணி, சங்கா ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (24.01.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மதவடி ஒழுங்கை,
சுதுமலை தெற்கு, மானிப்பாய்.
0779285819, 0774973846

தகவல்:
குடும்பத்தினர்.

(94678)

## வீதி விபத்தில் ஒருவர் படுகாயம்

கைதடி,ஜன.25

யாழ்.பிரவுண் வீதியில் மின்சாரசபை அலுவலகத்திற்கு முன்பாக நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார். வீதியால் வந்த 'பிக்கப்' வாகனமும் சைக்கிள் ஒன்றுமே இவ்வாறு விபத்துக்குள்ளாகின இதில் சைக்கிளை ஓட்டிவந்த கோண்டாவிலைச் சேர்ந்த கனகு குணரட்ணம் (வயது 50) என்பவரே படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். இந்த விபத்து சம்பந்தமாக யாழ்.பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (04-288)

## டெங்கு கட்டுப்பாட்டுக் குழுக் கூட்டம்

குருநகர், ஜன.25

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறைப் பிரதேச மட்ட டெங்கு கட்டுப்பாட்டுக் குழுக் கூட்டம் எதிர்வரும் 28 ஆம்திகதி வியாழக்கிழமை மு.ப 10.30 மணிக்கு ஊர்காவற்றுறைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெற உள்ளது. (4-51)

## யாழ். மாவட்ட பத்திரிகையாளர் அமைப்பு நேற்று அங்குரார்ப்பணம்

நல்லூர், ஜன.25

யாழ். மாவட்ட பத்திரிகையாளர் எனும் அமைப்பு நேற்று ஞாயிற்றுக் கிழமை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

என்.இராமச்சந்திரன் தலைமையில் நல்லை ஆதீனத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் எழுத்தாளர் கலாநிதி க.குணராசா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். சங்கத்தின் புதிய யாப்பு மற்றும் மேற்கொள்ளப் படவேண்டிய செயற்பாடுகள் தொடர்பான ஆலோசனைகளும் நிகழ்வில் இடம்பெற்றன. (04-111)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
செல்வி க.தர்மசோதி அவர்களது
சகோதரரும் முன்னாள் ஆசிரியை திருமதி
கு.ரோகினி அவர்களது கணவருமாகிய
அமரர் **கனகரத்தினம் குலசிங்கம்**
அவர்களின் திடீர் மரணச் செய்திகேட்டு
துயரடைவதுடன் அன்னாரின் பிரிவால்
துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயம்.

(94676)

## மரண அறிவித்தல்

### திருமதி மனோன்மணி சம்பந்தர்



கைதடி, நாவற்குழியை (மறவன்புலோ) நிரந்தர முகவரியாகவும், இல.87 கில்னர் லேன், யாழ்ப்பாணத்தைத் தற்காலிக முகவரியாகவும் கொண்ட திருமதி மனோன்மணி சம்பந்தர் நேற்று (24.01.2010) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், விமலாதேவி, அமரர் தவமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சரவணபவன், தில்லைநாயகி, லோகநாயகி, நல்லநாயகி, நாகேஸ்வரி, சாந்தநாயகி (யாழ்.போதனா வைத்தியசாலை), இராதாக்கிருஷ்ணன், அமரர் இரவீந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், கமலேஸ்வரி, உலகநாதன், சண்முகரட்ணம், யோகதாசன், கமலாதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும், சௌந்தரம், சறோஜா, கிருஷ்ணமூர்த்தி (தேவி அச்சகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.01.2010) திங்கட்கிழமை யாழ்ப்பாணத்திலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 2 மணியளவில் யாழ்.கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


87, கில்னர் லேன்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(94686)

# மரண அறிவித்தல்

## வைத்திலிங்கம் செல்லத்துரை



அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும், பெரியவிளான் இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் செல்லத்துரை (21.01.2010) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மகாலட்சுமியின் அன்புக் கணவரும், அமரர் நாகம்மா, அமரர் கணபதிப்பிள்ளை, அமரர் கனகம்மா, அப்புத்துரை, அமரர் அன்னப்பிள்ளை, பொன்னுத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரனும், குணவதனா, பாஸ்கரன், சாந்தவதனா (கனடா), உதயதாசன், ரதிவதனா (சுவிஸ்), மதிவதனா (ஜேர்மனி), தேவதாசன் (கனடா), பவானி ஆகியோரின் அன்புத் தந்தையும், அமரர் கிருஷ்ணபிள்ளை, குமாரசாமி (கனடா), அமரர் ராஜேந்திரன், உத்தமன் (ஜேர்மனி), பாஸ்கரன், சரஸ்வதி, கிருஷ்ணவேணி, மகாலட்சுமி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், மயூரன், திருமகள், கௌரிசங்கர் (கனடா), ஜெயகௌரி (கனடா), வசந்தன் (கனடா), சயந்தன், தனுசன், மிதுனன், டிலக்ஷன், சானு, கிஷாந் (கனடா), கயந் (கனடா), நிலக்சன் (கனடா), பிரசாந், சுகந்தன், கயானா, டிலக்சனா, ராம்சன் (சுவிஸ்), ராகீசன் (சுவிஸ்), ரஜித்தனா (சுவிஸ்), கயன் (ஜேர்மனி), கஸ்தூரி (ஜேர்மனி), கயனிகா (ஜேர்மனி), சங்கவி (கனடா), சாரங்கா (கனடா), யாழவன் ஆகியோரின் அன்புப் பேரனும், டேனுசா, டிலான், கிஜன் (கனடா) ஆகியோரின் பாசமிகு பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.01.2010) திங்கட்கிழமை காலை 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கேணிப்பிட்டி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பெரியவிளான்,**
**இளவாலை.**

**தகவல்:**
**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

(சி/564424)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைய செய்திகள், தகவல்கள் இங்கே பதிவுகளாக...




உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

01.06.1987

★இலங்கை அரசு தற்போது யாழ். குடாநாட்டின் மீது நடத்திவரும் இராணுவத் தாக்குதல் இந்தியா தனது பாதுகாப்புக் கொள்கையை மீண்டும் மதிப்பீடு செய்யவேண்டிய நிலையை ஏற்படுத்தியுள்ளதாகஇந்தியப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு.

★ராஜதந்திரிகள், செய்தியாளர்களை ஹெலிகொப்டரில் அழைத்துச் சென்று வானத்திலிருந்தவாறே யாழ். குடாநாட்டைக் காண்பிக்கும் அரசின் செயற்பாடுகள் குறித்து கருத்துத் தெரிவித்த இந்தியத் தூதுவர் குடாநாட்டின் உண்மை நிலை இந்தியாவுக்கு நன்றாகவே தெரியும் என கருத்துத் தெரிவிப்பு.

★வடமராட்சியில் அரசபடைகளுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான மோதல்களில் சிக்காது பாதுகாப்புத்தேடி பாடசாலைகள், ஆலயங்களில் தஞ்சடைந்த பொதுமக்களில் இருநூறுக்கும் அதிகமானோர் படையினரால் சுட்டுக்கொலை.

02.06.1987

★யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களுக்கு 20 படகுகளில் உணவு, எரிபொருள், மருந்து வகைகளை அனுப்பி வைப்தென இந்திய மத்திய அரசு முடிவு.

★வடமராட்சிப் பகுதியில் கடந்த 6 நாள்களாக நடத்தப்பட்ட 'லிபரேசன் ஒபரேசன்' இராணுவநடவடிக்கை முற்றுப்பெற்றதாக கூட்டுப்படைகளின் தளபதி சிறில் ரணதுங்க தெரிவிப்பு.

03.06.1987

★தன்னிச்சையாக நிவாரண உதவிகளை யாழ். மக்களுக்கு வழங்குவதில் உள்ள ஆபத்துக்களை இந்தியா சிந்தித்துப் பார்க்க வேண்டும் எனபிரதமர் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு.

★யாழ்ப்பாண மக்களுக்கு நிவாரணப் பொருள்களை ஏற்றிக்கொண்டு இருபது இந்தியப் படகுகள் திட்டமிட்டபடி இலங்கைக்கு புறப்படும் என இந்திய வெளியுறவு அமைச்சு அதிகாரிகள் தெரிவிப்பு.

04.06.1987

★யாழ். தொலைத் தொடர்பு நிலைய இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில் இராணுவத்தினர்பலர் பலி; பலர் சிறை பிடிப்பு.

★யாழ். குடாநாட்டு மக்களுக்கு நிவாரணப் பொருள்களை ஏற்றிவந்த இந்தியப் படகுகளை இலங்கைக் கடற்படை தடுத்து நிறுத்தித் திருப்பி அனுப்பியமை இலங்கை அரசின் திட்டமிட்ட செயல் என இந்தியா கண்டனம் தெரிவிப்பு.

★யாழ். குடாநாட்டு மக்களுக்கு இந்திய அரசு நேரடியாக நிவாரண உதவி வழங்க முயற்சிப்பதால் எழுந்துள்ள நிலைமை குறித்து ஐ.நா. செயலாளருக்கு வெளிவிவகார அமைச்சர் ஏ.ஸி.எஸ். ஹமீத் விளக்கம் தெரிவிப்பு.

05.06.1987

★வள்ளத்தால் முடியாததை இந்தியா வானத்தால் சாதித்தது. திடீரென வந்த இந்திய விமானங்கள் யாழ். குடாநாட்டின் மீது பறந்தபடியே நிவாரணப்பொருள்களை 'பரசூட்' மூலம் தரை இறக்கின.

★இலங்கை ஆகாயப் பிராந்தியத்தில் ஊடுருவியதற்காக இலங்கை அரசு, இந்தியா மீது கண்டனம்.

★இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கடுமையானதொரு நிலைப்பாட்டை எடுத்திருப்பதாக பி.பி.ஸி விமர்சிப்பு.

★இந்தியப் பிரதமரின் நடவடிக்கை துணிச்சல் மிக்க மனிதாபிமான நடவடிக்கை எனதமிழ் நாடு முதலமைச்சர் எம்.ஜி.ஆர். பாராட்டுத் தெரிவிப்பு.

06.06.1987

★கடந்த பத்து நாள்களாக வடமாராட்சியில் அரச படைகள் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளில் 3000 தமிழ் இளைஞர்கள் கைதாகி பூஸா தடுப்பு முகாமுக்கு அனுப்பிவைப்பு.

★யாழ். குடாநாட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வழிமுறைகள் குறித்து பேச இலங்கை அரசின் பதிலை இந்தியா எதிர்பார்ப்பதாக இந்திய வெளியுறவு இணை அமைச்சர் தெரிவிப்பு.

★இந்தியாவும் இலங்கையும் நிதானத்துடன் நடந்து பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டுமென ஐ.நா.பொதுச் செயலாளர் வேண்டுகோள்.

★அப்பாவித் தமிழ் பொதுமக்களைக் கொல்வதை இலங்கை அரசு தொடருமானால் தமிழரைப் பாதுகாக்க இந்திய அரசு நடவடிக்கை எடுப்பது குறித்துப் பரிசீலனை செய்ய நேரிடும் என இந்திய ஜனாதிபதி ஷெயில்சிங் தெரிவிப்பு.

★பூஸா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப் பட்டிருந்த ஏழு தமிழர்கள் சிறைக்காவலர்களால் சுட்டுக்கொலை.

★பலாலி பகுதியில் இருந்து பருத்தித்துறை வரை மட்டுமே தற்போது இராணுவ நடவடிக் கைகள் மேற்கொள்ளப்படுவதாக தேசியபாதுகாப்பு அமைச்சர் அதுலத்முதலி தெரிவிப்பு.

08.06.1987

★இராணுவ நடவடிக்கைகள் மூலம் தமிழ் மக் களை அழிக்கும் இலங்கை அரசின் செயற்பாடு களைத் தடுத்து நிறுத்துமாறு பிரசைகள் குழுக் களின் ஒன்றியம் உலக நாடுகளுக்கு வேண்டு கோள் விடுப்பு.

★இலங்கையின் இறைமையையும் பிரதேச ஒருமைப்பாட்டையும் மதிக்கும் அதேசமயம் இலங்கைத் தமிழர்கள் அரசினால் துன்புறுத்தப் படுவதை இந்தியா சகித்துக் கொண்டிருக்காது என இந்திய வெளியுறவு அமைச்சர் தெரிவிப்பு.

★மத்திய, மாநில அரசுகள் ,இலங்கைத் தமிழர்களது தமிழீழக் கோரிக்கையை அங்கீகரித்து பங்களா தேஷ் பாணியில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தி.மு.க. தலைவர் கருணாநிதி தெரிவிப்பு.

09.06.1987

★யாழ். குடாநாட்டில் அரசபடைகள் மேற்கொள்ளும் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக பெருந்தொகையான யாழ். குடாநாட்டு மக்கள் குடாநாட்டைவிட்டு வெளி இடங்களுக்கு இடம்பெயர்வு.

★விமானம் மூலம் யாழ். குடாநாட்டில் உணவுப் பொருள்கள் தரையிறக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர் டிக்ஸிற்றின் வாசஸ்தலத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டப்பேரணி நடத்த பௌத்த பிக்குமார் திட்டம்.

★யாழ். குடாநாட்டின் மீதான இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கைகள் குறித்து இந்திய மத்திய அமைச்சர்கள் தமிழ்நாடு அரசுடன் கலந்தாலோசனை.

10.06.1987

★'இந்தியாவுக்கு எதிராகப் போராட எம்மிடம் பலம் இல்லை. வருங்காலத்திலும் அந்தப் பலம்இருக்காது' என ஜனாதிபதி ஜே.ஆர். தெரிவிப்பு

★இலங்கை ஆகாய எல்லைக்குள் இந்திய விமானங்கள் ஊடுருவிய சம்பவத்தை விசாரிக்க ஐ.நா. பாதுகாப்புச் சபையைக் கூட்டும் முயற்சியை இலங்கை அரசு கைவிட்டது.

★அரசின் தடுப்பு முகாமொன்றில் வடமராட்சியைச் சேர்ந்த சுமார் நாலாயிரம் தமிழ் இளைஞர்கள் தடுத்து வைக்கப் பட்டுள்ளனர் என 'லண்டன் ரைம்ஸ்' பத்திரிகை தெரிவிப்பு.

11.06.1987

★யாழ்.குடாநாட்டில் தமிழ் போராளிகளுக்கு எதிரான அரசின் இராணுவ நடவடிக்கைகள் முற்று பெற்று விட்டதாக தேசிய அமைச்சர் அதுலத் முதலி தெரிவிப்பு.

★இலங்கை இனப்பிரச்சினை குறித்து பிரதமர் ராஜீவ் காந்தியை தமிழக முதலமைச்சர் எம்.ஜி.ஆர் சந்தித்துப் பேச்சு.

★இந்தியாவின் நிவாரண உதவிகளை யாழ். குடாநாட்டு மக்களுக்கு விரைவாக வழங்குவது குறித்து இந்தியா தூதுவர் டிக்ஸிற், வெளியுறவு அமைச்சர் ஹமீதைச் சந்தித்துப் பேச்சு.

12.06.1987

★தமிழ் மக்களை அழிக்க இலங்கை அரசுக்கு இடமளியோம். அதற்கேற்ற வகையில் புதிய உத்தி கள் வகுத்து வருகின்றோம் என இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி தெரிவிப்பு.

★மனித உரிமை மீறல்களைக் கட்டுப் படுத்த இலங்கை அரசு தவறி வருவதால் இலங்கைக் கான தனது சகல பொருளாதார உதவிகளையும் நிறுத்திவிடப் போவதாக நோர்வே அரசு தெரிவிப்பு.

★பேச்சுக்கள் நடத்தத் தமிழ்த் தீவிரவாதிகள் முன் வரவேண்டும். இல்லையேல் இடை நிறுத்தி வைத்துள்ள இராணுவ நடவடிக்கைகளை அரசு மீண்டும் ஆரம்பிக்கும் என தேசிய பாதுகாப்பு அமைச்சர் அத்துலத் முதலி எச்சரிக்கை.

13.06.1987

★இனப்பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காணுமாறு இலங்கைக்கு இந்திய அரசு அழுத்தம் கொடுக்கும் என இந்திய வெளியுறவு அமைச்சர் தெரிவிப்பு.

★தம்மால் கைப்பற்றப்பட்ட தமிழ்ப் பகுதிகளிலிருந்து இராணுவம் வெளியேறும் வரை போர் நிறுத்தம் எதற்கும் விடுதலைப் புலிகள் உடன்படப் போவதில்லை என அவ் அமைப்பின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவிப்பு.

14.06.1987

★யாழ். குடாநாட்டு மக்களுக்கான தமது நிவாரணப் பொருள்களை யாழ்.குடாநாட்டுக்கு நேரடியாகக் கொண்டு சென்று வழங்க இலங்கை அரசு தம்மை அனுமதிக்க வேண்டுமென இந்தியா இலங்கையிடம் வலியுறுத்து.

★இந்தியாவின்பாதுகாப்பைப்பாதிக்கும்சூழ்நிலையை இலங்கை அரசு உருவாக்கக் கூடாது என இந்திய வெளியுறவு அமைச்சர் தெரிவிப்பு.

15.06.1987

★பொலநறுவை மினி இராணுவ முகாம் விடுதலைப் புலிகளால் தகர்ப்பு.

★நண்பர்கள் இல்லாத நாடாக இலங்கையை ஜனாதிபதி ஜே.ஆர். மாற்றிவிட்டதாக சுதந்திரக் கட்சி தலைவி சிறிமாவோ குற்றச்சாட்டு.

★இலங்கையின் பொருளாதாரம் நெருக்கடி நிலையை நோக்கிச் சென்று கொண்டிருப்பதாக உலக வங்கி எச்சரிக்கை.

# உயர்தரப் பரீட்சையில் உயர் பெறுபேறுகளைப் பெற்று கல்வித்துறையில் புகழ் சேர்த்த மாணவர்கள்

2009ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் அண்மையில் வெளியாகின. இதில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று கல்வித்துறையில் சாதனைபுரிந்த மாணவர்களின் அனுபவங்களையும் அவர்களது கருத்துக்களையும் உதயன் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றான். அதில் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகின்றது.

## சிவானந்தன் ரகுவரன்

நெல்லியடி மத்திய ம.வி
உயிரியற்பிரிவு- 2ஏ,பி



நான் எனது ஆரம்பக் கல்வியை மாத்தளை மண்தண்டாவளை இந்துக்கல்லூரியில் கற்றேன். பின்பு தரம் 6இல் இருந்து உயர்தரம் வரை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் கற்றேன். நான் உயர்தரத்தில் உயிரியல் பிரிவில் 2ஏ,பி பெறுபேற்றினைப் பெற்று மாவட்டத்தில் முதலாம் இடம் பெற்றதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். இதற்குக் காரணம் இறையாசியும், பெற்றோர்கள், ஆசிரியர்களின் அன்பும், ஊக்குவிப்பும் தான். நான் சிறுவயதில் இருந்தே வைத்தியராக வரவேண்டும் என்ற விருப்பத்தைக் கொண்டிருந்தேன். எனக்கு தரம் 6இலிருந்து விஞ்ஞானபாடம் படிப்பித்த மகேந்திரன் ஆசிரியர் தான் அந்த விருப்பிற்கு மேலும் உரமூட்டினார். நான் ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் 10ஏ சித்தியைப் பெற்றேன். பின்பு எனது பாடசாலையிலேயே உயர்தரக் கல்வியையும் மேற்கொண்டேன். அப்போது என்னால் இயன்றளவு எனது பாடசாலைக்கு ஒரு பெயரை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்கிற நோக்கிலேயே கல்வி கற்றேன்.இந்த நோக்கம் ஓரளவேனும் நிறைவேறியிருப்பதில் மனமகிழ்வடைகின்றது. உயர்தரத்தில் எனக்கு கல்வியோடு ஆளுமைப்பண்புகளையும் போதித்த எமது கல்லூரி அதிபர், எனது வகுப்பாசிரியை திருமதி ந. மனோகரி ஆசிரியை,இரசாயனவியல் பாட ஆசிரியை திருமதி. மனோகரி விக்னேஸ்வரன், பௌதீகவியல் கற்பித்த திரு. உருத்திரகுமார் ஆசிரியர், பாடசாலையில் எனக்கு ஊக்கமளித்த வேறு பாட ஆசிரியர்கள், தனியார் கல்வி நிலைய ஆசிரியர்கள் ஆகியோரை இந்நேரத்தில் நினைவு கூறக் கடமைப்பட்டுள்ளேன். தற்போது உயர்தரத்தில் கற்கும் மாணவர்களிடம், நாம் உயர்தரக் கல்வியானது சுயமாகவே விளங்கி சுயமாகவே பயிற்சி செய்ய வேண்டியதாகும். இதற்கு சுயமாகப் படிக்க நேரத்தை ஒதுக்க வேண்டும். படித்தவற்றை அன்றாடம் மீட்டுப்பார்த்து உடனுக்குடன் பயிற்சிகளைச் செய்வதின் மூலம் இலகுவாக விளங்கவும் ஞாபகப்படுத்தவும் முடியும். கணித, விஞ்ஞானப் பிரிவுகளைப் பொறுத்த வரையில் நன்கு பயிற்சிசெய்ய வேண்டும். நேரத்தை திட்டமிட்டு விரயமாக்காமல் கல்வி நடநவடிக்கையை மேற்கொண்டால் உயர்தரத்தில் சிறந்தபெறுபேறுகளைப் பெறமுடியும்.

## ஜெயதாசன் துளசிகா



ஸ்கந்தவரோதயக் கல்லூரி
கலைப்பிரிவு- ஏ,2பி

எனது ஆரம்பக் கல்வியை சண்டிலிப்பாய் தமிழ்க்கலவன் பாடசாலையிலும் தரம் 6-13 வரை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியிலும் கற்றேன். உயர்தரத்தில் கலைப்பிரிவில் தமிழ், இந்து நாகரிகம், அளவையியல் ஆகிய பாடங்களைத் தேர்தெடுத்து கற்று பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமையை பெற்றுள்ளதையிட்டு மகிழ்வடைகிறேன். அதற்காக முதலில் இறைவனுக்கு நன்றி கூறுவதோடு எனது தாய் தந்தை, சகோதரன், சேர்ந்துகற்ற நண்பர்கள், அதிபர்,பாடசாலையில் கற்பித்த ஆசிரியர்கள், தனியார் கல்விநிறுவன ஆசிரியர்கள்,குறிப்பாக எமது வகுப்பாசிரியர் பா. மகாலிங்கசிவம் ஆகியோருக்கு எனது மனமார்ந்த நன்றிகள். எதிர்காலத்தில் எனது இலக்கை அடைய இறைவனின் அருளுடனும் பெரியோர்களின் ஆசியுடனும் தொடர்ந்து கற்பேன்.

## செ.கேதீசன்

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி
கலைப்பிரிவு



தரம் ஒன்று தொடக்கம் 11 வரை வதிரி திருஇருதயக் கல்லூரியில் கல்வி கற்று பின்னர் உயர்தரக் கல்வியை மேற்கொள்ள விக்னேஸ்வராக் கல்லூரியையும் தேர்ந்தேடுத்துக் கொண்டேன். ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சையில் மிகச் சிறந்த பெறுபேற்றை பெற்றுக்கொள்ளத் தவறிய போதும் உயர்தரப்பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்துடன் சக மாணவர்களுடன் போட்டிபோட்டுப் படித்தேன். எனது குடும்ப சூழ்நிலையினை கருத்தில் கொண்டு ஆசிரியர்கள் என்மீது வைத்த நம்பிக்கையினை காப்பாற்ற வேண்டும் என்ற விருப்புடன் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்து கால நேரம் பார்க்காது முயற்சிசெய்து இத்தகைய பெறுபேற்றைப் பெற்றுக்கொண்டேன். நான் இத்தகைய பெறுபேற்றைப் பெற்றுக் கொள்வதற்கு ஊக்கமளித்த எனது பாடசாலை மற்றும் தனியார் கல்வி நிலைய ஆசிரியர்களுக்கும் எமது அதிபர் மற்றும் எனது கல்விக்குத் தோள் கொடுத்த எனது நண்பர் நண்பிகளிற்கும் நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளேன்.

எனது இலட்சியம் நான் சிறந்த பெறுபேறு பெற்று உன்னத நிலையை அடைய வேண்டும் என்பதற்கு உதவிய எனது தந்தை தாய், எனது சகோதர சகோதரிகளை முன்னேற்றுவதுடன் எனது ஆசிரியர்கள் பணிகளை நானும் தொடர்வதே எனது இலட்சியம்.

## கணேசமூர்த்தி பிரசாத்



உடுப்பிட்டி அ.மி. கல்லூரி
கலைப்பிரிவு-2ஏ,பி

நான் ஆரம்பக்கல்வியிலிருந்து உயர்தரக் கல்வி வரை உடுப்பிட்டி அ.மி.கல்லூரியிலேயே கற்று உயர்தரப் பரீட்சையில் இப்பெறுபேற்றைப் பெற்று பல்கலைக்கழக அனுமதி கிடைக்குமென்பதனையிட்டு மகிழ்ச்சியடைந்தாலும் என் முயற்சிக்கேற்ற பெறுபேறு கிடைக்காததையிட்டு மனவருத்தமடைகிறேன்.

மேலும் இப்பெறுபேற்றினைப் பெற ஊற்றுக்களாகத் திகழ்ந்த பாடசாலை அதிபர் மற்றும் பாட ஆசிரியர்களுக்கு நன்றி தெரிவிப்ப தோடு, தனியார் கல்வி நிறுவனத்திற்கும் நான் நன்றியினைத் தெரிவிக்கிறேன். மேலும் எனக்கு ஊக்கமளித்த பெற்றோருக்கும் ஏனையோருக்கும் நன்றி தெரிவிக்க நான் கடமைப்பட்டுள்ளேன்.

சந்திப்பு : சுந்தா,மூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தியேட்டிக்கிரியையும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



செல்வன்

**தர்மகுலசிங்கம் சுஜிந்தன்**

*மலர்வு: 20.05.2001*

*உதிர்வு: 25.12.2009*

கடந்த 25.12.2009 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது செல்வன் தர்மகுலசிங்கம் சுஜிந்தனின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (26.01.2010) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து சுன்னாகம் சிவன்கோயில் மண்டபத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

(சு/564288)

புகையிரத நிலைய வீதி,
சுன்னாகம்.

தர்மகுலசிங்கம் (அப்பா)
தர்மா ஹாட்வெயர், பலாலி றோட், திருநெல்வேலி.


### மெய்வன்மைப் போட்டிகளின் ஆரம்ப நிகழ்வுகள்

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் மெய்வன்மை விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதற்கான ஆரம்பக் கட்ட நிகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பெப்ரவரி மாதத்தில் அனைத்து மட்ட விளையாட்டுப் போட்டிகளையும் நடத்தி முடிக்குமாறு கல்வித் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டதையடுத்து போட்டி நிகழ்வுகள் விரைவாக நடத்தப்பட்டு வருகின்றன.

(04-207)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**சோமசுந்தரம் கனகசுந்தரலிங்கம்**

(உரிமையாளர், அப்புத்தளை, சுந்தரம் ஸ்ரோஸ்)

அன்னை மடியில்
02 . 08 . 1951
இறைவன் அடியில்
04 . 02 . 2009

என் அருமை அப்பாவே!
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் பசுமையான நினைவுகள்
என்றும் எம்மை விட்டு அகலாது
உங்கள் நினைவுகளுடன் வாழும்.

மனைவி: க.போகாம்பிகை,
மகன்: க.செந்தில்குமார்.

உருத்திராவத்தை,
No: 97, வெள்ளவத்தை, கொழும்பு -6.
(C/564278)



## உங்களுடைய வாக்கு அட்டை கிடைக்காவிட்டால்

# அஞ்ச வேண்டாம்

### தேர்தல் அட்டவணையில் பெயர் இருந்தால்

## நீங்கள் வாக்களிக்கலாம்

இதற்கு முன்னர் நீங்கள் வாக்களித்த தேர்தல் வாக்களிப்பு நிலையத்திற்கு முடிந்தவரை நேர காலத்துடன் செல்லவும். அங்கு தேசிய அடையாள அட்டை, கடவுச்சீட்டு, வாகனச்சாரதி அனுமதிப்பத்திரம், அல்லது ஏதாவது ஒரு ஏற்றுக்கொள்ளத்தக்க உறுதி செய்யப்பட்ட அடையாள சான்றிதழைக் கையளித்து உங்களது வாக்குச்சீட்டினைப் பெற்றுக்கொள்ளவும். ஏதாவது கேள்விகள் இருப்பின் சிரேஷ்ட தேர்தல் அலுவலரிடம் பேசவும்.

නිදහස් හා සාධාරණ මැතිවරණයක් සඳහා වූ ජනතා ව්‍යාපාරය
சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம்
Campaign for Free & Fair Elections
CaFFE


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடியரசுதின விழாவைக் குழப்ப விமானத் தாக்குதல் திட்டமாம்!

புதுடில்லி,ஜன.25

இந்தியாவில் நாளை குடியரசு தின விழா கோலாகலமாக கொண்டாடப்படு கிறது. இதை சீர்குலைக்க தீவிரவாதிகள் வான்வழித் தாக்குதல் நடத்தக் கூடும் என்பதால் விமானப்படை உஷார்படுத்தப் பட்டு உள்ளது.

இதேவேளை குடியரசு தின விழாவை சீர்குலைக்க பாகிஸ்தானை சேர்ந்த தீவிர வாதிகள் ஊடுருவக் கூடும் என்று உளவுத் துறைக்கு தகவல் கிடைத்து இருப்பதால், குடியரசு தின விழா அமைதியாக நடைபெறு வதற்கு தேவையான அனைத்து பாது காப்பு ஏற்பாடுகளையும் இராணுவமும், டில்லி பொலிஸூம் இணைந்து செய்துள் ளன.

லஸ்கர்-இ-தொய்பா தீவிரவாதிகள் ஐரோப்பாவில் இருந்து வபாராகிளைடர் என்ற இருவர் பறக்கும் குட்டி விமானங் களை வாங்கியிருப்பதாக தகவல் கிடைத் துள்ளது. இதைப் பயன்படுத்தி தீவிரவாதி கள் மனித குண்டுத் தாக்குதல் நடத்தக் கூடும் என்று கிடைத்துள்ள தகவல்கள் தெரிவித்திருப்பதால், விமானப்படையும் இராணுவமும் தயார்படுத்தப்பட்டு இருக் கின்றன.

டில்லியில் குடியரசு தினவிழா அணி வகுப்பு நடைபெறும் விஜய்சவுக்கில் இருந்து செங்கோட்டை வரையிலான 8 கிலோ மீற்றர் தொலைவுக்கு 15,ஆயிரம் டில்லி பொலிஸாரும், துணை இராணுவத் தினரும் குவிக்கப்பட்டு உள்ளனர். டில்லி முழுவதும் தரையில் இருந்து வானம் வரை தீவிர கண்காணிப்பு போடப்பட்டு இருக்கிறது.

இந்தியாவின் 60 ஆவது குடியரசு தின விழா நாளை நாடு முழுவதும் சிறப்பாக கொண்டாடப்படவிருக்கிறது. தலைநகர் டில்லியில் உள்ள ராஜ்பாத்தில் பிரதமர் மன்மோகன் சிங், ஐ.மு.கூட்டணி தலை வர் சோனியா காந்தி மற்றும் முக்கிய தலைவர்கள் முன்னிலையில் தேசிய கொடியை ஜனாதிபதி பிரதிபா பட்டீல் ஏற்றி வைத்து உரையாற்றுவார். பின்னர், ரைசினா ஹில்ஸ்சில் இருந்து அணிவ குப்பு தொடங்கி ராஜ்பாத் வழியாக 8 கிலோமீற்றர் தூரத்தை கடந்து செங்கோட் டையில் முடிகிறது.



குடியரசு தினவிழாவின் போது நடைபெறவுள்ள அணிவகுப்புக்கான ஒத்திகை நேற்று டில்லியில் இடம் பெற்ற போது அணிவகுத்து வந்த 'அக்னி - 3' ஏவுகணையைப் படத்தில் காணலாம்.

# காஷ்மீர் எல்லையில் வேலிகள் அறுப்பு: பாகிஸ்தான் தீவிரவாதிகள் ஊடுருவலா?

## இராணுவத்தினர் தேடுதல் வேட்டை

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் உள்ள எல் லைப் பகுதி வேலிக் கம்பிகள் அறுக்கப்பட் டுள்ளன. இதனால் பாகிஸ்தான் தீவிரவா திகள் இந்தியாவிற்குள் ஊடுருவியிருக்க லாம் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

கடுமையான பனிப் பொழிவை தங்க ளுக்கு சாதகமாக்கிக் கொண்டு வேலிக் கம் பியை தீவிரவாதிகள் அறுத்துள்ளனர். எல்லை யில் உள்ள முள்வேலி அறுக்கப்பட்டிருப்பது இதுவே முதல் முறையாகும். இதை எல்லை பாதுகாப்புப் படை கடந்த வெள்ளிக்கிழமை மாலை கண்டுபிடித்துள்ளது. சர்வதேச எல்லையில் உள்ள கம்பி எண் 851 மற்றும் 852 இடையில் கம்பிகள் அறுக்கப்பட்டுள் ளன. இந்தியப் பகுதியில் மொத்தம் 9 வயர் [illegible]பிகள் அறுக்கப்பட்டுள்ளன. பாகிஸ்தான் பகுதியில் உள்ள வேலியில் 10 வயர்கள் அறுக்கப்பட்டுள்ளன. இதனால் தீவிரவாதி கள் இந்த இடைவெளியில் ஊடுருவியிருக் கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

எல்லைக் காவல் படையினர் வழக்கமாக ரோந்து செல்லும்போது வேலி அறுக்கப்பட் டிருந்ததைக் கண்டுபிடித்துள்ளனர். இதை யடுத்து தேடுதல் வேட்டையை இராணுவத் தினர் தீவிரப்படுத்தியுள்ளனர். இராணுவத் துடன் சி.ஆர்.பி.எப் படையினர்களும் இணைந்து 35 கிலோ மீற்றர் தூரம் வரை சல்லடையாக துளைத்து தேடியுள்ளதாக எல்லைக்காவல் படையினர் தெரிவித்தனர்.

வேலி அறுக்கப்பட்டிருந்தாலும், தீவிரவா திகள் ஊடுருவியிருப்பதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவு என்று அதிகாரிகள் கூறுகின் றனர். கம்பி வேலி அறுக்கப்பட்ட பகுதியிலி ருந்து அடுத்தகட்டமாக 500 மீற்றர் தொலை வில் மற்றொரு வேலி உள்ளது. இதைக் கடந்துதான் இந்தியாவிற்குள் நுழைய முடியும். எனவே ஊடுருவியிருப்பதற்கான வாய்ப்பு இல்லை என்று எல்லைக் காவல் படை [illegible].எஸ்.எப்) அதிகாரி ரன்பீர் சிங் தெரிவித்தார்.

எதுவாக இருப்பினும் இப்பிராந்தியம் முழுவதும் தேடுதல் வேட்டை தீவிரப்படுத் தப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

குடியரசு தின கொண்டாட்டத்தை சீர் குலைக்க பாகிஸ்தான் தீவிரவாதிகள் முயற் சிகள் மேற்கொள்ளக்கூடும் என்று பு[illegible]ய்வுத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இந் நி[illegible]யில் எல்லையில் கம்பி வேலி அறுக் கப்பட்டுள் ளது, தீவிரவாதிகள் ஊடுருவியிருப்பார்களோ என்ற அச்சத்தைத் தோற்றுவித்துள்ளது.

# தெலுங்கானா மாணவர்கள் சட்டப் பேரவையை முற்றுகை!

## நூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கைது!!

சித்தூர்,ஜன.25

தெலுங்கானாப் பிரச்சினை தொடர் பாக சட்டப் பேரவையை முற்றுகையிட முயன்ற மாணவர்கள் மீது பொலிஸார் தடி யடி நடத்தினர்.

ஆந்திராவை பிரித்து தெலுங்கானாத் தனி மாநிலம் அமைக்க வலியுறுத்தி டி.ஆர்.எஸ். உட்பட பல்வேறு கட்சிகள், மாணவர்கள் அமைப்புகள் போராட்டம் நடத்தி வருகின்றன. இதனால், 10 மாவட் டங்கள் அடங்கிய தெலுங்கானாப் பகுதி யில் தொடர்ந்து பதற்றம் நிலவி வருகிறது.

இந்த நிலையில், தெலுங்கானாப் பிரச் சினையில் மத்திய அரசு மெத்தனமாக செயல்படுவதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டி வருகின்றன. ஐதராபாத்தில் முற் போக்கு ஜனநாயக மாணவர் சங்கத்தினர் நேற்று முன்தினம் காலை சட்டப்பேரவை வளாகத்தில் புகுந்து முற்றுகை போராட் டம் நடத்த திரண்டனர். அவர்களை பொலிஸார் தடுத்தனர். இதனால் இரு தரப் புக்கும் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

அப்போது, மாணவர்கள் 'ஜெய் தெலுங்கானா' என கோஷமிட்டபடி சட் டப்பேரவை வளாகத்தில் நுழைய முயன் றனர். அவர்கள் மீது பொலிஸார் தடியடிப் பிரயோகம் நடத்தினர். இதனால், பதற்றம் ஏற்பட்டது. பொலிஸாரைக் கண்டித்து மாணவர்கள் கோஷமிட்டனர். 100 இற்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கைது செய்யப்பட்டனர்.

மத்திய அரசு சாதகமான முடிவை இந்த மாதம் 28 ஆம் திகதிக்குள் அறிவிக்க வில்லை என்றால், தெலுங்கானாப் பகுதி யைச் சேர்ந்த அமைச்சர்கள், எம்.பி., எம். எல்.ஏ.க்கள் தங்கள் பதவியை 29 ஆம் திகதி ராஜினாமா செய்ய வேண்டும் என அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்த தெலுங் கானா கூட்டு நடவடிக்கை குழு வலியு றுத்தி உள்ளது.

காங்கிரஸ் கட்சியினர் நாளை டில்லி சென்று காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் கட்சியின் முக்கிய தலைவர்களைச் சந் தித்து ஆந்திராவில் நிலவும் சூழ்நிலை பற்றி விளக்கிக் கூற முடிவு செய்துள்ளனர். இந்த சூழ்நிலையில், கட்சிக் கட்டுப் பாட்டை மீறுவோர் மீது கடும் நடவ டிக்கை எடுக்கப்படும் என்று கட்சித் தலை வர் சோனியா காந்தி எச்சரித்துள்ளார் என்று காங்கிரஸ் கட்சி வட்டாரங்கள் தெரி வித்தன.

# அரியானா இடைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி தோல்வி!

சண்டிகார்,ஜன.25

அரியானா, குஜராத், மகாராஷ்டிரா மாநிலங்களில் நடந்த இடைத்தேர்தல் முடிவுகள் நேற்று வெளியாகின.

அரியானாவில் எலானாபாத் தொகுதி யில், எதிர்க்கட்சியான இந்திய தேசிய லோக் தளமும் (ஐ.என்.எல்.டி.), காங்கிரஸூம் கடுமையாகப் போட்டியிட்டன. ஐ.என். எல்.டி. சார்பில், முன்னாள் முதல்வர் ஓம் பிரகாஷ் சவுதாலாவின் இளைய மகன் அபய் சிங் சவுதாலா போட்டியிட்டார். காங் கிரஸ் சார்பல் பரத் சிங் பெனிவல் போட் டியிட்டார்.பரத்சிங் பெனிவலை, 6,227 ஓட்டுக்கள் வித்தியாசத்தில் அபய்சிங் வென்றார். இதன் மூலம் 90 உறுப்பினர்கள் கொண்ட அரியானா சட்டசபையில் ஐ.என்.எல்.டியின் பலம் 31 ஆக உயர்ந் துள்ளது.

குஜராத்தில் சோட்டிலா தொகுதியில் நடந்த இடைத்தேர்தலில், பா.ஜ. வேட் பாளர் பாரத் கொரானி, சிவசேனாவின் சிவாஜி சவுகானை 22 ஆயிரம் ஓட்டுகள் வித்தியாசத்தில் வென்றார். இதன் மூலம் அத்தொகுதியை பா.ஜ. திரும்பவும் தக்க வைத்துக் கொண்டது.மும்பையில் பவாந்தி கிழக்குத் தொகுதியில் நடந்த இடைத்தேர் தலில் சிவசேனா வேட்பாளர் ரூபேஷ் மாத்ரே, சமாஜ்வாடி கட்சி வேட்பாளரான பர்கான் ஆஸ்மியை, 1,676 ஓட்டுகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார்.மகாராஷ் டிரா சட்டசபையில் இந்தியில் உறுதி மொழியெடுத்து, ராஜ் தாக்கரே ஆதரவா ளர்களால் தாக்கப்பட்ட அபு ஆஸ்மியின் மகன் தான் பர்கான் ஆஸ்மி என்பது குறிப் பிடத்தக்கது.

# இந்தியச் செய்திகள்

# தீவிரவாதிகளின் தாக்குதலை முறியடிக்க இராணுவம் தயார்

## இராணுவ அமைச்சர் அந்தோனி தெரிவிப்பு

புதுடெல்லி,ஜன.25



பாகிஸ்தானையொட்டி உள்ள இந்திய எல்லையில் முள் கம்பி வேலி உடைக் கப்பட்டு உள்ளது. இதன் வழியாக தீவிர வாதிகள் ஊடுருவி இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படு கிறது. தீவிரவாதிகள் தாக்குதலை முறிய டிக்க இராணுவம் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது என்று இராணுவ அமைச்சர் ஏ.கே. அந் தோணி தெரிவித்துள்ளார்.

நாளை குடியரசு தினம் கொண் டாடப்பட உள்ளது. இதை சீர்குலைக்க தீவிரவாதிகள் சதித் திட்டம் தீட்டி யிருப்பதாக உளவுத் துறைக்கு தகவல் கிடைத்துள்ளது. இதையொட்டி பாது காப்பு படை தயார் நிலையில் வைக்கப் பட்டுள்ளது. விமானங்களை கடத்த திட்ட மிட்டு இருப்பதாக கிடைத்த தகவலைத் தொடர்ந்து விமான நிலையங்களில் உச் சகட்ட பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

இந்நிலையில், அடுத்து வரும் நாள்களில் தீவிரவாதிகளின் தாக்குதல் அதிகரிக்க கூடும் என்று இராணுவ அமைச்சர் ஏ.கே. அந்தோணி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# தீவிரவாதிகளின் தாக்குதலைத் தடுக்க திருப்பதி கோவிலைச் சுற்றி இரும்பு வேலி

திரு, ஜன.25

தீவிரவாதிகளின் அச்சுறுத்தலை தடுப் பதற்காக, திருப்பதி கோவிலை சுற்றிலும் ரூபா 3 கோடி செலவில் இரும்பு வேலி அமைப்பது என்று அறங்காவலர் குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

திருமலை திருப்பதி தேவஸ்தான அறங்காவலர் குழு கூட்டம், திருமலை யில் உள்ள அன்னமய பவனத்தில் நேற்று முன்தினம் காலை நடந்தது. அறங்காவலர் குழு தலைவர் ஆதிகேசவலு நாயுடு, தேவஸ்தான செயல் அலுவலர் ஐ.ஒய். ஆர்.கிருஷ்ணாராவ், துணை அதிகாரிகள் தர்மாரெட்டி, யுவராஜ், பாதுகாப்பு அதிகாரி ராமகிருஷ்ணா மற்றும் அறங்காவலர்க ளும், அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் வருமாறு:-

நாடு முழுவதும் உள்ள புண்ணிய தலங்களுக்கு தீவிரவாதிகளின் அச்சுறுத் தல் உள்ளதால், தீவிரவாதிகள் தாக்கு தலை தடுப்பதற்காக திருப்பதி கோவிலை சுற்றி (திருமலையின் 4 மாடவீதிகளிலும்) இரும்பு வளையங்கள் பொருத்தப்பட்ட வேலி அமை[illegible]

திருமலை- [illegible] தங்க- வைர நகைகளை பரிசோதிப்ப தற்காக, 50 லட்சம் ரூபா செலவில் பரி சோதனைக்கூடம் அமைக்கப்படும்.

வருகிற 29,30 மற்றும் 31 ஆகிய திக திகளில் திருப்பதியை அடுத்த சீனிவாச மங்காபுரத்தில் 108 யாக குண்டங்கள் அமைத்து மகாசாந்தி யாகம் நடத்தப்படும். 30 ஆம் திகதி மாலை லதா மங்கேஸ்கர் பாடிய அன்னமயா கீர்த்தனைகள் அடங் கிய இறுவெட்டை ஆந்திர முதல்-மந்திரி ரோசய்யா வெளியிடுவார். இந்த விழாவில் லதா மங்கேஸ்கர் கலந்து கொண்டு பாடு வார்.

[illegible]யில் உள்ள தேவஸ்தானத் தின் மத்திய ஆஸ்பத்திரியில் கண் வைத் தியசாலை அமைக்கப்பட்டு உள்ளது. இங்கு சென்னை சங்கர நேத்ராலயாவை சேர்ந்த வைத்தியர்கள் வந்து சிகிச்சை அளிப்பார்கள். தேவஸ்தான பணியாளர் களுக்கு இலவசமாகவும், பொதுமக்க ளுக்கு குறைந்த கட்டணத்திலும் இங்கு கண் சிகிச்சை அளிக்கப்படும்.

தேவஸ்தானத்தின் இந்து தர்ம பிரசார பரிஷத் சார்பில் 3 தேர்கள் அமைத்து, அதன்மூலம் நாடு முழுவதும் ஆன்மிக பிரசாரம் மேற்கொள்ளப்படும்.

லட்டு பிரசாதம் தயாரிப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள புதிய கட்டடம் மற் றும் லட்டு பிரசாதத்தை விநியோக மையத்திற்கு கொண்டு செல்வதற்கான 'கன்வேயர் பெல்ட்' ஆகியவை, வருகிற 31 ஆம் திகதி திறந்து வைக்கப்படும். இந்த மையம் செயற்பட தொடங்கிய பின்னர் தினந்தோறும் 3 லட்சம் லட்டுகள் வரை தயாரிக்கப்படும். அதை தொடர்ந்து, பக்தர்களுக்கு லட்டு பிரசாதம் குறை வின்றி விநியோகம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறை நகரப்பகுதிகளில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை தீவிரம்

வடமராட்சி, ஜன.25

பருத்தித்துறை நகரப்பகுதியில் விநாயகர் முதலியார் தெரு, நாகலிங்க முதலி வீதி ஆகிய பகுதிகளில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதையடுத்து அதனைக்கட்டுப்படுத்த பல வழிகளிலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இப் பகுதியில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதோடு, இந் நோய் நகரின் ஏனைய பகுதிகளுக்கும் பரவாமல் தடுப்பதற்கு மான பலதரப்பட்ட நடவடிக்கைகளில் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் ஈடுபட்டுள்ளது.

விநாயகமுதலியார் தெரு, நாகலிங்க முதலியார் வீதி ஆகிய பகுதிகளில் பொதுச் சுகாதாரப்பரிசோதகர்கள் மேற்பார்வையில் அங்குள்ள வீடுகள், கட்டடங்கள் அனைத்துக்கும் புகை விசிறப்பட்டுள்ளதுடன், சுகாதாரத் தொண்டர்கள், செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்கள், ஆகியோர்களுடன் பருத்தித்துறை சித்தி விநாயகர் பாடசாலை மாணவர் குழுக்கள் இங்குள்ள வீடுகள், கட்டடங்கள் அனைத்தையும் தரிசித்து அவற்றை முழுமையாக துப்புரவு செய்யும் பணிகளில் கடந்த சில தினங்களாக ஈடுபட்டனர்.

அந்த வீடுகள், கட்டடங்களில் சேகரிக்கப்பட்ட குப்பை, கூழங்கள் பருத்தித்துறை நகரசபையின் 'டிராக்டர்' மூலம் அப்புறப்படுத்தப்பட்டன.

இதேவேளை நகரின் ஏனைய பகுதிகளுக்கும் டெங்கு நோய் பரவாமல் தடுப்பதற்கான விழிப்புணர்வு நடவடிக்கைகளும் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. டெங்குநோய், அதனைத் தடுப்பது தொடர்பான துண்டுப் பிரசுரங்கள் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன. (ஒ-236)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 20 | 05 |
| ★ | ★ |
| 04 | 02 |
| ★ | ★ |
| 1934 | 2009 |

### அமரர் சுந்தர் சண்முகம்

ஓர் ஆண்டு ஆனதுவோ
உங்கள் முகம் கண்டு
ஆறவில்லை நம் இதயம்
அன்பும் பாசமும் நிறைந்த
பொக்கிஷம் நீங்கள்
நித்தம் புலம்புகின்றோம்
உங்கள் திருமுகம் காணாமல்
ஆறவில்லை எங்கள் துயர்

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சுதுமலைச் சந்தி,
மானிப்பாய்.
(94689) மனைவி - பாக்கியலக்சுமி.


# தேர்தல் கண்காணிப்புக் குழுக்களின் பிரதிநிதிகள் நேற்று வந்து சேர்ந்தனர்

யாழ்ப்பாணம், ஜன.25

நாளை நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பைக் கண்காணிப்பதற்காக மூன்று கண்காணிப்பாளர்கள் குழுக்கள் யாழ்ப்பாணம் வந்துள்ளன.

ஆசிய கண்காணிப்பாளர்கள் சங்கம், பொதுநலவாய 'கொமன்வெல்த்' கண்காணிப்பாளர் குழு ஆகியவற்றின் பிரதிநிதிகளே யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

ஆசிய கண்காணிப்பாளர் சங்கத்தில் ஆறு கண்காணிப்பாளர்கள் அடங்கியுள்ளனர். அவர்களில் மூவர் யாழ்ப்பாணத்திலும் மூவர் கிளிநொச்சியிலும் பணியாற்றுவர்.

பொதுநலவாய கண்காணிப்பாளர்களாக வந்துள்ள மூவர் யாழ்ப்பாணம், கிளிநொச்சிப் பகுதிகளில் பணியாற்றவிருக்கின்றனர்.

இந்தக் கண்காணிப்பாளர்கள் வாக்களிப்பு இடம்பெறவுள்ள பகுதிகளுக்கு நேற்று நேரில் சென்று மக்களுடன் கலந்துரையாடினர். (ஒ-1-51)


## 8ஆம் வருட நிறைவில் எம் கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 29 | 25 |
| ★ | ★ |
| 05 | 01 |
| ★ | ★ |
| 1922 | 2002 |

### அமரர் மேரி இராசமணி மரியாம்பிள்ளை

அம்மா! நீர்,
அன்பெனும் பாலூட்டி,
அறிவெனும் அமுதூட்டி
பாசமெனும் தொட்டில் கட்டி,
பண்புடன் உருவாக்கி,
பத்து இரத்தினங்களையும்,
பாங்குடன் ஜோதிகளையும்
பக்குவமாய் வளர்த்தெடுத்தீர்.
வாழும் போது எம்முடன் வழிநடந்தீர், இன்றோ!
உம் கரங்களில் எம் கால் பதித்து
நாம் கனிவுடன் வழி நடக்கின்றோம்.
இறையன்பில் என்றும் இளைப்பாற
நிதம் நிதம் வேண்டுகின்றோம்.

என்றும் மாறா அன்புடன் அருட்தந்தை
ம.பெ.ஞானரத்தினமும்
சகோதரர்களும்

கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.
(பி/564426)


# கடலில் தவறிவிழுந்த குருநகர் மீனவரைக் காணவில்லை

யாழ்ப்பாணம், ஜன.25

குருநகரில் இருந்து நேற்று முன்தினம் கடற்றொழிலுக்குச் சென்ற ஒருவர் தவறி விழுந்து காணாமற்போய்விட்டார் என்று கூறப்பட்டது.

குருநகரைச் சேர்ந்த எஸ்.விக்டர் (வயது 50) என்பவரையே காணவில்லை என்று கூறப்படுகிறது.

குருநகரில் இருந்து நால்வர் 'றோலரில்' கடற்றொழிலுக்காக நேற்று முன்தினம் புறப்பட்டுச் சென்றிருந்தனர் என்றும் அவர்களில் ஒருவரான விக்டர் நெஞ்சுவலி காரணமாக கடலில் தவறி விழுந்துவிட்டார் என்றும் அவரைத் தேடும் நடவடிக்கைகளில் மீனவர்கள் ஈடுபட்டிருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

நேற்று வரை அவர் தொடர்பான தகவல் கிடைக்கவில்லை. (ஒ-1-51)

# அரிச்சுவடி ஏடு இலவச விநியோகம்

யாழ்ப்பாணம், ஜன.25

எதிர்வரும் 30 ஆம் திகதி தைப்பூசத்தன்று ஏடு தொடக்கவுள்ளவர்கள் மில்க்வைற் சோப் தொழிற்சாலையில் அரிச்சுவடி ஏடுகளை அன்பளிப்பாகப் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)


குறைந்த கட்டணத்தில்
கணக்கீடு பொருளியல்
Personal Class
தொடர்பு - 0770343521
(94820)

பூபதி காட்சியறையில்.....
★ பேக்கரி மிசின்
★ எலக்ரோணிக் தராசு
★ 5000 ரூபா தொடக்கம்
விசேட விலைகளில்
★ இலகு முறைக்கட்டண
வசதி
தொடர்பு: 0777427777


## மரண அறிவித்தல்கள்

### மார்க்கண்டு அழகேஸ்வரன் (செட்டி)



இல 19, மலர்மகள் வீதி, அரியாலையைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு (செட்டி) அவர்கள் 23.01.2010 சனிக்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு-யோகம்மா தம்பதியினரின் அன்பு மகன் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மைத்துனர், சி.நாகேந்திரம்,
செ.இராசையா,
செ.இராஜேஸ்வரி (நகுலா - சகோதரி),
நா.றஜிதா (மருமகள்).

இல.19, மலர்மகள் வீதி,
அரியாலை.
(94687)

### கந்தையா சண்முகலிங்கம்



35, பெரியதம்பிரான் கோயில் வீதி, வண்.மேற்கு, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சண்முகலிங்கம் நேற்று (24.01.2010) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - அன்னபூரணம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னுச்சாமி-வாலாம்பிகை தம்பதிகளின் அன்பு மருமகனும், திரு.திருமதி அருச்சுனன் யோகம்மா, திரு.திருமதி நவரெத்தினம் திருபதியம்மா ஆகியோரின் பெறாமகனும், பரஞ்சோதி அம்மாவின் அன்புக் கணவரும், கமலாதேவி, வேவி, பரமராசா, பரமலிங்கம், பத்மநாதன் ஆகியோரின் சகோதரனும், நல்லையா, அமரர் தெய்வேந்திரம், அமரர் நாகேஸ்வரி, விமலராணி, அமரர் புஷ்பராணி, திருநாவுக்கரசு, அமரர் விநாயகமூர்த்தி, குணரெத்தினம் (இந்தியா), கனகலிங்கம் (கொழும்பு), சந்தானலெட்சுமி (கனடா), இந்திராணி ஆகியோரின் மைத்துனரும், தியாகராசா (கனடா), இரத்தினசபாபதி ஆகியோரின் சகலனும், அமரர் சரஸ்வதி,மகாலெட்சுமி, பரிமளம் (இந்தியா), சௌந்தரம் (கொழும்பு) ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும், சந்திரகுமார், சூரியகுமாரி, சுகிர்தமலர் (கனடா), செந்தமிழ்ச்செல்வி, சசிக்குமார் (கனடா), தயாநிதி, தனேஷ்குமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும், வரதலெட்சுமி, சண்முகநாதன் (இ.மி.சபை), பாலச்சந்திரன் (கனடா), ரவிச்சந்திரன் (ஆசிரியர்-யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி), பிறேசில்லா (கனடா), சதீஷ்குமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், இனுஷன், விபுஷன், கஜானா, ரஜீவ்தாசன் (SIERRA TELECOM CONSTRUCTION, COLOMBO), பிருந்தா, கௌரீசன் ((SIERRA TELECOM CONSTRUCTION, COLOMBO), லிபிந்தா, கௌசிகன், காவியா (கனடா), நவீனன் (கனடா), சுவாதி (கனடா), கஜிந், அபினயன், ஜனனன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (25.01.2010) திங்கட்கிழமை முற்பகல் 10மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

35, பெரியதம்பிரான் கோயில் வீதி,
வண்.மேற்கு,
யாழ்ப்பாணம்.
0776016279.
(94688)
தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### கலாநிதி சைவப்புலவர் வல்லிபுரம் கந்தசாமி

(முன்னாள் உப அதிபர், பெரியபுலம் மகாவித்தியாலயம் - சைவபரிபாலனசபையின் முன்னாள் கௌரவ பரீட்சை செயலாளரும் தலைவரும்)



பொலிகண்டியைப் பிறப்பிடமாகவும், கந்தர்மடத்தை வதிவிடமாகவும் தற்போது நோர்வேயில் வசித்தவருமான வ.கந்தசாமி அவர்கள் 18.01.2010 திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்-வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான துரையப்பா-காவேரி தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற விஜயராணியின் (பத்மா) அன்புக் கணவரும், கிருஷ்ணசாமி, காலஞ்சென்றவர்களான சண்முகராஜா, வடிவேல்சுவாமி, பார்வதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான அன்னலட்சுமி, சந்திரசேகரம், நாகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் பாலேந்திரன் (பாலா-நோர்வே), ராஜேந்திரன் (ராஜு- லண்டன்), சிவஜா (லண்டன்), கிரிஜா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், பிர்த்தா (நோர்வே), இந்திரா (லண்டன்), கண்ணன் (லண்டன்), கண்ணன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், திரு.திருமதி பிரியதர்சினி (ரஞ்சினி)-ரமேஸ் (பரீஸ்) தம்பதியினரின் பாசமிகு மாமனும், பகி, சகனா, பிரசாந், வினோஜா, கோபி, பிரணவன், கார்த்திகா, ஆரணி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (25.01.2010) திங்கட்கிழமை நோர்வேயில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பாலா (மகன் - நோர்வே) 004733112437 வி.ஸ்ரீ விஜயானந்தன் (மருமகன்)
125, அரசடி வீதி, கந்தர்மடம். 0789133833

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்சேகா வெற்றியீட்டுவார் என்று எதிர்க்கட்சிகள் நம்பிக்கை தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 25

நாளை இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் சரத் பொன்சேகா 55 வீத வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டுவார் என்று ஐ.தே.கட்சியின் பொதுச் செயலாளரும், எம்.பியுமான திஸ்ஸ அத்தநாயக்க நேற்றுக் கூறினார்.

அரசு வாக்கு மோசடிகளில் ஈடுபட்டாலும் கூட சரத் பொன்சேகாவின் வெற்றியைத் தடுக்க முடியாது என்றும் அவர் சொன்னார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இதுதொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

நாடு முழுவதும் நாம் மேற்கொண்ட வெற்றிகரமான பிரசாரங்களை அடிப்படையாக வைத்து எமது வேட்பாளர் சரத் பொன்சேகா முன்னணியில் இருக்கின்றார் என்பதை அறிகின்றோம்.

நடுநிலைமை வகிக்கும் பலதரப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின்படி ஜனாதிபதித் தேர்தலில் சரத் பொன்சேகா 55 வீத வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டுவார் என்பது உறுதி.

வடக்கு, கிழக்கு மக்கள் ஒட்டுமொத்தமாக ஒன்று திரண்டு தெற்கின் சிங்களத் தலைவர் ஒருவருக்கு ஆதரவு தெரிவிப்பது வரலாற்றில் இதுதான் முதல்தடவை.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி., ஐக்கிய தேசியக் கட்சி உட்பட வாக்கு பலம் அதிகம் உள்ள கட்சிகள் அனைத்தும் சரத் பொன்சேகாவிற்கே ஆதரவு வழங்குகின்றன.

எமது வெற்றியைத் தடுப்பதற்கு அரசு பல திட்டங்களை வகுத்துள்ளது. வன்னி அகதிகளின் வாக்குகளைக் கொள்ளையடிப்பதற்கும், தேசிய அடையாள அட்டைகளைப் பறிப்பதற்கும் அரசு திட்டம் தீட்டியுள்ளது.

அரசு பாரிய தேர்தல் வன்முறைகளில் ஈடுபடுகின்றது. தேர்தல் வன்முறைகளால் இதுவரை 5 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 800 இற்கும் மேற்பட்ட தேர்தல் வன்முறைகள் பதிவாகியுள்ளன. தேர்தல் சட்டம் முற்றாக மீறப்படுகின்றது.

அரசு எப்படிபட்ட மோசடிகளில் ஈடுபட்டாலும், பொன்சேகாவின் வெற்றியைத் தடுக்க முடியாது. மக்கள் ஒட்டுமொத்த ஆதரவு பொன்சேகாவுக்கே உண்டு. - என்றார். (அ-சி)

# சுயேச்சை வேட்பாளர் இல்லியாஸ் பொன்சேகா பக்கம் சாய்ந்தார்

ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராகக் களமிறங்கிய டாக்டர் இல்லியாஸ் போட்டியில் இருந்து விலகி எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவை ஆதரிக்க முன்வந்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு இல்லியாஸ் இந்த முடிவை அறிவித்தார்.

அவர் அங்கு ஊடகவியலாளர்களிடம் கூறியவை வருமாறு:-

வரலாற்றில் முதல் தடவையாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகள் இரண்டும் ஒன்றிணைந்து தேர்தல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன.

நாட்டின் எந்தப் பகுதிகளில்பார்த்தாலும் சரத் பொன்சேகாவின் அலையே அடிக்கின்றது. அனைத்து இனங்களையும் சார்ந்த கட்சிகள் ஜெனரலுடன் இணைந்துள்ளன. அவரது வெற்றி உறுதியாகியுள்ளது.

வடக்கு - கிழக்கில் முற்றாக சரத் பொன்சேகாவின் அலையே வீசுகின்றது. இந்த ஒற்றுமை எமக்கு மிக முக்கியம். அதனால் தான் நான் ஜெனரலுக்கு எனது ஆதரவை வழங்க முன்வந்துள்ளேன். - என்றார்.

# கிழக்கில் அத்துமீறிய குடியேற்றங்கள் நடக்கின்றன; மறுக்கும் ஆளுநர் விவாதத்துக்குத் தயாரா?

## பகிரங்கமாக அழைக்கிறார் அரியநேத்திரன் எம்.பி.

கொழும்பு, ஜன. 25

''கிழக்கு மாகாணத்தில் தமிழ், முஸ்லிம் மக்களின் காணிகளில் அத்துமீறிய குடியேற்றங்கள் இடம்பெறுகின்றன. அதற்கான ஆதாரங்கள் என்னிடம் உள்ளன. இவ்வாறான குடியேற்றங்கள் இடம்பெறவில்லை எனக் கூறும் கிழக்கு மாகாண ஆளுநரைப் பகிரங்க விவாதத்துக்கு வருமாறு சவால் விடுக்கின்றேன்.''

-இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் எம்.பி. அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் 'உதயனு'க்குத் தெரிவித்தவை வருமாறு:-

'கிழக்கு மாகாணத்தில் திட்டமிட்ட குடியேற்றங்கள் இடம்பெற்று வருகின்றன என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளமை முற்றுமுழுதாக உண்மைக்குப் புறம்பானது' -என்று கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் மொஹான் விஜேவிக்ரம தெரிவித்திருந்தார்.

இவரால் இவ்வாறான மீள் குடியேற்றங்கள் இடம்பெறவில்லை என நிரூபிக்க முடியுமா?

கடந்த மாதம் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இவ்வாறான அத்துமீறிய மீள்குடியேற்றங்கள் இடம்பெறுகின்றன என்று உறுதிப் படுத்தப்பட்டது. அத்துடன், இந்த கூட்டத்தில் இதனை தடுப்பதற் காக மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் அருமைநாயகம் தலைமையில் குழு ஒன்றும் அமைக்கப்பட்டது.

இந்த அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் கலந்து கொண்டார்.

அந்த கூட்டத்தில் இவ்வாறான குடியேற்றங்கள் இடம்பெறவில்லை என மறுத்திருக்கலாம் தானே? ஏன் இன்று அதாவது தேர்தல் சூழ்நிலையில் இவ்வாறான அத்து மீறிய குடியேற்றங்கள் இடம் பெறவில்லை என கூறுகிறார்?

எனவே, இவரின் கருத்தை நான் தேர்தல் பிரசாரமாகவே கருதுகிறேன்.

இவரால் இந்தக் குடியேற்றங்கள் இடம் பெறவில்லை என நிரூபிக்க முடியுமா? இந்த அத்துமீறிய குடியேற்றங்கள் இடம் பெறுகின்றன என என்னால் நிரூபிக்க முடியும். அதற்கான ஆதாரங்களும் என்னிடம் உள்ளன. - என்றார்.

(சி)

# யாழ். தேசிய கல்வியியற் கல்லூரிக்கு அனுமதி பெறும் ஆசிரிய மாணவர் விவரம்

யாழ்ப்பாணம், ஜன.25

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு 2010ஆம் ஆண்டுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள ஆசிரிய மாணவர்களின் பெயர் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இம் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் நிகழ்வு எதிர்வரும் 8ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெறவுள்ளதாக பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் அறிவித்துள்ளார்.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் தமது அனுமதிக் கடிதத்தை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரியில் நாளையும், நாளை மறுதினமும் அலுவலக நேரத்தின் போது பெற்றுக்கொள்ள முடியும் என்றும் வெளிமாவட்ட மாணவர்களுக்கான அனுமதிக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

புதிய ஆசிரிய மாணவர்களின் விவரம் வருமாறு:-

**விஞ்ஞானம் - ஆங்கில மொழி மூலம்**

வி.கோமகள் (நவாலி தெற்கு), எஸ்.அனுஷா (நவாலி வடக்கு), ந.சங்கீதா (மூளாய்), வி.விஜயகுமாரி (இளவாலை), நி.நித்தியா (யாழ்ப்பாணம்), எஸ்.மீரா (மட்டுவில் தெற்கு), ஆர்.மதிஒளி (பருத்தித்துறை), எஸ்.சுகன்ஜா (அத்தியடி), பி.கிருத்திகா (அச்சுவேலி), எம்.சுலக்ஷி (உரும்பிராய் தெற்கு), எஸ்.ராதிகா (நல்லூர்)-

**ஆரம்பப்பிரிவு**

எஸ்.ஆனந்தராஜா (ஆவரங்கால்), சி.வி.கிறிஸ்தோபர் (குருநகர்), எம்.ஜே.பி. கிறிஸ்தோபர் (யாழ்ப்பாணம்), எஸ்.டிலக்ஷா (நல்லூர்), எம்.ஜோசப்என்சன் (சுண்டிக்குழி), பி.கலைவாணி (கந்தரோடை), ஜே.கதிரமலைநாதன் (யாழ்ப்பாணம்), ரி.கிருத்திகா (உடுப்பிட்டி), ரி.மோகனதாஸ் (சுழிபுரம்), என்.பிருந்தா (புலோலி தென்மேற்கு), ரி.புஸ்பராஜ் (யாழ்ப்பாணம்), ஆர்.ரமணன் (அல்வாய் வடக்கு), எம்.ராசரட்ணம் (அச்சுவேலி தெற்கு), பி.ராதிகா (வேலணை மேற்கு), என்.ஜே.ஜே.றொபேட் (யாழ்ப்பாணம்), ஜே.சபேசன் (கைதடி), ஜி.சதாசிவம் (யாழ்ப்பாணம்), எஸ்.சதீஸ்வரன் (தெல்லிப்பழை), கே.சியாமளா (பருத்தித்துறை), பி.தர்சிகா (திருநெல்வேலி கிழக்கு), கே.தயாநிதி (ஆனைக்கோட்டை), பி.தினேஸ்குமார் (வேலணை).

**விசேட கல்வி**

எம்.மகாலக்ஷ்மி (சுன்னாகம்), எஸ்.செல்லத்துரை (பருத்தித்துறை), ஆர்.வினிதா (சுன்னாகம்), கே.குகப்பிரியா (நெடுந்தீவு), கே.ஐங்கரன் (கரவெட்டி மேற்கு), இ.சுவீற்றி (சண்டிலிப்பாய் மேற்கு), ரி.பமிலா (மல்லாகம்), கே.அஜந்தினி (வட்டுக்கோட்டை), கே.கமல் (பருத்தித்துறை), எஸ்.கஜானி (கைதடி), ரி.சுப்பிரமணியம் (அரியாலை), கே.புனிதா (பண்டத்தரிப்பு), என்.செந்தாளன் (கன்பொல்லை வீதி)-

**கணிதம் - ஆங்கில மொழி மூலம்**

எ.சர்மிளன் (சங்கானை), என்.நிசாந்தா (மீசாலை), எஸ்.செல்வகுமாரன் (சுன்னாகம்), எஸ்.லக்ஷனா (கொக்குவில்), ஜி.குகாநந்த் (சண்டிலிப்பாய்), எஸ்.ரதீசன் (கொக்குவில்), சீரஜன் (யாழ்ப்பாணம்), கே.சசிரேகா (சாவகச்சேரி), பி.மயூரி (பருத்தித்துறை), கே.சரண்ஜா (கரவெட்டி), எ.ஜெகநாதன் (மானிப்பாய்), வி.புவனேசன் (மல்லாகம்), ரி.தேவநாதன் (யாழ்ப்பாணம்), கே.பிரதீபன் (யாழ்ப்பாணம்), ரி.பாலச்சந்திரன் (மானிப்பாய்), எஸ்.கௌசியா (சுன்னாகம் தெற்கு), ஆர்.யுமேஸ் (சங்கானை), ஆர்.சுகந்தினி (சாவகச்சேரி), எஸ்.சுபாங்கி (இணுவில்), எம்.டி.டினேஸ் குமார் (வட்டுக்கோட்டை).

**விஞ்ஞானம் - தமிழ்மொழி மூலம்**

எம்.பத்மநாதன் (ஆனைப்பந்தி), கே.கௌசிகா (கொடிகாமம்), எ.சுபேசன் (கோண்டாவில்), எஸ்.வாகீஸ்வரன் (திருநெல்வேலி), எஸ்.துஸாந்தி (உரும்பிராய்), எஸ்.சிறிசாந் (மானிப்பாய் வடக்கு), எம்.கனகரத்தினம் (மீசாலை), ரி.அஜதா (நவாலி வடக்கு), என்.ரேகா (யாழ்ப்பாணம்), எஸ்.பாலதீபன் (வட்டுக்கோட்டை).

**நாடகமும் அரங்கியலும்**

கார்த்தீபன் (வல்வெட்டித்துறை), எம்.ஏ.ஐ.ராஜி (பண்டைத்தரிப்பு), சுவீற்றி (சண்டிலிப்பாய் மேற்கு), ரி.தியாகராஜ் (வட்டுக்கோட்டை), வி.யசோதா (நாகர்கோயில்), கே.அர்ஜினி (கரவெட்டி), ஜெயகுணம் (கரவெட்டி), ஜெயராஜ் (அளவெட்டி), நிரோசா (மூளாய் தெற்கு), வி.இமாஜினி (சண்டிலிப்பாய்), ஆர்.பானுஜா (கைதடி மேற்கு), ஆர்.பாலசுப்பிரமணியம் (கோப்பாய்), எம்.நிரோஜன் (கோப்பாய்), என்.நித்தியானந்தம் (சண்டிலிப்பாய்), என்.எஸ்.அழகையா (கரவெட்டி).

**கணிதம் - தமிழ் மொழி மூலம்**

ஜே.சங்கீதா (கல்வியங்காடு), என்.பி.தோமஸ் (அல்வாய் வடக்கு), எஸ்.சண்முகலிங்கம் (மீசாலை), கே.கஜந்தன் (கொடிகாமம்), இ.றொபின்சன் (உரும்பிராய்), கே.சீராளன் (யாழ்ப்பாணம்), எஸ்.செந்தூரன் (வட்டுக்கோட்டை), கே.துயந்தன் (ஊர்காவற்றுறை), பி.பரமநாதன் (வரணி), எஸ்.சகிலா (உடுப்பிட்டி), பி.விஜயசங்கர் (கோண்டாவில்), ஆர்.கேமச்சந்திரன் (சுன்னாகம்), எஸ்.சுந்தரலிங்கம் (அல்வாய்), எஸ்.பாலதீபன் (வட்டுக்கோட்டை), எஸ்.மணிமாறன் (இணுவில்), வி.கவீசன் (கோண்டாவில்), இ.எஸ். ஜெயப் பிரியங்கன் (யாழ்ப்பாணம்), கே.ருக்சிகா (திருநெல்வேலி), ஜெ.கவிதா (அளவெட்டி).

**கலை**

கே.பிரதீசன் (மானிப்பாய்), என்.கிருஸ்ணரூபன் (சுழிபுரம்), எல்.சுதன்ராஜ் (சுழிபுரம்), எஸ்.குமணநாத் (வேலணை), கே.பாலகுமார் (சுழிபுரம்), ஆர்.அபிநேஷ் (தொண்டைமானாறு), கியூ.ஜெயராஜன் (சுன்னாகம்), எஸ்.நிகாந்த் (புத்தூர்), எஸ்.சகாயநாதன் (சுண்டுக்குழி), ஜே.சௌந்தரசிங்கே (யாழ்ப்பாணம்), ரி.லிங்கேஸ்வரன் (சுழிபுரம்), எம்.மோகனராஜன் (வல்வெட்டித்துறை).

**நடனம்**

தர்மினி (மாதகல்), இ.ராஜ்குமார் (இருபாலை), ரி.பாலசுப்பிரமணியம் (சுழிபுரம்), எ.காங்கேயநாதன் (யாழ்ப்பாணம்), எஸ்.சயிலஜா (யாழ்ப்பாணம்), என்.பிரசாந்தினி (அரியாலை), எஸ்.வல்லிபுரம் (சுதுமலை வடக்கு), கே.சோதிராசா (மானிப்பாய்), என்.குணராஜா (மானிப்பாய்), ரி.சுப்பிரமணியம் (சாவகச்சேரி), என்.சிவஞானம் (சாவகச்சேரி), டபிள்யு. ஜான்சியா (அரியாலை), ஆர்.சுவேந்தினி (கரவெட்டி), என்.நிரோஜா (வரணி).

கடந்த வருடம் தெரிவுசெய்யப்பட்டு நாட்டுச்சூழல் காரணமாக பதிவுமேற்கொள்ளாது இவ்வாண்டிற்கு அனுமதிக்கப்படுவோர்.

எ.வேலுப்பிள்ளை - விசேட கல்வி, எ.அமிர்தலிங்கம் - விசேட கல்வி, எஸ்.சாலினி - ஆரம்பக்கல்வி, ரி.சுதர்சன் - ஆரம்பக்கல்வி, ரி.பத்மசிறி - ஆரம்பக்கல்வி. (ஒ-16)

## சந்திரிகாவின்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செல்லப்படுகின்றது எனவும், இது குடும்ப ஆதிக்கத்திற்கு வழி வகுத்துள்ளது எனவும் சந்திரிகா குமாரதுங்க குற்றம் சாட்டினார்.

ஜெனரல் சரத் பொன்சேகா தனது தேர்தல் விஞ்ஞாபனத்தைத் தம்மிடம் சமர்ப்பித்தார் எனவும், அதில் தெரிவிக்கப்பட்டுள்ள கொள்கைகளைத் தான் ஆதரிக்கிறார் எனவும் சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

இதற்கிடையில் ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கும், முன்னாள் ஜனாதிபதி குமாரதுங்கவுக்கும் இடையிலான சந்திப்புக் குறித்த செய்தியைசேகரிப்பதற்காகப் பத்திரிகையாளர்கள் சென்றுகொண்டிருந்த பஸ்ஸை இராணுவப் பொலிஸார் தடுத்து நிறுத்தியமையால் பரபரப்பு ஏற்பட்டது.

கிரிபத்கொட பகுதியில் குறிப்பிட்ட பஸ்ஸைத் தடுத்து நிறுத்திய இராணுவப் பொலிஸார், அதில் இருந்த பத்திரிகையாளர்களைச் சோதனையிட்டதுடன் அவர்களது பெயர் விவரங்களையும் சேகரித்தனர்.

பத்திரிகையாளர்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த போதிலும், உயர்மட்ட உத்தரவின் பேரிலேயே தாம் இதனைச் செய்கிறார்கள் எனத் தெரிவித்த அவர்கள், பின்னர் பத்திரிகையாளர்களைக் கடவத்தைப் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர்.

இந்தச் சம்பவம் குறித்து அறிந்ததும் உடனடியாகக் கடவத்தைப் பொலிஸ் நிலையத்திற்கு விரைந்த ஜெனரல் சரத் பொன்சேகா அங்கு பொலிஸாருடன் பேச்சுகளில் ஈடுபட்டார். பின்னர் பத்திரிகையாளர்களை மீண்டும் தம்முடன் அழைத்துச் சென்றார் - என்று தெரிவிக்கப்பட்டது.

## ஆட்சியைத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

ஜனாதிபதித் தேர்தலில் அரசு தோற்பது நிச்சயம். இதை நன்கு உணர்ந்த அரசு மக்களின் ஜனநாயகத் தீர்ப்புக்கு எதிராக ஆட்சியைத் தொடர்ந்தும் தக்கவைத்துக் கொள்ள சதி முயற்சி செய்கிறது.

கொழும்புக்கு ஆயுதக் குழுக்கள் அழைத்து வரப்பட்டுள்ளன. அதேபோல், யுத்தத்தில் பயன்படுத்தப்படும் கவச வாகனங்கள் பதினைந்தும் கொண்டுவரப்பட்டுள்ளன.

கொழும்பில் ஒருபோதும் வன்முறை இடம்பெறாது. அமைதியாக செயற்படுமாறு நாம் மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளோம். அப்படி இருக்கும்போது யுத்தத்தில் பயன்படுத்தும் வாகனங்கள் கொழும்புக்கு எதற்காகக் கொண்டுவரப்பட்டன?

அது மாத்திரமின்றி, அரச ஊடகமான 'ரூபவாஹினி' மற்றும் 'ஐ.ரி.என்' தொலைக்காட்சிகளில் வேலைசெய்யும் அரசுக்கு சார்பான ஊடகவியலாளர்களை வைத்துக்கொண்டு ஏனையவர்களை விடுமுறையில் அனுப்ப அரசு திட்டமிட்டுள்ளது.

அரசின் உத்தேச திட்டம் குறித்துப் பொலிஸார் மற்றும் முப்படையினர் போன்றவர்களிடமிருந்தும் பாதுகாப்புச் சபையில் உள்ள முக்கியஸ்தர்களிடமிருந்தும் எமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன. அவை அனைத்தும் நம்பகமான தகவல்கள் - என்றார் அவர். (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளைய தேர்தலில் மகத்தான வெற்றி தமக்கே என்கிறார் ஜனாதிபதி மஹிந்த

கொழும்பு, ஜன. 25

நாளைய தினம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமக்கு மகத்தான வெற்றி கிட்டும் என்பதில் ஐயமில்லை என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தமிழ் மற்றும் ஆங்கில ஞாயிறு பத்திரிகைகளின் ஊடகவியலாளர்களுக்கு அளித்த விசேட செவ்வியின் போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

தமது இரண்டாவது தடவை ஆட்சி யின் போது சமாதானத்தை நிலைநாட்டு வதற்கு அதிக அக்கறை காட்டப்படும். எந்த வொரு காரணத்திற்காகவும் நாட்டை பிளவு படுத்த அனுமதிக்க முடியாது. அனைத்து இன மக்களும் அச்சமின்றி சுபீட்சமாக வாழக் கூடிய ஓர் பின்னணி உருவாக்கப்படும் - என்று அவர் தெரிவித்தார்.

இதேவேளை அரச சாசன மாற்றங்கள் மிகவும் நிதானமான முறையில் மேற் கொள்ளப்பட வேண்டும். வெறும் எழுத்து மூலமாக அரச சாசனத்தில் திருத்தங்களை மேற்கொள்வதில் அர்த்தமில்லை. அனைத்து இன மக்களினதும் விருப்பு வெறுப்புக் களை அறிந்து அதற்கு ஏற்ற வகையிலான மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் பொறுப்பு மக்களிடமே உள்ளது . அனைத்து மக்களும் ஒன்றிணைந்து இப் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும். சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களிடையே நான் எவ்வித வேறுபாடுகளையும் காணவில்லை.

உறவினர்களுக்கு நான் சலுகைகள் வழங்குகின்றேன் எனத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்களில் எந்தவித உண்மையில்லை. நாடு முழுவதிலும் அதிக எண்ணிக்கையிலானோர் ஒரு வகையில் எனக்கு உறவினர்களாகவே இருக்கின்றனர் - எனக் குறிப்பிட்டார். இதேவேளை யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பிலான டப்ளின் விசாரணைகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டிய அவசியமில்லை - என்று ஜனாதிபதி கூறினார்.

இராணுவமும், துணை இராணுவக் குழுக்களும் யுத்தக் குற்றச் செயல்களில் ஈடுபட்டன என டப்ளின் விசாரணைக ளின் போது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் அமைப்பு யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்தால் அது குறித்து கவனம் செலுத்த முடியும்.

இலங்கை அரசின் நன்மதிப்பிற்கு களங்கம் ஏற்படுத்தும் நோக்கில் சில மேற்குலக நாடுகள் யுத்தக் குற்றச் செயல் குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருகின்றன - என்றார். (அ-சி)

## வடமாகாணத்துக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னும் இந்த இடமாற்றத்துக்கான காரணங்கள் எவையும் தெரிவிக்கப்படவில்லை எனவும் கூறப்படுகிறது.

ஏற்கனவே யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி, பங்களதேஷ்ஷுக்கு அனுப்பப்பட்டு அதற்குப் பதிலாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் நெருங்கிய அதிகாரி ஒருவர் அங்கு நியமிக்கப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்படும் அதேநேரம் வடமராட்சியின் கட்டளை அதிகாரியும் கொழும்புக்கு மாற்றப்பட்டுள்ளார் எனக் கூறப்படுகிறது. (அ-சி)

## தெல்லிப்பழை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்வு நிலையத்திற்கு அனுப்பப்பட்டு உரிய புனர்வாழ்வு வழங்கப்பட்ட நிலையில் நேற்று அவர்களின் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இந்த 20பேரில் 12ஆண்களும், 8 பெண்களும் அடங்குகின்றனர். இவர்களில் எட்டுப்பெண்களும் ஏற்கனவே திருமணமானவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் யாழ்.மாவட்டப்படைகளின் பதில் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த அத்துருசிங்க, 53ஆவது படையணியின் கட்டளைத்தளபதி மேஜர் என்.சி.ஆர்.சில்வா, கேணல் கலமல்பே மற்றும் படை அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (ஒ-16,86)

## வெளிநாடுகளுக்குச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களிடம் வாக்குப் பத்திரத்தை வழங்குவதற்கு முன் அவர்களது 'பாஸ் போட்டை' பெற்று அதன் பின்னரே வாக்களிக்க அனுமதிக்க வேண்டும் என்றும் ஆணையாளர் அறிவுறுத்தியுள்ளார்.

இது சம்பந்தமாக எல்லா உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும், வாக்குச் சாவடிக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கும் வாக்குச் சாவடியில் கடமை புரியும் அதிகாரிகளுக்கும் அறிவுறுத்துமாறு தெரிவித்தாட்சி அதிகாரிகள், உதவி ஆணையாளர்களுக்கு அவர் பணிப்புரை விடுத்துள்ளார்.

இதேவேளை, இந்த மோசடி குறித்து ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தமது கட்சியின் எம்.பிக்கள், அமைப்பாளர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றப் பிரதிநிதிகள் ஆகியோருக்கு அறிவுறுத்தல் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளார்.

தமது கட்சியின் வாக்குச் சாவடி முகவராகச் செயற்படவுள்ளவர்களுக்கும் இது குறித்து அறிவுறுத்தி, கள்ள வாக்குப் போடும் திட்டத்தைத் தடுக்க நடவடிக்கைகளை எடுக்குமாறும் அத்தநாயக்க கேட்டுக்கொண்டுள்ளார். (ஒ)

# அறுபது வாக்களிப்பு நிலையங்களுக்கு அனுராதபுரத்தில் விசேட பாதுகாப்பு

கொழும்பு, ஜன. 25

அனுராதபுரம் மாவட்டத்தில் இதற்கு முக்கிய தேர்தல்களின் போது இடம் பெற்ற சம்பவங்களைக் கருத்தில் கொண்டு இனம் காணப்பட்ட 60 இடங்களுக்கு விசேட பாதுகாப்புகள் வழங்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அந்தந்த பகுதி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளின் வேண்டுகோளுக்கு இனங்க பொலிஸ் தேர்தல் நடவடிக்கை பணியகம் இந்த பாதுகாப்பை வழங்கியுள்ளது என சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜெயந்த கமகே குறிப்பிட்டார்.

இதன் அடிப்படையில் இந்த வாக்களிப்பு நிலையங்களுக்கு பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரையும் மூன்று இராணுவத்தினரையும் சேவையில் ஈடுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார்.

இதேவேளை, தேர்தலை முன்னிட்டு மாவட்டம் முழுவதும் நடைபெறுகின்ற பொலிஸ் ரோந்து சேவைகளில் பொலிஸ் உத்தியோகத்தகர்களுடன் மேலதிகமாக இரண்டு இராணுவத்தினர் சேவையில் ஈடுபடுத் தப்படுவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸ் தேர்தல் பணியகத்தின் ஆலோசனைக்கு அமைய இந்த வேலைத் திட்டம் நாட்டின் சகல பகுதிகளிலும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## தேர்தல் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடுமையான நடைமுறைகளை அறிவித்துள்ளார்.

### மோசடியெனில் முடிவுகள் தாமதப்படும்

அதேவேளை ஏதேனுமொரு தேர்தல் தொகுதியில் வாக்கு மோசடிகள் இடம் பெற்றால் அந்த வாக்குச் சாவடியில் தேர்தல் முடிவுகள் இடைநிறுத்தப்படும் என்று தேர்தல் ஆணை யாளர் தயானந்த திசாநாயக்க குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு ஒரு வாக்குச் சாவடியின் தேர்தல் முடிவுகள் இடைநிறுத்தப்பட்டால் குறித்த தொகுதி மற்றும் மாவட்டத்தின் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படுவதும் தாமதப்படுத்தப்படும்.

இதேவேளை வாக்குச் சாவடிகள் அமைந்திருக்கும் இடத்தில் இருந்து 500 மீற்றர் தூரத்திற்குள் ஆதரவாளர்கள் கூடி நிற்பது தடைசெய்யப்பட்டுள்ளது. இந்த பகுதி சிரேஷ்ட தேர்தல் அதிகாரிகளின் கண்காணிப்பின் கீழ் பொலிஸாரினால் நிர்வகிக்கப்படும். அத்துடன் வாக்களிப்பதற்கன்றி அரசியல்வாதிகளுக்கு தேவையற்ற வகையில் வாக்குச் சாவடிகளுக்குள் பிரவேசிக்க இடமளிக்கப்பட மாட்டாது.

அதேபோல் வாக்களிப்பு குறித்த செய்திகளை சேகரிக்கும் ஊடகவியலாளர்கள் வாக்குச் சாவடிகளுக்குள் பிரவேசிக்கவும் தடைவிதிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

(அ-சி)

## யாழ். தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

34நிலையங்களும் பருத்தித்துறையில் 8நிலையங்களும் அமையும். வடமராட்சி கிழக்கு இடம்பெயர்ந்து விடுவிக்கப்பட்ட பிரிவுக்கான வாக்களிப்பு நிலையம் குடத்தனையில் அமைக்கப்படவுள்ளது.

* கிளிநொச்சியில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 2பிரிவுகளில் மீள்குடியேற்றம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கிளிநொச்சியில் 67நிலையங்களும் பூநகரியில் 19நிலையங்களும் 6கொத்தணி நிலையங்களும் அமையும். கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயம் பொது வாக்களிப்பு நிலையமாக இயங்கும்.

* யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்தவர்களில் 15ஆயிரத்து 597பேர் வெளிமாவட்டங்களில் உள்ளனர். அவர்களில் கொழும்பில் 59பேர் வாக்களிக்க விண்ணப்பித்துள்ளனர். இடம்பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் தெல்லிப்பழை புனர்வாழ்வு நிலையத்தில் 21வாக்காளர்களும் கைதடி பனை அபிவிருத்திச் சபை நலன்புரி நிலையத்தில் உள்ள வாக்காளர்களும் வாக்களிக்க வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

* 24கணக்கெடுப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கணக்கெடுப்பு நிலையங்களில் ஒவ்வொரு கட்சியைச் சேர்ந்த தலா 5பேர் முகவர்களாக செயற்படுவர்.

* வாக்காளர்கள் தம்மை அத்தாட்சிப்படுத்தக்கூடிய ஆவணங்களை தம்முடன் எடுத்துச் சென்று வாக்களிக்க முடியும். ஏற்கனவே அறிவிக்கப்பட்ட ஆவணங்கள் இல்லாதவர்களுக்கு 13,483 விசேட அட்டைகள் கிராம அலுவலர்களின் அத்தாட்சிப்படுத்தலுடன் பிரதேச செயலகங்கள் ஊடாக வழங்கப்பட்டுள்ளன.

* தபால் மூல வாக்குகளான 5,795இல் இதுவரை 4,498 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. ஏனையவை நாளை 4மணிக்கு முன்னதாக வந்து சேரலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. சகல வாக்குச் சீட்டுக்களும் வந்ததும் 4மணிக்கு எண்ணும் பணிகள் ஆரம்பமாகும்.

* தேர்தல் கடமைகளுக்குச் செல்வதற்கென 196பஸ்களும் இடம்பெயர்ந்த வாக்காளர்களுக்கு 55பஸ்களும் தேர்தல் கண்காணிப்பாளர்களுக்கென 68வாகனங்களும் உதவி தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கென 33வாகனங்களும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

* ஒவ்வொரு வாக்களிப்பு நிலையங்களில் இருந்தும் வாக்குப் பெட்டிகள் எடுத்துவர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

* நெடுந்தீவு, கிளிநொச்சிப் பகுதிகளில் இருந்து வாக்குப்பெட்டிகள் ஹெலிகொப்டர் மூலம் எடுத்துவரப்படும்.

(அ-ஒ-1-111)

London A/L and O/L Examinations in Jaffna

Vacancies for Part Time Teachers

Gateway, Sri lanka's reputed institution for Academic Excellence at London A/L and O/L examinations intend conducting classes (after school hours and weekends) for those who wish to obtain these internationally recognized qualifications in addition to Sri Lanka A/L and O/L qualifications.

We require teachers with appropriate qualifications and experience (with teaching experience at Senior Secondary or university Level)

London A/L
- Physics
- Chemistry
- Biology
- Mathematics

London (IGCSE) O/L
- Physics
- Chemistry
- Biology
- Mathematics
- English Language
- ICT

Classes & Examinations would be conducted at the Gateway Jaffna Branch since Gateway is an Approved Examination Centre.

Classes commence in January 2010 for June 2011 examinations

*If you fulfill the above mentioned requirements, have a strong command of the English Language and wish to further your career with us, Apply with your CV and contact details.*

HR Manager,
6, Rodney Street, Colombo 08.
Tel: 011-2699327 Fax: 011-2681108
E-mail: hrm@gatewayworldwide.com

GATEWAY Institute of Advanced Studies

361, Kasthuriar Road, Jaffna Tel: 021-2229944

சமையலாளர் தேவை

யாழ்.நகரில் இயங்கும் பிரபல்யமான ஹோட்டல் ஒன்றிற்கு இலங்கை, இந்திய உணவு வகைகள் தயாரிக்க கூடிய சமையலாளர் தேவை.

தொடர்புகளுக்கு: 0773068122

சொகுசு பஸ் சேவை

AC Bus இற்கான ஆசனப்பதிவுகளை இங்கே மேற்கொள்ளலாம் கட்டணம்-1200/=
Normal Bus இற்கான கட்டணம்-700/=
இரவு, பகல் சேவை நடைபெறும்.
தொடர்புகளுக்கு:
Ramcom,
Hotline:0772230954, 0212228428

சுடர் ஒளி
THE SUDAROLI

(ஜன. 24 - 30)



இப்போது விற்பனையில்

- ஜனநாயகத் தேர்தல் நடக்குமா?
- படையினருக்கு வந்த சோதனை
- புதிய ஜனாதிபதி யார்?
- ஜனாதிபதித் தேர்தலும் தமிழர் தரப்பும்
- உயிர் வலிக்கும் கணங்கள்....
- வேலுப்பிள்ளையின் இறுதி நாள்கள் (தொடர் கட்டுரை)
- மன்மோகன் அரசைப் பிடித்த கடைசிச் சாபமும் நீங்கியது

* மற்றும் வழமையான பல்சுவை அம்சங்களுடன்

உதயன் முகவர்களிடம் கேட்டு வாங்குங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.01.2010 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.